விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 26 வியாழக்கிழமை (12.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 297

## உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்காக

# வடக்கில் நாளை பூரண கதவடைப்பு



(யாழ்ப்பாணம்) தமிழ் அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலையை வலியுறுத்தியும், மீளவும் அவர்களது வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றுக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் நாளை 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கில் பூரண கதவடைப்புக்கு (ஹர்த்தாலுக்கு) பொது அமைப்புகளால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (24-ம் பக்கம் பார்க்க...)

## மாணவர் ஒன்றியம் பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு – கிழக்கு மாகாணம் தழுவிய பூரண ஹர்த்தாலுக்காக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமது பூரண ஆதரவை தெரிவித்துள்ளது.

கடந்த 18 நாட்களாக அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் மூன்று தமிழ் அரசியல் கைதிகளின் நியாய 23☛

## வர்த்தக அமைப்புகள் பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நாளை வெள்ளிக்கிழமை வட மாகாணத்தில் நடைபெறவுள்ள பூரண கதவடைப்புக்கு கிளிநொச்சி பொதுச் சந்தையைச் சேர்ந்த சகல வர்த்தக நிலையங்களை மூடி பூரண ஆதரவை வழங்குவதாக கிளிநொச்சி வர்த்தக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (மு)

### கணவன் விபத்தில் உயிரிழப்பு

## மனைவி ம.உ ஆணைக்குழுவில் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கூலி வேலைக்கு சென்ற போது உழவு இயந்திரத்தால் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கணவன் மீது விபத்தை ஏற்படுத்தியவர் மீது பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்ட மனைவியிடம் கடுமையான முறையில் நடந்து கொண்ட பொலிஸ் அதிகாரி ஒருவர், தமக்கு எதிரான முறைப்பாட்டை மீள பெறுமாறும் கூறி அப் 24☛

## சம்பந்தன் தன் பலத்தை உணராவிடின் ஆபத்தே!

### பிரபா கணேசன் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், அவரது பலத்தை உணராமல் இருப்பது, தமிழ் மக்களுக்கு ஆபத்தாகவே முடியும் என, முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும், உண்ணாவிரதக் கைதிகள் நிலைமைக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நல்லாட்சியின் தமிழ் அமைச்சர்களுமே காரணம் எனவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் 23☛

## மூவாயிரம் ஆசிரியர்களுக்கு இன்று இடமாற்றம்

(கொழும்பு)

ஆசிரியர்களை இடமாற்றுவதற்கான தேசிய கொள்கையின் கீழ், பத்து வருடங்கள் தொடர்ச்சியாக ஒரே தேசிய பாடசாலையில் பணியாற்றிய ஆசிரியர்கள் இன்று தொடக்கம் இடமாற்றப்படவுள்ளனர்.

இதன்படி, சுமார் பன்னிரண்டாயிரம் ஆசிரியர்கள் இட 23☛

## ஐ.நா விசேட அறிக்கையாளரின் பரிந்துரையை பின்பற்றத் தேவையில்லை

### அரசாங்கம் விதண்டாவாதம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளரின் ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை அரசாங்கம் பின்பற்ற வேண்டிய கடப்பாடில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

உண்மைத்தன்மை, நீதி, இழப்பீடு ஆகியவற்றை ஊக்குவித்தல் மற்றும் மீள நிகழாமைக்கு உத்தரவாதமளித்தல் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளரின் பயணம் தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் வெளிவிவகார அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கங்கள், குறித்த விடயங்கள் தொடர்பில் அறிவுரைகளையும், கருத்துக்களையும் பெறுவதற்காக இத்தகைய விசேட அறிக்கையாளர்களுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தன.எனினும், 23☛

## வடக்கில் காணி விடுவிப்பு விரைவாக நடவடிக்கை

### அரசு அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் விரைவாக கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இதுவரை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த காணிகளில் 62 சதவீதமானவை அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டிருப்பதாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

இராணுவத்தின் கட்டுப் 23☛

## சட்டமா அதிபர் திணைக்களமே விடுதலை தாமதத்துக்கு காரணம்

(கொழும்பு)

சிறையில் உள்ள தமிழ் கைதிகள் விரைவாக விடுதலை செய்யப்படவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டிய கைதிகள் தவிர்ந்த ஏனையோரை உடனடியாக விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஆனால் அங்கு நிலவும் பணிகளில் இடம்பெற்றுவரும் தாமதம் காரணமாகவே இவர்களின் விடுதலையில் தாமதம் நிலவுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ் சிறைக்கைதிகள் தொடர்பாக அரசாங்க தகவல் 23☛

## விசாரணைக்கு அழைக்கப்பட்ட அமைச்சர்கள் மலிக், கபீர்



(கொழும்பு)

அமைச்சர்களான மலிக் சமரவிக்கிரம மற்றும் கபீர் ஹாசிம் ஆகியோர் மத்திய வங்கி பிணை முறி தொடர்பில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

(விரிவான செய்தி உள்ளே)

## ரயில் சாரதிகள் திடீர் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

ரயில் சாரதிகள் திடீர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதனால் புகையிரத சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரயில்வே உதவியாளர்கள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏற்பட்ட பிரச்சினைகளை முன்வைத்தே இவர்கள் நேற்று மாலை தொடக்கம் திடீர் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

பாராட்டி
வாழ்த்துகின்றோம்



2017ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்ற

**செல்வழகன் செந்தமிழ்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாடசாலைச் சமூகம்
கிளி/கண்ணகை அம்மன் வித்தியாலயம்

(C-9972)


## அச்சுவேலியில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலி பகுதியில் மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானதில், இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். நாவற்குழி பகுதியை சேர்ந்த சஜீவன் (வயது 20) எனும் இளைஞரே உயிரிழந்தவராவார்.

அச்சுவேலி தெற்கு, நெருப்புமூட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்.- பருத்தித்துறை பிரதான வீதியில் வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்ற போது, மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நடப்பட்டு இருந்த மின்கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (மு)


## பகிரங்க ஏல விற்பனை

எமது வித்தியாலயத்தில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விடப்படவுள்ளது.

நீளமேசை - 10, நீளவாங்கு - 09, இரும்பு வாளி - 01, பிளாஸ்ரிக் கதிரை - 04, றோனியோ மெசின் - 01, Mammotty - 01, Scaner - 02, ஆசிரியர் மேசை - 03.

இடம் : வித்தியாலய முன்றல்
காலம் : 2017.10.26 வியாழக்கிழமை மு.ப 10.00 மணி

• பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் பாடசாலை நேரத்தில் பார்வையிடலாம்.
• பொருட்களை ஏலத்தில் எடுப்பவர்கள் உடன் பணம் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும்.

அதிபர், யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**கத்தரின் நமலேஸ்வரி**

மண்மகிழ: 18.12.1930 - கண்நெகிழ: 13.09.2017

அமரர் திருமதி கத்தரின் நமலேஸ்வரி (நமலம்) சூசைப்பிள்ளை அவர்களின் 31 ஆம் நாளை நினைவு கொள்கின்றோம். இவர் இவ்வுலகில் வாழும் வரை வாழ்க்கை துணைவியாகவும் ஈன்றெடுத்த பிள்ளைகளுக்கு அன்புத் தாயாகவும் இறைவாழ்வோடு ஒன்றித்தவராகவும் என்றும் இறைவன் மீது நம்பிக்கை தளராத மனத்தோடும் இறைவனுக்கு ஊழியம் புரிபவர்கள் மீது அன்பு மிகுந்த ஓர் தாயாகவும் சூராவத்தை கிராமத்தின் மூத்த மூதாதையோரில் ஒருவராக எங்களுடன் வாழ்ந்து காட்டியவர். எங்கள் தாயாரின் பிரிவில் எம்மோடு தோள் கொடுத்தும் அன்பும் ஆறுதலும் தந்துதவியவர்களுக்கும் தொலைபேசி மூலம் தங்களின் இரங்கலை எம்மோடு பகிர்ந்து கொண்ட உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு 12.10.2017 இன்று இவரின் ஆன்மா சாந்தியடைய சூராவத்தை திரேசம்மா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அத்துடன் எங்கள் இல்லத்தில் 13.10.2017 அன்று நடைபெறும் மதிய உணவிலும் பங்குகொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

"நமலவாசா"
சூராவத்தை,
சுன்னாகம் (997)

தொடர்பு: ஜெயா (House) 0212242567,
தவா - 0774424335,
மகன் - ஜோசப் தவராசா



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கரவெட்டி மத்தொனியை சேர்ந்த

**திரு. அழகேஸ்வரசாமி ஸ்ரீகரன்**

(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

அவர்கள் யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர் : சி.புஸ்பலிங்கம்
வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்.
(ஓய்வுநிலை)

(C-9969)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**தாமரைச்செல்வன் தாமீரன்**



தாமரைச்செல்வன் சுபாசினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் தா.தாமீரன், 2017ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யா/ கரணவாய் தாமோதர வித்தியாலயம் ஊடாக தோற்றி 173 புள்ளிகளைப் பெற்று சித்தி யெய்தியதைப் பாராட்டுவதுடன் மேன்மேலும் கல்வியில் மேலோங்கி வாழ வாழ்த்துவதுடன் எல்லாம் வல்ல ஆண்டவன் அருள் பாலிக்க இறைஞ்சுகின்றோம்

*வாழ்த்துவோர்:*
சின்னராசா (அப்பப்பா), புனிதவதி (அப்பம்மா), வசந்த் (மாமா),
சினோத், சிந்துஜன் (சித்தப்பாமார்),
சிந்துகா, சிந்தூரா, சித்தாரா, செந்தூரா (அத்தைமார்)
நவிண்டில், "சரஸ்வதி அகம்"

(996)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 30 - 08 - 1983
விண்ணில் 05 - 10 - 2015

அமரர்
**சிவகுரு மணிமாறன்**
(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

ஆண்டிரண்டு ஆனதுவோ ஆனதுயர் தீரவில்லை
பூண்டவெம் அன்பு பொலிவிழந்து போகவில்லை
நீண்டவுன் மறைவு நினைவிழந்து போகவில்லை
மீண்டுமுன் வரவுக்காய் மாயவனை வேண்டுகின்றோம்

நிகழ்வு இன்று (12.10.2017) வியாழக்கிழமை

கற்கோவளம்,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்
077 841 9945

(சி—9968)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருநெல்வேலி முருகன் வீதியைச் சேர்ந்த சிறிமோகனதாஸ் சுஜிதா தம்பதிகளின் செல்வப் புதல்வி

செல்வி
**சிறிமோகனதாஸ் குகனேகா**



2017 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் 172 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றமைக்காக பாராட்டி அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று பார் போற்ற நீடூழி வாழ வேண்டுமென திருநெல்வேலி பேச்சியம்மனை பிரார்த்திக்கின்றோம்.

பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

*வாழ்த்துவோர்:*
மாமா, அத்தை,
மச்சான்மார், மச்சாள்

(1000)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக
# ஆளுநர் அலுவலகம் முன் நாளை
# அனைவரும் அணிதிரள்வோம்
## த.தே.ம.மு.செயலாளர் கஜேந்திரன் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வித்தியா படுகொலை வழக்கை கொலை அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் யாழ்.மேல் நீதிமன்றில் விசாரணை செய்ய முடியும் என்றால் அரசியல் கைதிகளுடைய வழக்குகளை ஏன் வவுனியா நீதிமன்றில் விசாரணை செய்ய முடியாது? எனக் கேள்வியெழுப்பியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் நாளை 13 ஆம் திகதி நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அன்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக அனைத்துத் தரப்பினரும் ஒன்று கூடுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.




யாழ். ஊடக அமையத்தில் நேற்று நண்பகல் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளான ம.சுலக்சன், க.தர்சன், இ.திருவருள் ஆகியோரின் வழக்குகள் வவுனியா நீதிமன்றிலிருந்து அநுராதபுரம் நீதிமன்றுக்கு உரிய காரணங்களின்றி மாற்றப்பட்டுள்ளன.

இதனால் அரசியல் கைதிகளும் அவர்களது குடும்பத்தினரும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இந்த வழக்கு விசாரணைகளை மறுபடியும் வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றக்கோரி கடந்த 16 நாட்களாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு உண்ணாவிரதம் இருப்பவர்களின் உடல் நிலை மிக மோசமான நிலைக்கு சென்றுள்ளன. கைதிகளின் உடல் நிலை ஆபத்தான நிலைக்கு சென்ற பின்னரும் கூட மனிதநேயமற்ற முறையில் சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழர்கள் தானே உயிரிழந்து போகட்டும் என்ற நிலையில் தான் அவர்கள் இருப்பதாக தோன்றுகின்றது. முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச உண்ணாவிரதம் இருந்தபோது அவரது கோரிக்கைகள் ஏதோ ஒரு வகையில் நிறைவேற்றப்பட்டு உண்ணாவிரதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

ஆனால் குற்றங்கள் எதுவுமே செய்யாத அல்லது தமது மக்களுக்காக சிலவற்றை செய்த இந்த அப்பாவிகளுடைய கோரிக்கைகளை இந்த அரசாங்கம் கண்டும் காணாதது போல் இருந்து வருகின்றது. உண்ணாவிரதம் இருக்கின்ற அரசியல் கைதிகளுடைய குடும்பங்களும் மிக மோசமான நிலையில் மனதளவில் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

அவர்களது பிள்ளைகள் சிறைகளில் உணவு உண்ணாமல் இருக்க அவர்களது தாய்மார்களும் உறவுகளும் உணவை தவிர்த்தே வருகின்றனர். இதனால் அவர்களுடைய குடும்பங்களும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றன.

சாட்சிகளுக்கு பூதுகாப்பு அச்சுறுத்தல் என கூறுகின்றார்கள். ஆனால் யுத்தம் முடிந்துவிட்டது. பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என இதே அரசாங்கம் தான் பிரசாரம் செய்தும் வருகின்றது.

ஏன் பாதுகாப்பு அச்சுறுத்தல், யாரால் பாதுகாப்பு அச்சுறுத்தல் என்பதனை சட்டமா அதிபர் வெளிப்படுத்த வேண்டும். வித்தியா கொலை வழக்கின் போது விசாரணையில் ஈடுபட்ட நீதிபதி இளஞ்செழியன் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் அவர் கொழும்புக்கு செல்லவில்லை. வழக்கும் வேறு இடங்களுக்கு மாற்றப்படவில்லை. அதேபோல் இந்த கைதிகள் விடயத்தில் ஏன் செய்ய முடியாது. இலங்கையின் நீதிமன்றங்கள் மீது எமக்கு நம்பிக்கை இல்லை என்றாலும் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணை மீளவும் வவுனியா நீதிமன்றில் நடைபெற வேண்டும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு அச்சுறுத்தல் என கூறி அவர் செல்லும் இடங்களுக்கு எல்லாம் பாதுகாப்பு வழங்க முடியும் என்றால் அரசியல் கைதிகளின் வழக்கின் சாட்சியாளர்களுக்கு ஏன் பாதுகாப்பு வழங்க முடியாது?

அரசியல் கைதிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்ற வெறியோடு தான் சட்டமா அதிபர் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது. இதற்காகத்தான் அவர்களது வழக்கு விசாரணைகளை அநுராதபுரம் நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் மாற்றியுள்ளது. இவர்களின் நியாயமான கோரிக்கை தொடர்பில் ஆக்கபூர்வமான முடிவெடுத்து அவர்களது வழக்குகளை உடனடியாக வவுனியா நீதிமன்றுக்கு மீண்டும் மாற்றுமாறும் அது தொடர்பான அறிவித்தலை அவ் அரசியல் கைதிகள் மூவருக்கும் உடனடியாக அறிவிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மேலும் அனைத்து அரசியல் கைதிகள் தொடர்பாகவும் அரசு அரசியல் தீர்மானம் எடுத்து நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறும் கோரிக்கை விடுக்கின்றோம். நாளை மறுதினம் 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் மூன்று தினங்களுக்குள் அரசியல் கைதிகளது கோரிக்கைகள் தொடர்பில் நியாயமான தீர்வொன்றை பெற்றுத்தர வேண்டும். அவ்வாறு அரசியல் கைதிகளுடைய பிரச்சினைகளுக்கு தீர்வை காணாமல் ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு வர முடியாது.

நாளை 13 ஆம் திகதி வடக்கு மாகாணம் தழுவிய ஹர்த்தால் நடைபெறவுள்ளது. அதற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு தர வேண்டும். அன்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முற்றுகையிடப்படவுள்ளதால் அனைவரும் ஆளுநர் அலுவலகம் முன்பாக ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆகவே ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகை தருவதற்கு முன்னர் அரசியல் கைதிகள் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை தர வேண்டும். அவ்வாறு தீர்வை முன்வைக்காமல் ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகை தந்தால் அவருக்கு எதிராக போராடுவோம். அரசியல் கைதிகளின் பிரச்சினை அவர்களுடைய குடும்ப பிரச்சனை அல்ல. தமிழ் மக்களுடைய விடிவுக்காக போராடியதாலேயே அவர்கள் சிறையில் உள்ளார்கள். எனவே இதனை உணர்ந்து ஒவ்வொரு தமிழ் மகனும் போராட முன்வர வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (இ-4)

## நிரந்தர நியமனம் வழங்கக்கோரி சுகாதார தொண்டர்கள் போராட்டம்




வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களின் நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி நேற்று வடமாகாண ஆளுநர் அலுவலக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 1994ஆம் ஆண்டு தொடக்கம்இன்றுவரை எதுவித வேதனம் இன்றி தொண்டர்கள் அடிப்படையில் கடமையாற்றி வருகிறோம். எமக்கான நிரந்தர நியமனத்தை கோரி கடந்த மே மாதத்தில் இருந்து 118 நாட்கள் தொடர் போராட்டத்தை மேற்கொண்டிருந்தோம்.

போராட்டத்திற்கு பின்னரான காலங்களில் எமது விடயம் தொடர்பில் ஆட்சியாளர்களால் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய வடமாகாண சபையை முற்றுமுழுதாக நம்பி எமது போராட்டத்தை கைவிட்டிருந்தோம்.

ஆனால் தற்போது சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றிவரும் எம்மை கவனத்தில் எடுக்காமல் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக டெங்கு கட்டுப்பாடு உதவியாளர் என்ற பதவி நிலைக்குரியவர்கள் உள்வாங்கப்பட்டு தற்போது அவர்களுக்கான பயிற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

உண்மையான சுகாதாரத் தொண்டர்களை இந்த நியமனத்தில் சேர்ப்பதற்கு யாரும் முன்வரவில்லை.

கடந்த ஆட்சியாளர்கள் விட்ட தவறை இன்று ஆட்சியில் உள்ளவர்களும் செய்கிறார்கள். எமது சேவைக்காலத்தை கருத்தில் கொண்டு எமக்கு நிரந்த நியமனம் வழங்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (இ-9-60)

## ஷலில முணசிங்கவை பதவி நீக்க உத்தரவு

(கொழும்பு)

லிற்றோ ஹாஸ் நிறுவனத்தின் தலைவர் ஷலில முணசிங்கவை உடனடியாக அந்த பதவியில் இருந்து நீக்குமாறு, அரசாங்க தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

நிதி மோசடி விவகாரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள அவருக்கு, குறித்த நிறுவனத்திலுள்ள அனைத்து அதிகாரங்களையும் இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு, அந்த அமைச்சின் செயலாளர் ரவீந்திர ஹேவாவிதாரண, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹேமக அமரசூரியவுக்கு அறிவித்துள்ளார்.

லிற்றோ ஹாஸ் நிறுவனம் அரசாங்க தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த வெற்றிடத்திற்கு பதில் தலைவர் ஒருவரை நியமிக்குமாறும் ரவீந்திர ஹேவாவிதாரண அறிவுறுத்தியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘ஜீனியஸ்’ மெஸ்சி மஜிக் ஹட்ரிக்

# உலகக் கிண்ண களத்தில் ஆர்ஜென்ரீனா

லியோனல் மெஸ்ஸியின் நம்பமுடியாத, அதிசயிக்கத்தக்க ஹட்ரிக் சாதனையுடன் ஈக்வடோர் அணிக்கு எதிரான தகுதிச் சுற்று ஆட்டத்தில் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று ஆர்ஜென்ரீனா உலகக் கிண்ண தொடருக்கு நேரடியாகத் த்குதி பெற்றது.

பிரேசில், உருகுவே, கொலம்பியா அணிகளுடன் 6ஆம் இடத்திலிருந்து நேரடியாக உலகக் கிண்ணத்துக்கு ஆர்ஜென்ரீனாவை அழைத்துச் சென்றார் மெஸ்ஸி.

குவிட்டோவில் ஈக்வடோரை வெற்றி பெற்றால்தான் நேரடி தகுதி சாத்தியம் என்ற நெருக்கடியில் களமிறங்கியது ஆர்ஜென்ரீனா. நிச்சயம் மெஸ்ஸிக்கு கூடுதல் பதற்றமே. காரணம் தகுதி பெறாமல் போகும் நிலை ஏற்பட்டால் அத்தனை விமர்சனங்களும் அவர் மேல் விழுந்திருக்கும்.

ஆனால் அங்குதான் சாதாரண வீரர்களுக்கும் ஜீனியஸ்களுக்கும் உள்ள வேறுபாடு உள்ளது, தேவையான தருணத்தில் தன் ஆட்டத்தை பலமடங்கு உயர்த்தும் திறன்ம ஜீனியஸ்களின் தனித்துவம், அதைத்தான் மெஸ்ஸி நிரூபித்தார். 3 கோல்களுமே திகைக்க வைக்கும் திறமை கோல்கள். 3 கோல்களிலுமே குறைந்தது 3-4 ஈக்வடோர் வீரர்கள் அவரை முறியடிக்க புடைசூழ்ந்தனர் அதனையும் மீறி புலிபோல் பாய்ந்தார், புலிபோல் அவரது கண்கள் தன் இரையான கோலைத் தவிர வேறு எதிலும் இல்லை. இந்த ஆட்டத்தில் இவருக்கும் சக வீரர் டி மரியாவுக்கும் இடையே டெலிபதியோ என்று வியக்கும் அளவுக்கு புரிதல் கூட்டணி அமைந்தது.

இதில் ஆட்டம் தொடங்க விசில் அடிக்கப்பட்டவுடன் விசில் முடிவதற்குள் கோலோ என்று வியக்கும்வண்ணம்ஈக்வடோர்40ஆவது விநாடியில் கோலை அடித்து ஆர்ஜென்ரீனாவுக்கு அதிர்ச்சியளித்தது. கிக் ஆஃபிலிருந்து நேரடியாக கோல்!! ஈக்வடோரின் ஆர்டோனேசும், ரொமாரியோ இபராவும் வன் டு வன் என்று மாறி மாறி தலையால் பந்தை அடித்து கோல் அருகே கொண்டு சென்றனர். பிறகு சற்றும் எதிர்பாராமல், ஆர்ஜென்ரீனா தடுப்பாட்ட வீரர்கள் சுதாகரிப்பதற்குள் ஈக்வடோர் வீரர் ரொமாரியோ இபரா இடதுகாலால் உதைத்த உதையில் பந்து ஆர்ஜென்ரீனா கோல் காப்பாளர் ரொமீரோவைத் தாண்டி கோலுக்குள் சென்றது ஈக்வடோர் 1-0 என முன்னிலை பெற்றது. இந்தக் கோலுக்குப் பிறகு ஒரு தேசத்தின் சுமையையும் கனவையும் தன் மேலே சுமத்திக் கொண்டு, சர்வதேச கால்பந்தில் மிகவும் நெருக்கடியான தருணத்தில் அதி அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்திய தனிநபர் சாதனை மெஸ்ஸியுடையது என்றால் மிகையாகாது.

**மெஸ்ஸியின் அற்புதத்திற்காகக் காத்திருந்த 3 கணங்கள்!**

ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் பாஸ் ஒன்று மெஸ்ஸியிடம் வர அதனை மிக அழகாக தனக்கு இடது புறத்தில் முன்னால் இருந்த டி மரியாவிடம் துல்லியமாக பாஸ்செய்து விட்டு தன்னை விடுவித்துக் கொள்வது போல் விடுவித்துக் கொண்டு மெஸ்ஸி கோல் அருகில் டி மரியாவுக்கு வலது புறம் வந்தார். டி மரியா மெஸ்ஸிக்கு துல்லியமான ஒரு பாஸைச் செய்ய ஆபத்தை உணர்ந்த ஈக்வடோர் கோல்காப்பாளர் பேங்குயெரா முன்னேறி வர மெஸ்ஸியின் பாதம் பந்தை கோலுக்குள் தள்ளியது. கொண்டாட்டம் தொடங்கியது. பந்தை நிறுத்தி அதை டி மரியாவுக்கு அடித்த அழகு அதிசயிக்க வைக்கும் அழகு.

ஒவ்வொரு முறை மெஸ்ஸியிடம் பந்து வரும்போதும், ஈக்வடோர் வயிற்றில் புளியைக கரைத்தது. 16ஆவது நிமிடத்தில் இரண்டு தடுப்பாட்ட வீரர்களைக் கடந்து இடது புறம் நகர்ந்தார் மெஸ்ஸி. பிறகு ஒரு சக்தி வாய்ந்த ஷொட் ஆனால் இம்முறை ஈக்வடோர் கோல் காப்பாளர் சுதாகரித்தார்.

இப்படியே ஆடிக்கொண்டிருந்தபோது தான் 21ஆவது நிமிடம் மெஸ்ஸிக்காக காத்திருந்தது. மீண்டும் டி மரியோவிடம் பந்து வர அவர் 2 வீரர்களை வெட்டி பந்தை மெஸ்ஸிக்கு அனுப்ப பந்தை அவர் மீண்டும் குவியும் ஈக்வடோர் தடுப்பாட்ட வீரர்களைக் கடந்து அவர்கள் தங்கள் கால்களை மெஸ்சியின் காலுக்குள்விடுவதற்குள்மெஸ்ஸி இடது காலால் சக்தி வாய்ந்த ஒரு ஷொட்டை கோலுக்குள் அடித்தார், ஆர்ஜென்ரீனா 2-1 என்று முன்னிலை பெற்றது. ஈக்வடார் கோல் காப்பாளருக்கு வாய்ப்பேயில்லை என்ற ஷொட் ஆகும் இது.

32ஆவது நிமிடத்தில் டெலிபதி போல் செயல்பட்ட இருவரது மனங்களும் மீண்டும் ஒரு கூட்டணி அமைத்தது. மெஸ்ஸி அடித்த ரிடர்ன் பாஸை டி மரியா அருகிலிருந்து கோலை நோககித் தாக்க இம்முறை ஈக்வடோர் கோல காப்பாளர் பாங்யெரா அருமையாகத் தடுத்தார்.

35ஆவது நிமிடத்தில் ஈக்வடோர் கோல் கிங் ரொமாரியோ இபரா அடித்த கோர்னர் ஷொட்டை ரொமீரோ தட்டி விட மீண்டும் கோர்னர் ஆனால் இது கோல் அச்சுறுத்தல் ஏற் படுத்தவில்லை. இடைவேளையின் போது ஆர்ஜென்ரீனா 2-1 என்று முன்னிலை பெற்றது.



ஆட்டம் தொடங்கிய போது டி மரியா மீண்டும் அபாரமாக ஆட அதில் கோர்னர் கிடைத்தது, ஆனால் கோல் முயற்சி விரயமானது. 2-1 என்ற நிலையில் ஆர்ஜென்ரீனா 3ஆம் இடத்தில் இருந்தது. ஒருவேளை ஈக்வடோர் சமன் கோலை அடித்திருந்தால் ஆர்ஜென்ரீனா மீண்டும் 6ஆம் இடத்துக்குச் சென்றிருக்கும்.

ஈக்வடோர் கொஞ்சம் தாக்குதல் ஆட்டம் ஆடியது, ஆனால் அந்த அணியை ஆர்ஜென ரீன தடுப்பாட்ட வீரர்கள் பின்னுக்குத் தள்ளியபடியே இருந்ததோடு மெஸ்ஸியின் புலிக் கண்கள் தன் இலக்கைக் குறிவைத்துக் கொண்டேயிருந்தது.

அப்போதுதான் 62ஆவது நிமிடம் மெஸ்ஸியின் அதிஅற்புத ஹட்ரிக் கோல் கணத்திற்காகக் காத்திருந்தது. தளர்வான ஒரு பாஸ் 35 அடியில் மெஸ்ஸிக்கு வந்தது.

மெஸ்ஸி பந்தை மின்னல் வேகத்தில் கோலை நோக்கி எடுத்துச் செல்ல ஈக்வடோர் வீரர்கள் அவரை இடித்துத் தள்ளவோ அவரது கால்களுக்குள் தங்கள் கால்களை விடவோ நெருக்கமாக வந்து கொண்டிருந்தனர், மெஸ்ஸியின் பலன்ஸ் கூட தவறியது, அவரை இழுத்து விடவோ, கால்தட்டுப் போடவோ முயன்றனர்.

ஆனால் அந்தக் கால்தட்டு நடக்கும் ஒரு விநாடிக்கும் கீழான நேரத்தில் மெஸ்ஸி மிக மெஜஸ்டிக்காக பந்தை ஈக்வடோர் கோல் காப்பாளருக்கு பிடிக்க எந்த வாய்ப்பும் இல்லாமல் கோலுக்குள் தூக்கி அடித்தார். இது உண்மையில் ஜீனியஸ் மட் டுமே அடிக்கக் கூடிய கோலாகும். எப்போ துமே மெஸ்ஸி மார்க் செய்யப்பட்டிருந்தார்.

எப்போதுமே அவர் பந்தைக் கொண்டு செல்லும் போது கீழே தள்ள, கால்தட்டுப் போட ஆட்கள் இருந்து கொண்டேயிருந்தனர். ஆனால் அவற்றையெல்லாம் மீறியும் அவர் புலிபோல் தன் மின்னல் வேகத்தினால் அவர்களை புறக்கணித்து வெற்றி கண்டார்.

ஆட்டத்தின் 79ஆவது நிமிடத்திலிருந்து' 10 நிமிடங்களுக்கு ஈக்வடோர் ஆதிக்கம் இருந்தது. 79ஆவது நிமிடத்தில் ராமிரேஸ் கிராஸை பதில் வீரர் எஸ்ட்ராடா கோலுக்கு மேலே அடித்து வீணடித்தார். கடைசியில் ஆர்ஜென்ரீனா மெஸ்ஸியினால் உலக கிண்ணத்துக்கு தகுதி பெற்றது.

கால்பந்து ரசிகர்கள் மனதில் இந்த ஆட்டம் நீங்கா இடம்பிடித்திருக்கும் என்பது திண்ணம்.

## சண்டிமலின் தலைமை பிரமிக்க வைத்தது

### புகழ்ந்து தள்ளிய ஜாம்பவான் சங்கா



சண்டிமலின் தலைமை சிறப்பாகவும் பிரமிப்பாகவும் இருந்தது என குமார் சங்ககார புகழாரம் சூட்டியுள்ளார்.

இலங்கை - பாகிஸ்தான் அணிகள் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அபார வெற்றி பெற்று டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி சாதனை படைத்தது.

முதல் டெஸ்ட் போட்டியில் அபாரமாக 155 ஓட்டங்கள் குவித்த இலங்கை அணி தலைவர் சண்டிமல், இரண்டாவது டெஸ்டில் அரை சதம் அடித்தார். அத்தோடு மிக திறமையாக அணியை வழிநடத்தி வெற்றிக்கு வழிவகுத்தார்.

இது குறித்து கூறிய இலங்கை அணியின் ஜாம்பவான் சங்ககார, இலங்கை அணிக்கு இது தகுதியான வெற்றியாகும்.

சண்டிமலின் சிறப்பான தலைமையின் கீழ் இலங்கை கடுமையாக உழைத்தது. ஹெரத் மற்றும் டில்ருவன் பெரேராவின் ஆட்டமும் சிறப்பாக இருந்தது.

முதல் டெஸ்ட் போட்டியில் சண்டிமல் அழுத்தத்தை எதிர்கொண்ட விதம் சிறப்பாக இருந்தது.

சண்டிமலின் தலைமை பிரமிப்பாக இருந்த அதே சமயத்தில், பொறுப்பை உணர்ந்து துடுப்பாட்டத்தில் அவர் சிறப்பாக செயல்பட்டது பாராட்டுக்குரியது.

அவரின் முழு திறமையை இனித்தான் நாம் பார்க்க [illegible] 10,000 ஓட்டங்களை [illegible] தான் நம்புவதாக சங்ககார கூறியுள்ளார்.

## ஆஸியுடனான தோல்வியின் எதிரொலி

## துடுப்பாட்டக்காரர்கள் மீது விராட் பாய்ச்சல்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது ரி20 போட்டியில் மோசமான துடுப்பாட்டத்தால் தோல்வியடைந்ததாக இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி தெரிவித்துள்ளார்.

குவகாத்தியில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் விளையாடிய இந்திய அணி 118 ஓட்டங்களில் சுருண்டது.

தொடர்ந்து விளையாடிய அவுஸ்திரேலியா 15.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இந்த தோல்விக்காக துடுப்பாட்ட வீரர் களை இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி கடுமையாக சாடியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

துடுப்பாட்டத்தில் நாங்கள் போதுமான அளவுக்கு சிறப்பாக செயல்படவில்லை. மோசமான துடுப்பாட்டத்தால்தான் தோற்றோம். இந்த [illegible] துடுப்பாட்டம் செய்வது [illegible] சவாலாக இருந்தது.

அதே நேரத்தில் அவுஸ்திரேலிய வேகப் பந்து வீரர் பெரென்டோர்ப் மிகவும் அபாரமாக பந்துவீசி எங்களுக்கு நெருக்கடியை கொடுத்து விட்டார். அவர் நேர்த்தியாக பந்து வீசினார். எங்களது சரிவுக்கு அவரது சிறப்பான பந்துவீச்சு தான் காரணம். இவ்வாறு ஹோலி கூறினார்.

வெற்றி குறித்து அவுஸ்திரேலிய அணியின் தலைவர் வோர்னர் கூறியதாவது,

எங்களது திட்டத்தை சிறப்பாக செயல் படுத்தினோம். அபாரமான பந்துவீச்சால் இந்த வெற்றியை எளிதில் பெற்றோம். பெரென்டோர்ப், ஷாம்பாவின் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. ஐ.பி.எல். போட்டியில்விளையாடிய அனுபவம் இருந்ததால் ஹென்ரிக்சை முன்னதாக களம் அனுப்பினோம். அவரும் அதை சிறப்பாக பயன்படுத்தினார்.

கடைசி 20 ஓவர் ஆட்டம் ஹைதராபாத்தில் நடப்பதால் ரசிகர்களின் ஆதரவு எங்களுக்கு இருக்கும் இவ்வாறு வோர்னர் கூறியுள்ளார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது மற்றும் கடைசிப் போட்டி நாளை ஹைதராபாத்தில் ஆரம்பமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நல்லூர்க் கந்தனிடம் பிரார்த்தனை




அநுராதபுரம் சிறைச்சாலையில் 17 ஆவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்து வரும் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு உடனடி தீர்வினை கோரி அரசியல் கைதிகளின் உறவினர்கள் நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவாகவும் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றக் கோரியும் வடக்கில் தொடர் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(இ-9)

## அரச தகவல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக சுதர்ஷன

அரச தகவல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுதர்ஷன குண வர்த்தன நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய ரங்க கலன்சூரிய கடந்த வாரம் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார். இந்நிலையில் சுதர்ஷன குணவர்த்தன பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (இ-7)

## புத்தகக் கண்காட்சி

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி. தென் மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தால் பண்டத்தரிப்பு பட்டினசபையின் நூலக மண்டபத்தில் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நேற்று ஆரம்பமானது. தொடர்ந்து 3 தினங்கள் கண்காட்சி இடம்பெறும். (இ-82)

# சாட்சிகளுக்கு பாதுகாப்பில்லை என்ற போர்வையில் வழக்குகளை இடமாற்றம் செய்வது நீதிமன்றங்களை அவமதிக்கும் செயல்

## அரசியல் கைதிகள் விவகாரம் குறித்து தமிழ் சிவில்சமூக அமையம் அறிக்கை

(கொழும்பு)

**அரச சாட்சிகளுக்குப் பாதுகாப்பில்லை என்ற போர்வையில் தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை இடம் மாற்றுவது தமிழ் பகுதிகளில் இயங்கும் நீதிமன்றங்களை அவமதிக்கும் செயலாகும் என தமிழ் சிவில் சமூக அமையம் சுட்டிக்காட்டியுள்ளது.**

இது தொடர்பில் அவ் அமையத்தின் பொதுச் செயலாளர் பி.சிங்கம்,பேச்சாளர் குமாரவடிவேல் குருபரன் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழ் அரசியல் கைதிகள் மூவருக்கு எதிராக பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அவர்களிற்கு எதிரான வழக்குகள் வவுனியா மேல் நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில் அவ்வழக்குகள் கடந்த மாதம் அநுராதபுரத்திற்கு சட்டமா அதிபரால் மாற்றப்பட்டுள்ளன. இதற்கு எதிராக அக்கைதிகள் உணவுத் தவிர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

அவர்களின் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றது.

இக்கைதிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்க அடையாளம் காணப்பட்டோர் தமக்கு வவுனியாவில் பாதுகாப்பு இல்லை எனக் கருத்துவதாலேயே அநுராதபுரத்திற்கு வழக்கு மாற்றப்பட்டதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். இந்த விளக்கம் அடிப்படையற்றது. யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் கடந்த நிலையில் வவுனியாவில் அரச சாட்சிகளை அச்சுறுத்தலுக்குள் ளாக்குவது யார் என்பதை சட்டமா அதிபர் தெளிவுபடுத்த வேண்டும். அரச சாட்சிகளுக்கு வவுனியாவில் பாதுகாப்பு கரிசனையுள்ளது என்பது நம்ப முடியாத ஒரு நொண்டிச்சாட்டு. வடக்கு-கிழக்கில் அரசியல் கைதிகளின் வழக்குகள் இடம்பெறக்கூடாது என சட்டமா அதிபர் திணைக்களம் கருத்துகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. வவுனியாவில் வழக்கை நடத்த பாதுகாப்பில்லை என்ற நிலைப்பாடு ஒரு நாடு, ஒரே சட்டம் என்ற விடயத்தை நகைப்புக்குரிய தாக்குகின்றது.

இந்த நாட்டின் தமிழ் குடிமக்கள் மட்டுமல்ல தமிழ் பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களும் இரண்டாம் தரமாக கணிக்கப்படுகின்றனவா என்ற கேள்வி எழுகின்றன. சட்டமா அதிபருக்கு குற்றவியல் வழக்குகளை நடத்துவதில் உள்ள தற்துணிவு அதிகாரங்கள் எல்லைகள் அற்றவை அல்ல. சட்டமா அதிபர் திணைக்களம் சட்டத்தின் ஆட்சியையும் வடக்கு-கிழக்கில் நீதிமன்றங்களின் சுயாதீனத்தையும் உறுதிப்படுத்தும் பொறுப்புடையது. எனவே உடனடியாக வவுனியாவிற்கு இவ்வழக்குகளை மீள இடம் மாற்றுமாறு தமிழ் சிவில் சமூக அமையம் சட்டமா அதிபரை இவ்விடயம் தொடர்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

அனைத்து அரசியல் கைதிகளும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் எனும் பொதுவான நிலைப்பாட்டை தமிழ் சிவில் சமூக அமையம் மீள வலியுறுத்துகின்றது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## இராசி பலன்

12.10.2017

(புரட்டாதி 26, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

சப்தமி பிற்பகல் 10.35 மணிவரை

அட்டமி முற்பகல் 10.36 மணிவரை

திருவாதிரை பிற்பகல் 1.02 மணிவரை

சுபநேரம் 7.32-9.02 மணிவரை

இராகுகாலம் 1.32-3.02 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கேட்டை, மூலம் | | ராகு |
| கேது | | | செவ் |
| | சனி | குரு, புத | சூரி சுக் |

**மீனம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், வாகன சுகமுண்டு.

**மேடம்:** தொல்லை தந்தவர்களே தோள் கொடுத்து உதவ முன்வரலாம், தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், கொடுக்கல்-வாங்கல் ஒழுங்காகும்.

**இடபம்:** புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறலாம், நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு செல்லும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் வளர்ச்சிகண்டு பெருமையடைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகள் ஏற்படலாம், அலைச்சல்களால் மனச் சோர்வு ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாள்வது நல்லது.

**மகரம்:** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், போசன நன்மையுண்டு.

**சிம்மம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சிறப்பான நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**தனுசு:** வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு வரலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எதையும் யோசித்து செய்வதன் மூலம் [illegible] சேரலாம், [illegible]

**துலாம்:** தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், புதிய திட்டங்களைத் தீட்டுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரியர் தினவிழா கடந்த 9 ஆம் திகதி கல்லூரி கலையரங்கத்தில் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி குமாரசாமி சிதம்பரநாதன் கலந்து கொண்டார். (படங்கள்:-சக்தி)

## அரசடி வீதி புனரமைப்பு



மானிப்பாய் தெற்கு நவாலி அரசடி வீதி நீண்ட காலத்திற்குப் பின்னர் புனரமைக்கப்பட்டுள்ளது. (இ-7)

## அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் அனைத்தும் புறந்தள்ள முடியாதவை

### யாழ்.வணிகர் கழகம் அறிக்கை

வவுனியாவிலுள்ள நீதிமன்றங்களில் சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் பாதுகாப்புபிரச்சினைகள் இருப்பதாக கூறி தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை வவுனியா நீதிமன்றத்தில் இருந்து அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றியதோடு கைதிகளை அநுராதபுரம் சிறைகளில் அடைத்து வைத்துள்ளமை நியாயமானசெயல்எனக் கூறவே முடியாது. போரினால் ஏற்கனவே பெரிதும் பாதிப்புக்குள்ளான இவ்இளைஞர்கள்மொழிப் பிரச்சினை, வாழ்வாதாரப் பிரச்சினை மற்றும் பொருளாதாரம், பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றமை எமக்கு பெரிதும் மனவருத்தத்தை தந்துகொண்டிருக்கின்றது.

இவர்கள்மட்டுமன்றி இவர்களது குடும்பத்தினர் கூட சொல்லொணா துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே இந்த நல்லாட்சி அரசாங்கம் இந்த விடயத்தில் இனியும் இழுத்தடிப்புக்களை மேற்கொள்ள முடியாது. உடனடியாக அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். இல்லையேல் அவர்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டங்களில்உள்ளநீதிமன்றங்களில் அவர்களைப் பாரப்படுத்த வேண்டும். இக்கோரிக்கைகளுக்காக நடத்தப்படும் எமது மக்களின் நியாயமான போராட்டங்கள் மற்றும் கவனயீர்ப்பு நிகழ்வுகள் எவையும் யாராலும் புறந்தள்ளிவிட முடியாதவை என்பதுதான் யாழ். வணிகர் கழகத்தின் நிலைப்பாடாகும்.

எனவே நாளை மறுதினம் 14.10.2017 ஆம் திகதி அதாவது வருகின்ற சனிக்கிழமை ஜனாதிபதியின் யாழ். வருகைக்கு முன் இக் கைதிகளின் விடுதலைக்கு நல்ல ஒரு பதில் ஜனாதிபதியிடம் இருந்து கிடைக்க வேண்டும் என ஒட்டுமொத்த யாழ். சமூகமே எதிர்பார்க்கின்றது என யாழ். வணிகர் கழகத்தின் செயலாளர் இ.ஜனக்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (இ

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**அத்தியார் இந்துக் கல்லூரி**

ம.புவீசன்- 163, ந.கம்சிகா-155

**சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி**

பிபிரவீனா-159,அதிசா-155

**இணுவில் இந்துக் கல்லூரி**

ப.கோகிலநர்த்தகா-177, கு.கோகுலன்- 158

(இ-10-105)



குருநகர் கல்வி முன்னேற்ற சென்.ஜேம்ஸ் பழைய மாணவர் சங்க பிரான்ஸ் அமைப்பினரால் தையல் பயிற்சியை நிறைவு செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஆடைக் கண்காட்சியும் குருநகர் ஆவேமரியா பாலர் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றபோது... (படங்கள்:- இன்பகுமார் குரூஸ்)



யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வு கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.சிவனேசன் கலந்து கொண்டார்.

## யோகா குறுகியகாலப் பயிற்சிநெறி

இந்து சமயப் பேரவை தமது தலைமைச் செயலகத்தில் யோகா குறுகியகாலப் பயிற்சி நெறியொன்றை ஆரம்பிக்கின்றது. இதற்கான அறிமுக நிகழ்வு இன்று வியாழக்கிழமை (12.10.2017) மாலை 6 மணியளவில் பேரவையின் செயலர் சி.சக்திகிரீவன் தலைமையில்நடைபெறவுள்ளது.

தொடர்ந்து யோகா வகுப்புக்கள் இரவு 6 மணி தொடக்கம் 7 மணி வரையும் 10 நாட்கள் தினமும் நடைபெறும்.

யோகா பழக விரும்புபவர்களின் நன்மை கருதி வெவ்வேறு நேரங்களிலான மேலும் சில பயிற்சி நெறிகளுக்கான பதிவுகளும் இடம்பெறும்.

யோகாசனங்கள், பிராணாயாமம், தியானம் முதலான பயிற்சிகளில் மிகவும் பயனுடையவை குறித்த நாட்களுக்குள் அனுபவமுள்ள ஆசான்களால் பயிற்றுவிக்கப்படுவதோடு கையேடு சான்றிதழ் என்பனவும் வழங்கப்படும். இந்து சமயப் பேரவையின் தலைமை அலுவலகம் இல. 51, பலாலி வீதி, கந்தர்மடத்தில் (தும்றோ நிறுவனத்திற்கு முன்பாக) அமைந்துள்ளது. ஆர்வமுள்ள அனைவரும் யோகா பயிற்சி நெறியில் இணைந்து பயனடைய முடியுமென்று இந்து சமயப் பேரவை அறிவித்துள்ளது. (இ

## களிமண் சிற்ப பயிற்சிநெறிக்கு 25வரை விண்ணப்பிக்கலாம்

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் இல 15, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஓவியக் கூடத்தில் கடந்த ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட களிமண் சிற்ப ஓராண்டு பயிற்சி நெறியின் இரண்டாவது பிரிவு கடந்த செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப் பயிற்சிநெறியை நடத்துவதற்காக கொழும்பிலிருந்து கட்புல, ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு கற்கை நெறியின் பீடாதிபதி பேராசிரியர் சரத் சந்திரஜீவா தலைமையிலான குழுவினர் வருகை தந்திருந்தார்கள். தொடர்ந்து இவர்களின் தலைமையில் ஒருவருட காலத்திற்கு மாதத்தின் இறுதி சனி,ஞாயிறு தினங்களில் இப்பயிற்சி நெறி முன்னெடுக்கப்படவுள்ளது. இதன் அடுத்த வகுப்புக்கள் இம்மாதம் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சியில் இணைந்துகொள்வதற்கான மாணவர்கள் பலரின் தொடர்ச்சியான வேண்டுகோளை ஏற்று இம்மாதம் 25 ஆம் திகதி வரை விண்ணப்பத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக புதிதாக இணைந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் தமது பதிவுகளை இல. 128. டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## உரமானிய கொடுப்பனவு பதிவுகள் இன்று

(யாழ்ப்பாணம்)

மாசேரி வரணி விவசாய சம்மேளன பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான பெரும்போக உரமானியக் கொடுப்பனவுக்கான பதிவுகள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை மாசேரி கிராம அபிவிருத்தி மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் புதிதாக உரமானியம் பெற்றுக் கொள்ள விரும்பும் விவசாயிகள் தேசிய அடையாள அட்டைப் பிரதி, பாவனையிலுள்ள அரசாங்க வங்கிப் புத்தகம் மற்றும் தமது சிறிய புகைப்படம் என்பவற்றை தவறாது கொண்டு வர வேண்டும் என மாசேரி சமாசா அமைப்பின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-10-103)

யாழ்.செய்திகள்

## சாரணர் பயிற்சிப் பாசறை நிகழ்வு



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த சாரணர் பயிற்சிப் பாசறை நிகழ்வு கடந்த 5,6,7 ஆம் திகதிகளில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ். நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களும் கலந்து கொண்டனர். (இ-10-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பை ஆதரிக்கும் உறுப்பினர் ஒருவருக்கு 300 மில்லியன்

## சரத் வீரசேகர தகவல்



பிரபாகரன்போரின் மூலம் பெற்றுக் கொள்ள முடியாமல் போனதை சட்ட ரீதியாகப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இதனடிப்படையில் புதிய அரசியலமைப்பிற்கு ஆதரவாக கையுயர்த்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 300 மில்லியனை வழங்குவதற்கு புலம்பெயர் தமிழ் பிரிவினைவாதிகள் தீர்மானித்துள்ளதாக ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

சர்வதேச இலங்கையர் பேரவையின் விசேட ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ராஜகிரியவில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான பாரதூரமான அறிக்கை குறித்து அரசாங்கத்தின் செயற்பாடுகள் திருப்திகரமாக அமையவில்லை. நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களை குறித்த கால எல்லைக்குள் முடித்து விட வேண்டும் என்ற நோக்கில் நல்லாட்சி அரசாங்கம் செயற்படுகின்றது.

குறிப்பாக புதிய அரசியலமைப்பு விவகாரம் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சட்டமூலம் மற்றும் அலுவலகம் என்பன சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கை தொடர்பில் முன்வைக்கப்படுகின்ற குற்றப்பத்திரிகை இயற்கை நீதிக்கு முரணானது மாத்திரமல்ல, அடிப்படை தன்மையற்றது மாகும்.

இலங்கை தொடர்பிலான போர்குற்றச்சாட்டுகளை மறுதலிக்கும் வகையில் சர்வதேச குற்றவியல் சட்டங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான 7 நிபுணர்கள் 7 அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர். அதேபோன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான பாரதூரமான அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பப்பட்டது.

ஆனால் அரசாங்கம் அந்த ஏழு அறிக்கைகள் தொடர்பாகவோ குற்றப்பத்திரிகை தொடர்பாகவோ கவனத்தில் கொள்ளவில்லை. இதனால் நாட்டிற்கு ஏற்பட்ட விளைவுகளும் ஆபத்துக்களும் அதிகமாகின. ஜெனிவா தீர்மானத்தினை நிறைவேற்றுவதில் அரசாங்கம் ·மும்முரமாக உள்ளது.

நாட்டிற்கு எதிரானது என்று அறிந்தும் அரசாங்கம் கருத்தில் கொள்ளவில்லை. விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் போரின் மூலம் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதை அரசியலமைப்பு ரீதியாக பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

நல்லாட்சி அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்பு விவகாரத்தை கையாளும் ஜயம்பதி விக்ரமரட்ன ஒரு சமஷ்டி ஆர்வலர். மறுபுறம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரன் விடுதலை புலிகளின் அரசியல் சிந்தனையாளர். இவர்கள் உருவாக்கும் அரசியலமைப்பு எவ்வாறு இருக்கும் என்பதை நாட்டு மக்கள் உணர வேண்டும்.

வடக்கு, கிழக்கை ஒன்றாக இணைத்து அதிகூடிய அதிகாரத்துடன் சமஷ்டி முறைமையிலான ஆட்சியை முன்னெடுப்பதற்கான விடயதானங்கள் புதிய அரசியலமைப்பிற்குள் காணப்படுகின்றன. இதனை எந்தவழியிலேனும் நிறைவேற்றி விட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் சர்வதேசத்தில் உள்ள தமிழ் பிரிவினைவாதிகள் செயற்படுகின்றனர்.

இதற்காக உள்ளூர் அரசியல்வாதிகளை குறிவைத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதாவது பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பிற்கு ஆதரவாக கையுயர்த்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 300 மில்லியனை வழங்குவதற்கு புலம் பெயர் தமிழ் பிரிவினைவாதிகள் தீர்மானித்துள்ளனர்.

எனவே நாட்டு மக்கள் இந்த விடயத்தில் அவதானத்துடன் செயற்பட வேண்டும். புதிய அரசியலமைப்பிற்கு ஆதரவாக செயற்படும் அனைவரும் பிரிவினைவாதிகளுக்கு துணைப்போகும் தேசத்துரோகிகளாவர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# சம்பந்தனையும் விக்னேஸ்வரனையும் சந்திக்க தயாராகிறது பொதுபல சேனா

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரை சந்திக்க உள்ளதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கர்தினால் மெல்கம் ரஞ்சித் மற்றும் அமைச்சர்களான றிசாத் பதியுதீன், கபீர் ஹாசிம் ஆகியோரையும் சந்திக்க வேண்டியுள்ளது.

இதேவேளை, புதிய அரசியலமைப்பு குறித்து தங்களது நிலைப்பாடு தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் அனைத்து கட்சிகளின் மத்திய குழுக்களுக்கும் அறிவிக்க வேண்



டும் எனவும் ஞானசார தேரர் வலியுறுத்தினார். (இ-7)


## அறிவித்தல்

ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை
தரம்-6 அனுமதி (2018)

எமது கல்லூரியில் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் 11.10.2017 தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
விண்ணப்ப முடிவுத் திகதி 08.11.2017
விண்ணப்பங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.
(சி-9967)

-அதிபர்-



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



க.கௌதமன்-169

Congratulations



ர.சாகித்யன்-163

யாழ். கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலையிலிருந்து 2017 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் இருவர் சித்தியடைந்துள்ளார்கள். இவர்களோடு நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம் இவர்களின் உயர்விற்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள் யாவருக்கும் நன்றி தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்.

அ.தர்சனா-144, மோ.சரண்ராஜ்-132, ர.கலைப்பிரியா-129, சு.நிஷானிகா-111
ச.துஜிதா-143, உ.கஜேந்தினி-131, ஜெ.தணிகைச் செல்வி-118, வ.மாதுளன்-104
ஜெ.சங்கமி-142, ச.ஆர்ஜன்-130

Congratulations

வாழ்த்துவோர் : நிர்வாகத்தினர்,
கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியம்
கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்
"சுப்பிரமணியம் மாலதி" ஆரம்ப சுகாதார பராமரிப்பு, முன்பள்ளி.

(980)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 17சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Bsc/பொறியியளாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/7862 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 42<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/7105 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 30 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7863 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 18 செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/Lஎதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/7107 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:பொறியியளாளர் அவுஸ்ரேலியாNOT PR<br>தொ.இ: B/7864 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/7109 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7866 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>செவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: பட்டதாரிலண்டன் NOT PRஎதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/7110 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலபோக விதைப்பிற்கு போதியளவு விதைநெல் கையிருப்பில் இருக்கின்றது

## கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கால போக செய்கைக்கு தேவையான போதியளவு விதைநெல் இருப்பதாக பிரதி மாகாண விவசாயப் பணிப் பாளர் பி.உகநாதன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போது காலபோக நெற்செய்கையில் விவசாயிகள் அமோகமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மாவட்டத்தில் விதை நெல்லுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரதி விவசாயப் பணிப்பாளர், இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் 23 ஆயிரத்து 500 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில் 70 வீதமான நிலங்களில் புழுதி விதைப்புக்களாக விவசாயிகள் நெற் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஏனைய நிலங்களிலும் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கு விவசாயிகள் தங்களை தயார்படுத்தி வருகின்றனர்.

மாவட்டத்தில் விதைநெல் தட்டுப்பாடு எதுவும் இருப்பதாக இதுவரை தெரிவிக்கப் படவில்லை.

ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையாளர் சங்கம் மற்றும் விதை உற்பத்தி பண்ணை ஆகியவற்றில் போதியளவு விதை நெல் கையிருப்பில் இருக்கின்றது.

இதேவேளை பொலநறுவை போன்ற இடங்களில் இருந்தும் நெல்லை எடுத்து வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவ்வாண்டு 500 ஹெக்டேயர் நிலப்பரப்பில் கச்சானும் 100 ஹெக்டேயரில் கௌப்பியும், 200 ஹெக்டேயரில் உழுந்தும், 200 ஹெக்டேயரில் எள்ளும் 100 ஹெக்டேயரில் பயறும் பயிரிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# போதைப்பொருள், குற்றச் செயல்களை தடுத்த பொலிஸாருக்கு பரிசில்கள்





(பனிக்கன்குளம்)

அர்ப்பணிப்புடன் பணியாற்றிய முல்லைத்தீவு மாவட்ட பொலிஸாருக்கு வெகுமதி வழங்கும் நிகழ்வு ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த கந்தேவத்த தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன கலந்து கொண்டிருந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் போதைப்பொருள் பாவனை மற்றும் குற்றச் செயல்களை தடுப்பீதற்காக அர்ப்பணிப்புடன் பணி யாற்றிய பொலிஸாருக்கு வெகுமதிகள் வழங்கப்பட்டன.

பொலிஸாருக்கு பரிசில் வழங்கும் நிகழ்வில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றிருந்ததுடன் கலை நிகழ்வுகளில் ஈடுபட்டிருந்த மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன, முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த கந்தேவத்த, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பொலிஸார் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)




# தேசிய விவசாயிகள் வாரத்தையொட்டி மாணவர்களுக்கு விவசாய புதிர்ப் போட்டி

தேசிய விவசாயிகள் வாரத்தினை முன்னிட்டு வவுனியா மாவட்ட விவசாயத்திணைக்களமான பல்வேறு வகையான செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதனடிப்படையில் வவுனியா தெற்கு கல்வி வலயத்துடன் இணைந்து கடந்த 6 ஆம் திகதி விவசாய புதிர்ப் போட்டிக்கான எழுத்துப் பரீட்சைகள் நடைபெற்றன. இதில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் க.பொ.த உயர் தரத்தில் விவசாய பாடநெறி கற்பிக்கும் ஏழு பாடசாலையை சேர்ந்த 32 மாணவ, மாணவிகளுக்கிடையே பாடசாலை மட்டத்தில் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



இதனைத்தொடர்ந்து. கடந்த 10 ஆம் திகதி மேற் படி தெரிவான பாடசாலை மட்டப் போட்டியாளர்களுக்கிடையே விநாடிவினா போட்டிகள் நடத்தப்பட்டு மூன்று பாடசாலைகள் அரை இறுதிச் சுற்றுக்கு தெரிவாகின.

இறுதிச்சுற்றில் வ/ இறம்பைக்குளம் ம.ம.வி. வ/ செட்டிகுளம் ம.வி ஆகியன போட்டியிட்டு, அதில் வ/ இறம்பைக்குளம் ம.ம.வித்தியாலயம் வெற்றியீட்டியது. வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளுக்கு வெற்றிக்கேடயங்கள் வழங்கப்பட்டன. இறுதிச் சுற்றில் போட்டியிட்ட பத்து மாணவிகளுக்கு வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெ. யோகேஸ்வரன் நினைவுப் பரிசாக பழமரக்கன்றுகளை வழங்கி வைத்தார். இச் செயற்பாடானது விவசாயம் கற்கும் மாணவர்களிற்கு புதிய உத்வேக்தை வழங்குவதுடன் அவர்களிடையே சூழல் தொடர்பான பற்று தலை ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது என்பதில் ஐயமில்லை. (2)

# தட்டுவன்கொட்டி மக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் பௌசர் மூலம் விநியோகிக்கப்படுகின்றது

## கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் கம்சநாதன் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி தட்டுவன் கொட்டிப் பிரதேசத்திற்கு போதியளவு குடிநீர் விநியோகப்பட்டு வருகின்றது என கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் கணே சன் கம்சநாதன்தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் தட்டுவன் கொட்டிக் கிராமத்தில் குடிநீர் விநியோகம் சீராக விநியோகிக்கப்படுவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் கணேசன் கம்சநாதன் கருத்துத் தெரிவிக்கையில்,

தட்டுவன் கொட்டிப் பிரதேசத்தில் 75 குடும்பங்களைச் சேர்ந்த 356 பேர் வரையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு நாளொன்றுக்கு பன்னிரெண்டாயிரம் லீற்றர் அளவில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. குடிநீருக்கு வழங்கப்படுகின்ற நீரை இங்குள்ள மக்கள் ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

அந்தப்பகுதியில் ஏனைய தேவைகளுக்காக பொதுக் கிணறுகள் காணப்படுகின்றன.

இருந்த போதும் பௌசர் மூலம் விநியோகிக்கப்படும் தண்ணீரையே சகல தேவைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றனர். கடந்த 9ஆம் திகதி ஆறாயிரம் லீற்றர் தண்ணீரும் கடந்த 10ஆம் திகதி எண்ணாயிரம் லீற்றர் தண்ணீரும் குடிநீருக்காக வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்த நீர் விநியோகத்தின் ஊடாக பிரதேச சபைக்கு எந்தவிதமான வருமானங்களும் இல்லை. வேறு சபை வருமானங்களைக் கொண்டே இங்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே இங்கு வழங்கப்படுகின்ற தண்ணீரை சரியாகப் பயன்படுத்தி கொள்ள வேண்டுமெனவும்அவர்மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# பிரதான வீதியைப் புனரமைத்து போக்குவரத்துக்கு உதவுங்கள்

முல்லைத்தீவு. அளம்பில் வடக்கு, உம்புமா வெளியிலிருந்து கெனடிவீதி வரையான ஐந்து கிலோ மீற்றர் வீதி இதுவரை புனரமைக்கப்படாமையினால் இவ் வீதியை பயன்படுத்தும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

முல்லைத்தீவு, அளம்பில் வடக்கு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட உம்புமா வெளிப் பகுதியையும் அதனை அண்டிய பகுதிகளில் வாழும் சுமார் 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் பிரதான வீதியாகக் காணப்படும் இவ் வீதியைப் புனரமைத்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# மேட்டுக் காணிகள் வயல் நிலங்களாக மாற்றம்; கூட்டத்தை கூட்டி ஆராயுமாறு கோரிக்கை

(பூநகரி)

பூநகரி பிரதேசத்திலுள்ள தனியார் மற்றும் அரச காணிகளில் சிலரது சுய முயற்சியால் ஜே.சி.ரி.கனரக இயந்திரம் மூலம் சிலமணி நேரத்தில் பெருந்தொகையான மேட்டுக் காணிகளில் உள்ள பயன்தரும் மரங்கள், வேரோடு பிடுங்கப்பட்டு வயல் நிலங்களாக மாற்றம் செய்யப்படுகின்றன.

இதனால் இப் பகுதி மக்களுக்கு பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே காணிகளை வயல் நிலங்களாக மாற்றியமைப்பதற்கு முன்பாக அக் காணிகள் உரியவர்களுக்குச் சொந்தமானதா என்பதை உறுதிப்படுத்தாமல் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் பூநகரி பிரதேசத்தில் உள்ள ஜே.சி.ரி. கனரக வாகனங்களின் உரிமையாளர்கள், சாரதிகள் ஆகியோரை அழைத்து அறிவுறுத்தல் கூட்டத்தை நடத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென கமநல சேவை பகுதியினரிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-84)

# கலாசார பேரவையின் விசேட பொதுக் கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசார பேரவையின் விசேட பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலரும் கலாசார பேரவையின் தலைவருமான சி.சி. கிருஷ்ணேந்திரன் தலைமையில் நடை பெறும்.

[illegible] வெளியிடப் படும் பூந்துணர் சஞ்சிகை -06 விடயம், கலாசார விழா நடத்துவது தொடர்பான ஒழுங்குகள் என்பன பற்றியும் ஆலோசிக்கப்படவுள்ளது.

அத்துடன் கலைநகரி விருது, இளம் கலைநகரி விருது ஆகியவைகளைப் பெறுபவர்கள் தொடர்பிலும் தீர் மானிக்கப்படவுள்ளது. இக் கூட்டத்திற்கு அனைத்து பேரவை உறுப்பினர்கள், கலைஞர்கள் ஆகியோரை [illegible] பூநகரி கலாசார பேரவை தலைவர் கேட்டுள்ளார். (2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுக்குடியிருப்பு தேராவில் பகுதியில் உள்ள சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கான இலவசக் கல்வி நிலையம் ஒன்று வடக்கு மாகாண விவசாய அமைச்சரினால் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வேண்டுகோள்

(மன்னார்)

தமிழ் அரசியல் கைதிகளின் அகிம்சைப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்படுகின்றதே தவிர, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவில்லை என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவித்துள்ளார்.




தமிழ் அரசியல் கைதிகளின் நிலை தொடர்பாக மன்னாரில் நேற்று புதன் கிழமை முற்பகல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அங்கு சிலரது உடல் நிலை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்,ஆகாரம் எதுவும் கூட உண்ணாத நிலையில் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமையினால் அவர்களுடைய சிறுநீரகங்கள் கூட பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்திய தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற உண்ணாவிரதப் போராட்டங்கள் போன்று கடந்த காலங்களில் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறான அகிம்சைப் போராட்டம் . முடிவுக்கு கொண்டு வரப்பட்டதைத் தவிர, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அரசினாலும் எடுக்கப்படவில்லை.

இவர்களுடைய உயிர் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

அநுராதபுரம் சிறைச் சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகள் வவுனியாவில் இருந்து அநுராதபுரத்திற்கு மாற்றப்படுவதற்கு எதிராகவும் அவர்களுடைய விடுதலைக்காக பொதுமன்னிப்பை வழங்கி அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை மேலோங்கியுள்ளது.

இவ் விடயத்தில் எமது கடுமையான கண்டனத்தை தெரிவிப்பதோடு,தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-4)

# இரணைதீவில் காணிகளை அளவீடு செய்ய பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை

## பூநகரி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி இரணை தீவில் நிலஅளவைத் திணைக்கள அதிகாரிகள் தங்கி நின்று காணிகளை அடையாளப்படுத்தி அளவீடு செய்வதற்கான அனுமதிகள் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து இதுவரை கிடைக்கப் பெறவில்லை என பூநகரிப் பிரதேச செயலாளர் எஸ். கிருஸ்னேந்திரன் தெரிவித்துள்ளார்.

பூநகரி இரணைதீவு பிரதேசம் தொடர்ந்தும் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதனால் அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இரணைமாதா நகரில் தங்கி உள்ளனர்.

இந் நிலையில் தமது சொந்த இடத்தில் மீள்குடியேற அனுமதிக்கக் கோரி கடந்த ஐந்து மாதங்களிற்கு மேலாக இரணைதீவு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில் கடந்த 9 ஆம் திகதி இரணை தீவிற்குச் சென்று நிலஅளவை செய்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கோரப்பட்டபோதும், இதுவரை அதற்கான அனுமதி வழங்கப் படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் நேற்று பூநகரிப்பிரதேச செயலர் தொடர்பு கொண்டு வினவிய போது, ஏற்கனவே கடற்படையினர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோர் கலந்து கொண்ட கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக இரணை தீவிற்குச்சென்று அங்குதங்கி காணிகளை அளவிடுவதற்கு மாவட்ட அரச அதிபர் ஊடாக பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதிக்காக கடிதத்தை அனுப்பியிருக்கின்றோம்.

ஆனால், அதற்கான அனுமதிகள் இதுவரையும் கிடைக்கவில்லை.

அனுமதி கிடைத்தால் பிறிதொரு தினத்திலாவது அதனை அளவீடு செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தினரும் ஹர்த்தாலுக்கு ஆதரவு

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் தமது வழக்குகளை மீண்டும் தமிழ் பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து அநுராதபுரம் சிறையில் சாகும் வரை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அரசியல் கைதிகளுக்காகவும் வடக்கு மாகாணம் முழுவதும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு தமது முழு ஆதரவை வழங்குவதாக கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கனகையா மதனரூபன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கிவரும் முப்பது கிளை நிலையங்கள், கண்டாவளையில் அமைந்துள்ள வெல்ல உற்பத்தி நிலையம், கோணாவிலில் அமைந்துள்ள போத்தல்கள் உற்பத்தி நிலையம், ஏ-9 வீதி, கரடிப்போக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள சங்கத்தின் பிரதான தலைமைக் காரியாலயம் என்பன முற்றாக மூடப்பட்டு பூரண ஆதரவை வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சங்க தீர்மானத்தின்படி இந்த அறிவிப்பை தாம் வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து வரும் அதேநேரம் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தினம் தினம் பாதிக்கப்படுவதனை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவதற்கு எம்மால் முடிந்த உதவிகளை செய்ய வேண்டும். அதன் பயனாகவே நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு நாம் எமது ஆதரவினை வழங்குகின்றோம்.

தொடர்ந்தும் தமிழ் சமூகத்திற்கு குரல் கொடுத்து கிளிநொச்சி பனை தென்னை வளஅபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் செயற்படும் என சங்கத்தின் தலைவர் கனகையா மதனரூபன் தெரிவித்தார். (2-312)




# கற்சிலைமடு அ.த.க.பாடசாலை பண்டாரவன்னியன் ம.வித்தியாகத்தரமுயர்வு

(பனிக்கன்குளம்)

மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை என்ற பெயர் "பண்டாரவன்னியன் மகாவித்தியாலயம்" என தரமுயர்த்தப்பட்டுள்ளது.

மு/கற்சிலைமடு அ.த.க பாடசாலை என்ற பெயர் "பண்டாரவன்னியன் மகா வித்தியாலயம் " என அலுவலக முறைப்படி நேற்று முன்தினம் பெயர்ப் பலகை யானது வலயக் கல்விப் பணிப்பாளரால் திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டது.

அத்துடன் ஆசிரியர் தின நிகழ்வும் நடைபெற்றது.




இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் இ.ரவிச்சந்திரன், கௌரவ விருந்தினர்களாக சுதேச வைத்தியர் நா.வன்னிய சிங்கம், பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் வன்னியூர் செந்தூரன், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் திருக்குமரன், பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் வே.சிவகு மார், முன்னாள் அதிபர் நாகேந்திரராசா, கற்சிலை மடு கிராம அலுவலர் பாலசுப்பிரமணியம், மாணவர்கள், பெற்றோர் என பலரும் கலந்து சிறப்பித்தனர். (2-281)

## அதிக வருமானம் சேர்த்தல்

# வவுனியா தபால் ஊழியர் தெரிவு



வடக்கு மாகாணத்தில் அதிக வருமானம் சேர்த்தல் அஞ்சல் சேவையாளராக வவுனியா தபால் நிலைய ஊழியர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற தேசிய உலக அஞ்சல் தின நிகழ்வின் போதே தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அந்த வகையில், வவுனியா தபாலகத்தில் கடமையாற்றுகின்ற எஸ்.மனோகரன் என்ற தபால் உத்தியோகத்தரே வடக்கு மாகாண மட்டத்தில் அதிக வருமானம் சேர்த்தல் அஞ்சல் சேவையாளராக தெரிவு செய்யப்பட்டு முதல் நிலை விருதை பெற்றுள்ளார். (2-250)

# தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தில் அரச சேவையாளர் தினம் மன்னாரில் அனுஷ்டிப்பு



(மன்னார்)

தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் "அரச சேவையாளர்" தினமான நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் தேசிய உணவு உற்பத்தி வேலைத் திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த 9ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்ட தேசிய உணவு உற்பத்தி வார நிகழ்வுகள் இன்று 12 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந் நிலையில் நேற்று தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் "அரச சேவையாளர்" தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் தேசிய உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தின் "அரச சேவையாளர்" நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது மாவட்டச் செயலகத்தில் பயன் தரும் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மேல் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகள் மரக் கன்றுகளை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (2-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பாதிப்படையும்

# உலக வங்கி எச்சரிக்கை!

(கொழும்பு)

**இலங்கையில் ஏற்பட்டுள்ள சிக்கலான அரசியல் சூழ்நிலை, மீளமைப்பு நடவடிக்கைகளைத் தாமதிக்கிறது என்றும் இதனால் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சி பாதிக்கக்கூடும் என்றும் உலக வங்கி எச்சரித்துள்ளது.**

உலகவங்கியின் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் வரவு-செலவுத்திட்ட துண்டுவிழும் தொகை 5.2 என்ற மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதத்தில் இருந்து 0.2வீதத்தினால் குறையும் என்று எதிர்பார்க்கிறது.

இது கடந்த வருடம் 5.4 வீதமாக இருந்தது. நாட்டில் முன்னெடுக்கப்பட்ட வருமானமிக்க பொருளாதார நடவடிக்கைகளே இந்த முன்னேற்றத்துக்கு காரணமாக அமைந்தன. பொருளாதாரத்தை பொறுத்தவரையில் கடந்த வருடத்தில் இருந்த 4.4 வீதத்தில் இருந்து 4.6 வீதமாக உயர்வு கண்டுள்ளது. எனினும் நாட்டில் நிலவுகின்ற சூழ்நிலை எதிர்கால பொருளாதார வளர்ச்சியை பாதிக்கக்கூடும். இயற்கை அனர்த்தங்களும் பொருளாதாரப்பின்னடைவுக்கான காரணங்களாக அமையும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது. (இ-7)




## பின்லாந்து-இலங்கை பிரதமர்கள் சந்திப்பு



(ஹெல்சிங்கி)

பின்லாந்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அந்நாட்டு பிரதமர் ஜுஹா சிபிலாவை (Juha Sipila) சந்தித்துப் பேச்சு நடத்தினார். ஹெல்சிங்கி நகரிலுள்ள பின்லாந்து பிரதமரின் 'கெசரன்தா' இல்லத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது. (இ-7)

## தேர்தலை நடத்துவதில் காணப்பட்ட பிரதான மூன்று தடைகள் தகர்ந்தன

### ரோஹண ஹெட்டியாராச்சி வரவேற்பு



(கொழும்பு)

"மாநகர சபை, நகரசபை மற்றும் பிரதேச சபை திருத்தச் சட்டமூலங்கள் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டதை அடுத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதில் காணப்பட்ட பிரதான மூன்று தடைகள் நீக்கப்பட்டுள்ளன" என்று நீதிக்கும் சமாதானத்துக்குமான மக்கள் இயக்கத்தின் (பவ்ரல்) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

"இதற்கமைய ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்குமாக தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிட்டதன் பின்னர், தேர்தலுக்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளத் தேர்தல்கள் திணைக்களத்துக்கு வாய்ப்பளிக்கப்படும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

"மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா, நாடாளுமன்றில் கடந்த 8 ஆம் திகதி கூறியதற்கமைய அடுத்த வாரமளவில் மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியனவற்றை இணைப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்" என எதிர்பார்த்துள்ளதாகவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

"இதற்கமைய தற்போது இணங்கியுள்ளவாறு அடுத்த வாரமளவில் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகியவற்றுக்காக உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் கேட்டுக்கொள்வதோடு, இம் மாதத்தில் தேர்தலை நடத்துவது தொடர்பில் எந்தத் தடையும் ஏற்படாது" என தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், "தேர்தல் ஆணையகம் தேர்தலை நடத்துவதற்கு தற்போது தயார் நிலையில் உள்ளதாகவும் எந்தத் தடையுமின்றி அடுத்த வருடம் ஜனவரி மாத முற்பகுதியில் தேர்தலை நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்துமாறு தேர்தல்ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடம் கேட்டுக்கொள்வதாகவும்" அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதையடுத்து தேர்தல் களப் பணி அதிகாரிகள் ஒருவருடத்துக்கு முன்னதாக இராஜினாமா செய்ய வாய்ப்பு இல்லாததால் முதல் தடவையாக வாக்களிக்கும் உரிமையை பாதுகாப்பது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரிடம் கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

"எல்லை நிர்ணயம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த மூன்று வருடங்களாக மக்களின் தேர்தல் உரிமை மறுக்கப்பட்டதோடு புதிய தேர்தல் முறையின் ஊடாக இலங்கை மக்கள் புது அனுபவத்தை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளதற்கமைய மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் உரிய அதிகாரிகள் செயற்பட வேண்டும்" எனவும் ரோஹண ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பாதுகாப்புக்கு அதிக நிதி; கூட்டமைப்பு அதிருப்தி!



(கொழும்பு)

போர்க் காலத்தில் பாதுகாப்புச் செலவினத்திற்கு ஒதுக்கிய 250 பில்லியன் ரூபா நிதியை 2018 வரவு-செலவுத் திட்டத்திலும் ஒதுக்கியமைக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆட்சேபனை தெரிவிப்பதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

இது தொடர் பில் தமிழரசுக் கட்சியின் தலை வரான மாவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

யுத்த காலத்தில் அதிக அழிவைச் சந்தித்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மீள் கட்டுமானம், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு, தொழிற்சாலைகள் என்ப் பல முன்மொழிவுகளை 2018 வரவு-செலவுத் திட்டத்திற்காக முன்வைத்திருந்தோம். அந்த முன்மொழிவுகளுக்கு இன்னும் திருப்தியான அளவில் நிதி கிடைக்கவில்லை. நிதியமைச்சரும் பிரதமரும் நாடு திரும்பியதும் இது தொடர்பில் நேரில் சந்தித்து எமது மாகாணங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வோம். அதே நேரம் யுத்தம்முடிவடைந்த பின்னரும் பாதுகாப்பு அமைச்சுக்கு இவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் எமது கண்டனத்தை தெரிவிப்போம். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான தேவைகளை நிறைவு செய்யாவிடின் 2018 வரவு-செலவுத் திட்டத்தை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முழுமையாக எதிர்க்க வேண்டி வருமென்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## சீன-சிங்கப்பூர் உடன்படிக்கைகளால் இறக்குமதியில் இலங்கை பாய்ச்சல்

(கொழும்பு)

இலங்கையுடனான சீனாவினதும் சிங்கப்பூரினதும் சுதந்திரவர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர், சுங்கத் தீர்வையற்ற கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்குக்குக் குறைவில்லாத பொருட்களை இலங்கை இறக்குமதி செய்ய முடியுமென்று உலக வர்த்தக மையத்தின் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் பிரி வின் தலைவர் டாக்டர் ரோகினி ஆச்சார்ய தெரிவித்தார்.

கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் கைத்தொழில் வர்த்தக அமைச்சின் கீழான வர்த்தக திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'உலக வர்த்தக மையமும், பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளும்' என்ற தலைப்பிலான தேசிய செயலமர்வில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தற்போது இலங்கையின் இறக்குமதியில் 51 சதவீதப் பொருட்கள் பூச்சிய இறக்குமதி வரிகளைக் கொண்டுள்ளன. சீனாவும் சிங்கப்பூரும் வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்ட பின்னர், இறக்குமதி வரிகள் 75 சதவீதம் பூச்சியமாகுவதுடன் இலங்கையின் இறக்குமதிப் பொருட்களின் தீர்வையற்ற வரிகளின் கொள்ளளவு அதிகரிப்பதோடு வருடாந்த இறக்குமதியின் வீதமும் உயர்வடையும்" என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தச் செயலமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் றிசாத் பதியுதீன் கருத்துத் தெரிவிக்கையில், "தென்னாசிய நாடுகளில் இலங்கையே முதன்முதலாக சந்தை அடிப்படை யிலான பொருளாதார மறு சீரமைப்பை அறிமுகப்படுத்திய பெருமையையும் வரலாற்றுப் புகழையும் பெற்றுள்ளது. இலங்கையின் பல்பக்க வர்த் தக முறைமை மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் நீண்டகால வரலாற்றைக் கொண்டவை.


உலக வர்த்தக மையத்தின் உருவாக்கத்தின் பின்னர் பல்பக்க வர்த்தகம் மற்றும் இருபக்க வர்த்தக உடன்படிக்கைகள் எமது நாட்டில் முடுக்கி விடப்பட்டன.

இலங்கையின் வர்த்தக வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் வர்த்தகத்தில் நிலையான பேறை அடைவதற்கும் சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள் பெரிதும் பங்களிப்பு நல்கியுள்ளன" என அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத் தரிசனம்

பண்டிதர், தமிழ்மாமணி, கவிஞர், பாடலாசிரியர், பேச்சாளர், எழுத்தாளர், நெறியாளர், விரிவுரையாளர் எனப் பல வகிபங்குகளைத் தன்னகத்தே கொண்ட இவர் 1942 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதி பருத்தித்துறை புலோலியில் பிறந்தார். பண்டிதர் வீ.பரந்தாமன் அவர்கள் இன்று நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப் புலமையாளர்களுள் ஒருவர். இற்றைவரை மரபுவழித் தமிழ்க் கல்வியை அதன் மாண்பு குன்றாது காப்பாற்றி எதிர்காலச் சந்ததிக்கு கையளிக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு செயற்பட்டு வருபவர். இயற்றமிழ் நூல்களை தமிழ்முனி கந்தமுருகேசனாரிடம் முறையாகக் கற்றுத் தேர்ந்த இவர் பதினொரு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். ஈழ விடுதலைப் போராட்டத்தில் 25 இற்கும் மேற்பட்ட எழுச்சிப் பாடல்களை எழுதி, மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டார். தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் ஆறு தடவைகள் பரிசுகளைப் பெற்றார். அமைதியான சுபாவமும் இன்சொல் பேசும் இயல்பும் யாவரோடும் அன்பாகப் பழகும் இதயமும் இவரிடம் நிறைந்திருக்கின்றது. பண்டிதர் வீ.பரந்தாமன் தன் கலைப்பாணி, தமிழ்ப்பணி பற்றி மனம் திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது.



## தமிழ்மாமணி,பண்டிதர் வீ.பரந்தாமன்
(ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியர்)
## அவர்களுடனான சந்திப்பு

♦ **மரபுக் கல்வியில் அதிசிறந்தவர்களில் ஒருவராகத் திகழ்கின்றீர்கள். இந்த மரபுக் கல்வியை எப்படிப் பெற்றுக் கொண்டீர்கள்?**

தென்புலோலியில் வறுமையுற்ற ஒரு குடும்பத்தில் பிறந்தேன். நான் இரண்டாவது பிள்ளை. எனக்கு உடன் பிறந்தோர் ஐவர் ஆண்களும் இருவர் பெண்களு மாக எழுவராவர். தொடக்கக் கல்வியை புற்றளைப் பள்ளியில் பெற்றேன். பின்னர் கரவெட்டி விக்னேசுவராக் கல்லூரியில் ஆறாம் வகுப்பிலிருந்து கற்றேன். ஒன்பதாம் வகுப்பிலிருந்து ஆங்கில மொழிமூலம் கற்று க.பொ.த. (சா/த) தேர்வில் விஞ்ஞான மாணவனாகத் தேறினேன். தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டு, தொழில், கொண்டாட்டம் தொடர்பான பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் முதலிய வாய்மொழி இலக்கியங்களின் இன்பத்தை நாள்தோறும் நுகரும் சூழலில் வளர்ந்தேன். இந்தச் சூழலே எனக்குத் தமிழின்பத்தைத் தந்து தமிழுணர்வை ஊட்டியது. அது வளர்ந்து ஆழமான மொழிப் பற்றை ஏற்படுத்தியது. இம்மொழிப்பற்றே இனப்பற்றையும் நாட்டுப் பற்றையும் என்னுள் வளர்த்தது எனலாம். தமிழ்த் தாத்தா கந்த முருகேசனார் எங்கள் ஊரிலேயே தோன்றினார். அவருடைய "தமிழகம்" அவரது சிறு குடிலுக்கு பெயர். என் தந்தையார் கந்தமுருகேசனாருக்கு சிறுவயதுப் பருவத்திலிருந்து நண்பராய் இருந்தார். எனது கல்லூரிப் படிப்பு நின்ற போது, தமிழ் கற்க வேண்டும் என்ற ஆவல் என்னுள் பெருகியது. எனது தந்தையார் பெரிதும் ஆர்வத்தோடு என்னை கந்தமுருகேசனாரிடம் போக்க வைத்தார். இது நிகழ்ந்தது 1959ஆம் ஆண்டிலாகும். கந்த முருகேசனார் தமிழகத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்திக் கொண்டிருந்தார். திண்ணைப் பள்ளிகளிலே அரிவரிப்பிள்ளை முதல் முதியோர் வரை கற்றுச் சென்றார்கள். தமிழ், எண் கணிதம், தருக்கம், அரசியல், மெய்யியல், சமூகவியல் முதலானவற்றின் அறிவு புரட்சிகரமாகவும், உண்மையாகவும் கற்பிக்கப்பட்டது. அவரது திண்ணைப் பள்ளியில் எனது தமிழ்க் கல்வி, குருகுலக் கல்வி முறையாக மலர்ந்து சிறந்தது. ஓராண்டு பால பண்டிதர் கல்வியையும் இரண்டாண்டுகள் பண்டிதர் கல்வியையும் கற்று ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தில் இரண்டு பரீட்சைகளிலும் சித்தியடைந்தேன். அவர் இறக்கும் வரை அவருடனேயே குரு குல வாழ்வு வாழ்ந்தேன். அவரிடம் பாடம் கேட்டதால் பெற்ற அறிவை விட அவருடன் வாழ்ந்ததால் பெற்ற அறிவே மிகுதியாகும். எனக்கு இன்றுள்ள அறிவு, திறன்,மனப்பாங்கு, ஆளுமை ஆகியவற்றின் கணிசமான பகுதி எனது குருவின் அருளினால் என்னை அடைந்ததே.

**தமிழ்க் கொடுமையும், கொச்சையும் பெருகி, இனிமையும் மேன்மையும் கெட்டுப் போய்க் கிடக்கிறது. தமிழ் தாழ் நிலையுற்றுச் செத்துக் கொண்டிருக்கிறது**

♦ **தமிழ்மொழியறிவு குறைந்துள்ளமைக்குக் காரணம் எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?**

பாடசாலைகளில் தமிழ்மொழி 1999 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புதிய கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து இறங்கு முகங் கண்டு வருவதை செவ்விய தமிழறிஞரும் கல்வியியலாளருமாக இருக்கக்கூடிய யாவரும் புரிந்து கொண்டிருப்பர். இதுவரை அதனை நோக்காதவர்கள் இருந்தால் அக் காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வந்த தமிழ்மொழி தமிழ் இலக்கியப் பாட நூல்களை வரிசையாக வைத்து அவற்றின் தரங்களையும் மொழி வழு-வழா நிலைகளையும் ஆராய்ந்து பார்த்தால் உண்மை நிலை புரிந்து கொள்வர். மாணவர் ஒருவர் பதின்மூன்றாண்டுகள் பாடசாலையில் தமிழ் மொழியை அதுவும் தன் தாய்மொழியைப் பயின்றும் க.பொ. த.(உ/த)பெறுபேற்றில் கீழ்மட்ட அல்லது தவறிப் போன நிலையில் இருப்பாரேயானால் அதன் காரணம் ஆழத்தில் இருப்பது அறிவுடையோருக்குப் புரியாமல் போகாது. பாடசாலை ஆசிரியர் இரங்கத்தக்கவர். பாட சாலை மாணவரை வாசிக்கச் சொல்லுவது அல்லது தாம் வாசித்துக் காட்டுவது பாடத்தினுள்ள சரி, பிழை ஆராய்வதில்லை. ஒரு வேளை பாடம் அவருக்கும் விளங்குவதில்லை. பெரும்பாலான மாணவர் "தமிழ் தானே வரும்" என்னும் மனப்போக்குடையவர். வீட்டில் தொலைக்காட்சி பார்ப்பதில் பெரும் பொழுதைக் கழிப்பர். கைத்தொலைபேசி கொண்டு காலத்தை வீணே கழிப்பர். இத்தகைய மாணவருக்குத் தமிழ் தானேயும் வருமா? மொழிதான் மாந்தரின் அறிவு. அம்மொழியின் அடிப்படையிலேயே மக்கள் இனம் பெருக்கப் பெற்று சமுதாயத்தைச் சேர்ந்து வாழ்கின்றனர். மொழி சீர்குலைந்தால் இனமும் சமுதாய அமைப்பும் கட்டழிந்து போகும். மரபு மாறாத இலக்கணம் இலக்கிய அறிவே முதலில் மாணவருக்கு புகட்டப்பட வேண்டும். உயர் நிலைக் கல்வியில் அத்துறையை விரும்பும் மாணவருக்கு அவர் மரபு வழி மொழிக் கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்றவராயின் மொழி நூற்றுறையில் தெளிந்த அறிவும் ஆற்றலும் உள்ள நல்லாசிரியரால் கற்பிக்கப்பட வேண்டும். கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில்1990ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நூலாக்கக் குழுவில் இருந்த உண்மைத் தமிழறிஞர் ஒருவரே இப்பொழுது இல்லை என்பதும் உண்மையே. புதிய கருத்துக்களைக் கற்பிப்பதற்கும் காலம் ,இடம் முதலிய அறிந்து செயலாற்றல் வேண்டும். மாணவரிடையே அவர் முன் பெற்ற அடைவுகளில் ஒரு முதிர்ச்சி ஏற்பட்ட பின்பே புதியவை புகட்டப்படல் வேண்டும். இக் காலம் தமிழ்க் கொடுமையும், கொச்சையும் பெருகி இனிமையும் மேன்மையும் கெட்டுப் போய்க்கிடக்கிறது. தமிழ் தாழ் நிலையுற்றுச் செத்துக் கொண்டிருக்கிறது. தமிழ் வீழ்ச்சியை நிமிர்த்த வேண்டுமென்றால் தமிழ்க் கல்வியை தமிழை நன்கறிந்த தமிழ்ப் பற்றுள்ள பேரறிஞரே திட்டமிடவும் தமிழிற் புலமையுடைய நல்லாசிரியர் கற்பிக்கவுமான ஒரு காலம் வரல் வேண்டும். வருமா?

♦ **தாங்கள் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் பற்றி...?**

1968- மனிதரும் கடவுளும், 1975- தமிழ் ஒன்பதின் பயிற்சி விடைகள், 1986 -தமிழ் மலர், 1990 -புதியதோர் புறம்(ஒலிநாடா),1995- தமிழ் நடந்த தடங்கள், 1996- கொரிலாப் போர் விரகுகள், 2001- பண்டைக் குமரியும் பழங்குடித் தமிழரும், 2005- திருக்குறளில் செந்தமிழாட்சி, 2004- வேரடி வழி தமிழ் சொற்பிறப்பியல், 2008- அருகிவரும் பழந்தமிழ்ப் பேச்சு வழக்கு சொற்பிறப்பியல் அகராதி "அ" மட்டும், 2016 தமிழர் உறவுமுறை சொல் வழக்கு அகராதி ஆகிய பத்து நூல்களையும் ஓர் ஒலி நாடாவையும் வெளியிட்டுள்ளேன்.

♦ **தாங்கள் எழுதிய எழுச்சிப் பாடல் களை மக்கள் பெரிதும் விரும்பிக் கேட்டனர். தாங்கள் எழுதிய எழுச்சிப் பாடல்கள் பற்றி...?**

இது வரைக்கும் நான் 25 இற்கு மேற்பட்ட எழுச்சிப் பாடல்களைப் பாடியுள்ளேன். எழுச்சிப் பாடலின் தலை சிறந்த பாடகர் எஸ்.ஜீ. சாந்தனும் ஏனைய (ஆண்-பெண்) பாடகர்களும் பாடியுள்ளார்கள். சிறுவயதில் நாட்டார் பாடல்களில் நாட்டம் கொண்டு நானும் பாடல்களை எழுத வேண்டும் என்ற நோக்கோடு தமிழ்த் தாத்தா கந்த முருகேசனாரிடம் பண்டிதர் கல்வியைப் பெற்றதனால் இப் பாடல்களை எழுத முடிந்தது. இப் பாடல்களுக்காக ஆறு தடவைகளுக்கு மேல் தேசியத் தலைவர் வே.பிரபாகரனினால் பரிசுகளைப் பெற்றேன்.

"மானம் ஒன்றே வாழ்வெனக் கூறி வழியில்
நடந்தான் மாவீரன் ...
அவன் போன வழியில்
புயலென எழுந்து போரில் வந்தார் புலி வீரர்"

எனது இந்தப் பாடலினை மக்கள் பெரிதும் அதிகமாக விரும்பிக் கேட்டனர்.

♦ **தாங்கள் நெறியாள்கை செய்த நாடகங்கள் பற்றி...?**

அறியாமையின் விடிவு, வாழ விடுங்கள், ஒற்றைச்சிலம்பு,காடு காத்த காவலன், வீழ்ந்த யாழ்ப்பாணம் ஆகிய பல நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்து மேடையேற்றினேன்.

**தாங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி...?**

2002- நல்லாசிரியர் விருது கிளிநொச்சிக் கல்வி வலயம், 2014-கலைப் பரிதி விருது பருத்தித்துறை பிரதேச செயலகப் பண்பாட்டுப் பேரவை, 2014- கலை வாரிதி வடமராட்சிக் கல்வி வலயம், 2017- தமிழ்மாமணி அகில இலங்கை இழங்கோ கழகம்.

**நேர்காணல்:**
**ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## போக்குவரத்து விதி மீறல்

# கையெடுத்து கும்பிட்ட அதிகாரி மன்னிப்புக்கேட்ட சாரதி



(மடகசிரா)

ஆந்திர பிரதேச மாநிலத்திலுள்ள அனந்தபூரில் மடகசிரா பொலிஸ் உத்தியோகத்தராக இருக்கிறார் சுபகுமார். இவர் போக்குவரத்தை ஆய்வு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவ்வழியாக வந்த ஒரு நபர் 4 பேரை மோட்டார் சைக்கிளில் அழைத்து சென்றார்.

அவரை இடைமறித்த பொலிஸ் அதிகாரி, சுபகுமார் அபராதம் விதிக்கவில்லை. குரலை உயர்த்தி கண்டிக்கவில்லை மாறாக கையெடுத்து கும்பிட்டார். இதனைக் கண்டு முதலில் அதிர்ச்சி அடைந்த அந்த குடும்பத் தலைவர். அதன் பின்னர் தான் செய்த தவறை உணர்ந்து பொலிஸ் அதிகாரியிடம் மன்னிப்புக் கேட்டார். இனி ஒரு போதும் போக்குவரத்து விதிகளை மீற மாட்டேன் என உறுதி அளித்தார்.

இது குறித்து ஊடகங்களுக்குப் பேட்டியளித்த சுபகுமார், போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுமாறு தொடர்ந்து நாங்கள் விழிப்புணர்வு ஏற்படுத்திவருகிறோம். ஆனாலும், அதை சிறிதும் பொருட்படுத்தாமல் இவ்வாறாக அத்துமீறும் நபர்களைப் பார்க்கும்போது சில நேரங்களில் விரக்தியாக இருக்கிறது.

அன்றையதினமும் எனக்கு அப்படிப்பட்ட விரக்தியே ஏற்பட்டது. அந்த வேளையில் எனக்கு அவரைத் திட்ட வேண்டும் எனத் தோன்றவில்லை. எனவேதான் கைகூப்பி புத்தியுரைத்தேன். அன்று, அவருக்கு நான் அபராதம்கூட விதிக்கவில்லை. மேலும், குழந்தைகள் முன்னால் கண்டிப்புடன் நடந்து கொள்ள விரும்பவில்லை" எனக் கூறியுள்ளார்.

தலைக்கவசம் உயிர்க் கவசம் என்பது வாசித்து கடந்து செல்வதற்கான வார்த்தைகள் அல்ல. வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நெறி என்பதை அனைவரும் உணர்ந்து செயற்படுவோம் என்று அறிவுரை வழங்கினார். (இ)

# ஜப்பானை நிர்மூ

# வடகொரியா



***(பியாங்யாங்)***

***அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு மூன்றாம் உலகப்போருக்கு ஜப்பான் தயாரானால் அந்த நாட்டை தவிடு பொடியாக்கி; நிர்மூலமாக்கி விடுவோம் என்று வடகொரியா பகிரங்கமாக எச்சரித்துள்ளது.***

ஆனால் வடகொரியா தன்னிலையில் இருந்து மாறவில்லை. மாறாக கடந்த மாதம் மீண்டும் ஒரு ஏவுகணையை [illegible] சோதனை நடத்தியது.

சுமார் 3200 கிலோமீற்றர் வரை செல்லக்கூடிய சக்திவாய்ந்த ஏவுகணை வடகொரியாவின் சுனான் பகுதியில் இருந்து கிழக்கு நோக்கி செலுத்தப்பட்டு, ஜப்பான் நாட்டின் மீது பறந்து சென்று, பசுபிக் கடலில் விழுந்தது. ஜப்பான் நாட்டில் உள்ள குவாம் தீவில் அமைக்கப்பட்டுள்ள அமெரிக்க இராணுவ தளத்தை குறிவைத்து. மிரட்டு

வடகொரியா அண்மையில் 6ஆவது தடவையாக அணுகுண்டு சோதனை நடத்தியது. அதைத்தொடர்ந்து அமெரிக்க முயற்சியால் ஐ.நா. பாதுகாப்பு சபை மூலம் வடகொரியா மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டது.

இதன்மூலம் வட கொரியா ஏவுகணை சோதனைகள் மற்றும் அணுஆயுத சோதன்னையை நிறுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது.

# டெங்கைக் கட்டுப்படுத்த போர்க்கால நடவடிக்கை

## தமிழக அரசு அறிவிப்பு



(சென்னை)

டெங்கு நோயைக் கட்டுப்படுத்த போர்க்கால அடிப்படையில் உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருகிறது என உள்ளூராட்சி துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்துள்ளார்.

சென்னையிலுள்ள குடிநீர் மற்றும் வடிகால் வாரிய அலுவலகத்தில் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தலைமையில் ஊள்ளூராட்சி அதிகாரிகளின் ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சித்துறை அமைச்சர் வேலுமணி தலைமையில் உள்ளூராட்சி அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். டெங்கு காய்ச்சலைத் தடுப்பது மற்றும் தொடங்க இருக்கும் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. அதன்பின் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி செய்தியாளர்களிடம் கூறியதாவது.

டெங்குக் காய்ச்சலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உள்ளூராட்சித்துறை எடுத்து வருகிறது. தொற்று நோய்களை தடுக்கவும் அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறிப்பாக, டெங்கு நோயைக்கட்டுப்படுத்த போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி ஊழியர்கள் தவிர, பிற ஊழியர்களும் தொற்றுநோய் தடுப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். டெங்கு தொடர்பாக தனியார் வைத்தியசாலைகளிலும், உள்ளூராட்சி அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்கிறார்கள். காய்ச்சல் பாதித்தவர்களை உள்ளூராட்சி அதி காரிகள் நேரில் சென்று சந்தித்து. அவர்களது குறைகளை கேட்டு வருகின்றனர்.

ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி என அனைத்து அமைப்புகளிலும் பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர். கிராமங்களில் 300 வீடுகளாக பிரித்துக் கொண்டு பணியாளர்கள் நோய்த்தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை கொசு ஒழிப்புப் பணிகளில் ஈடுபட, ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாவட்டங்களில் உள்ள குழுக்கள், ஒவ்வொரு பகுதியாக சென்று டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ளது. இதையொட்டி அதிக அளவு மழை பெய்யும இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனத் தெரிவித்தார். (இ)

## சர்க்கரை ஆலையில் வேதிவாயு கசிவு 300 மாணவர்கள் உடல் நலம் பாதிப்பு



(லக்னோ)

உத்தரப்பிரதேசம் மாநிலம் ஷாம்லியில் சர்க்கரை ஆலையில் இருந்து வேதிவாயு கசிந்ததால் அருகிலுள்ள பாடசாலையில் உள்ள சுமார் 300 மாணவ, மாணவியர் உடல் நலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

உத்தரப்பிரதேசம் மாநிலம் ஷாம்லியில் சர்க்கரை ஆலையில் நேற்று முன்தினம் காலை வாயு எரிகலனில் இருந்து வேதிவாயு கசிந்தது. இந்த வாயுக்கசிவால் ஆலைக்கு அருகில் உள்ள பாடசாலையில் படிக்கும் சுமார் 300 மாணவ, மாணவியருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு உடனே அழைத்துச் செல்லப்பட்டனர்.

முதலுதவி சிகிச்சைக்கு பின்னர் பெரும்பாலான மாணவர்கள் வீட் டுக்கு அனுப்பப்பட்டதாகவும், 36 மாணவர் கள் மட்டும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அம்மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த வேதிவாயு கசிவு விவகாரம் குறித்து அம்மாநில முதல்வர் யோகி ஆதித்ய நாத் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். (இ)

# வடகொரியாவை அச்சுறுத்தும் வகையில் அமெரிக்க விமானங்கள் போர்ப் பயிற்சி

(வோஷிங்டன்)

கொரிய தீபகற்பத்தின் மீது முக்கியத்துவம் வாய்ந்த இரு குண்டு வீச்சு விமானங்களை செலுத்தி, தென் கொரியாவுடன் ஒரு கூட்டு இராணுவ பயிற்சியை நடத்தியுள்ளது அமெரிக்கா.

பி-1பி ரக குண்டுவீச்சு விமானங்களும், தென் கொரியாவின் இரண்டு எஃப்-15கே ஜெட் போர் விமானங்களும் கொரிய கடற்பகுதி மீது பறந்து வானில் இருந்து நிலத்தைத் தாக்கும் ஏவுகணை செலுத்தும் பயிற்சியில் ஈடுபட்டன.

வடகொரியாவின் அணு ஆயுத சோதனைகளைத் தொடர்ந்து பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் இந்த இராணுவப் பயிற்சி நடை பெற்றுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன், தனது 6ஆவது ஆணு ஆயுத சோதனையை நடத்திய வட கொரியா, ஜப்பான் வான்வெளியைக் கடந்து செல்லும் வகையில் இரு ஏவுகணைகளை வீசியிருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு, அமெரிக்க பசுபிக் பிராந்தியமான குவாம் தீவில் இருந்து அமெரிக்காவின் குண்டு வீச்சு விமானங்கள் விண்ணில் சீறிப் பாய்ந்து தென் கொரிய வான் வெளியில் நுழைந்தன. பின்னர், கிழக்கு கடற்கரை மற்றும் யெல்லோ கடற் கரையில் குண்டுகளை வீசிப் பயிற்சியில் ஈடுபட்டதாக தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும், வட கொரியாவுக்கு எதிரான நீட்டிக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு அங்கமாக



இப்பயிற்சி மேற்கொள்ளப்பட்டதாக தென் கொரியா தெரிவித்துள்ளது. இந்தப் போர் பயிற்சியில் ஜப்பானின் விமானப் படையும் பங்கேற்றதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வட கொரியாவிடமிருந்து வரும் அச்சுறுத்தல்களுக்கு பதில் கொடுக்கும் வழிமுறைகள் குறித்துப் பேசுவதற்காக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தேசிய பாதுகாப்பு குழுவின் மூத்த அதிகாரிகளை சந்தித்ததாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## லமாக்குவோம்
## நேரடி மிரட்டல்

வதற்காக இந்த ஏவுகணை செலுத்தப்பட்டதாக தெரிகிறது.

வடகொரியாவின் இந்த அத்துமீறலை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை அவசரமாக கூடியது. இந்த கூட்டத்தின்போது பாதுகாப்புச் சபையில் உள்ள 15 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் வடகொரியாவின் போக்குக்கு கண்டனம் தெரிவித்தனர். வடகொரியா மீது மேலும் சில புதிய தடைகளையும் அமெரிக்கா விதித்தது.

வடகொரியாவுடன் இனி அமைதி பேச்சுவார்த்தை நடத்துவதில் பயனில்லை. தகுந்த வழியில் பாடம் கற்பிக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அமெரிக்காவுடன் சேர்ந்துகொண்டு ஜப்பான் போருக்கு தயாரானால் அந்த நாட்டை தவிடுபொடியாக்கி நிர்மூலமாக்குவோம் என்று வடகொரியா நேற்று எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக, வடகொரிய அரசுக்கு ஆதரவான செய்தி நிறுவனம் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் போர் தரகு வேலைகளை ஜப்பான் சாதகப்படுத்திக் கொள்ள முயற்சித்தால் இதில் ஜப்பான் வெற்றிபெற முடியாது.

வடகொரியப் படைகளின் தாக்குதல்களை ஜப்பானால் எதிர்கொள்ள முடியாது.

கொரிய தீபகற்பத்தில் போர் வெடித்தால் ஜப்பானால் ஒரு போதும் பாதுகாப்பாக இருக்க முடியாது. போருக்காக அங்கு நிலைநிறுத்தப்படும் (குவாம் தீவில் உள்ள அமெரிக்க இராணுவ முகாம் உட்பட) அனைத்தும் தவிடு பொடியாகிவிடும். அமெரிக்காவின் ஆதரவு என்ற பலத்துடன் போருக்கான ஆயத்தத்தில் ஜப்பான் ஆட்சியாளர்கள் இறங்கினால் மீளமுடியாத துரதிர்ஷ்டத்தை சந்திக்க நேரிடும் என்று கடுமையாக எச்சரிக்க விரும்புகின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. (இ)

# அமெரிக்க - தென்கொரிய போர் திட்டங்களை திருடிய வடகொரியா

(பியாங்யாங்)

வடகொரியாவை சேர்ந்த ஹேக்கர்கள், தென் கொரியாவின் இணையத்தை ஊடுருவி, வட கொரியத் தலைவர் கிம் ஜாங் உன்-ஐ கொல்ல வைத்திருந்த திட்டம் உள்ளிட்ட பல ராணுவ ஆவணங்களை திருடியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

தனது நாட்டின் பாதுகாப்பு அமைச்சகத்தில் இருந்து இந்த தகவல் வெளிவந்ததாக, தென் கொரிய நாடாளுமன்ற உறுப்பினர், ரீ சியொல் -ஹீ கூறினார்.

திருடப்பட்ட அந்த ஆவணங்கள், அமெரிக்கா மற்றும் தென் கொரியாவால் வடிவமைக்கப்பட்ட போர்க் கால அவசரத் திட்டங்களை கொண்டிருந்தன.

அந்த ஆவணங்களில், தங்களது நட்பு நாடுகளின் மூத்த தளபதிகளுக்கு வழங்கப்பட்ட அறிக்கைகளும் இருந்தன.

இந்தத் தகவல் குறித்து தமது கருத்துத் தெரிவிக்க இதுவரை தென் கொரிய பாதுகாப்பு அமைச்சகம் மறுத்து வருகிறது.

இணையத்தை ஊடுருவிய ஹேக்கர்கள், தென் கொரியாவின் சிறப்பு படைகளின் திட்டங்கள் குறித்த கோப்புகள், தென் கொரியாவில் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் இராணுவ மையங்கள் குறித்த தகவல்களையும் திருடி இருக்கிறார்கள்.

"ஏறத்தாழ 235 ஜிபி அளவுள்ள இராணுவ கோப்புகள் ஒருங்கிணைந்த பாதுகாப்புத் தகவல் மையத்திலிருந்து திருடப்பட்டுள்ளன. அதில் 80 சதவீத கோப்புகள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை" என்று தென்கொரிய ஆளுங் கட்சியை சேர்ந்தவரும் நாடாளுமன்ற பாதுகாப்புக் குழு உறுப்பினருமான ரீ கூறினார்.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதமே இந்த இணைய ஊடுருவல் நடந்திருக்கிறது.

பெருமளவில் தகவல் திருடப்பட்டுள்ளது. இந்த இணைய தாக்குதல், வட கொரியாவின் தூண்டுதலினால் நிகழ்ந்திருக்கலாம் என்று மே மாதம் தென் கொரியா கூறியது. ஆனால், என்ன தகவல்கள் திருடப்பட்டன என்பது குறித்து எதுவும் கூறவில்லை. ஆனால், வட கொரியா இதனை மறுத்தது.

தென் கொரிய அரசினால் நடத்தப்படும் யொன்ஹப் செய்தி சேவை நிறுவனம், அண்மை ஆண்டுகளில், தமது நாட்டின் மீது அண்டை நாடான வடகொரியா சைபர் தாக்குதல்களைத் தொடுத்து வருவதாகவும், அவற்றில் பெரும்பாலானவை, தமது அரசாங்க இணையத்தளங்களை குறிவைத்து தொடுக்கப்படும் தாக்குதல்கள் என்று செய்தி வெளியிட்டு இருந்தது.

பயிற்சி பெற்ற பல வடகொரிய ஹேக்கர்கள் சீனா உள்ளிட்ட வெளிநாடுகளில் தங்கியிருந்து செயற்படுவதாக சந்தேகிக்கப்படுகிறது. (இ)




# காட்டலோனியா தனி நாடு பிரகடனம் திடீரென ஒத்திவைப்பு

(மாட்ரிட்)

ஸ்பெயினில் இருந்து காட்டலோனியா விடுதலை பெற்று தனி நாடாகி விட்டதாக ஒரு பிரகடனத்தை காட்டலோனியா தன்னாட்சிப் பிரதேசத்தின் ஜனாதிபதி கார்லஸ் பூஜ்டியமோன் மற்றும் பிராந்தியத் தலைவர்கள் கையெழுத்திட்டு வெளியிட்டனர். எனினும், இந்த விடுதலைப்பிரகடனத்தை செயற்படுத்துவதை சில வாரங்களுக்கு நிறுத்தி வைப்பதாக பூஜ்டியமோன் அறிவித்தார்.

மாட்ரிட்டில் உள்ள ஸ்பெயின் அரசிடம் பேச்சுவார்த்தை நடத்துவதை சாத்தியப்படுத்தும் வகையில் விடுதலைப் பிரகடனத்தை செயற்படுத்துவது நிறுத்தி வைப்பதாக அவர் அறிவித்தார்.

"சுதந்திரமான, இறையாண்மை உள்ள நாடாக காட்டலோனியாவை அங்கீகரிக்க வேண்டும்" என்று அந்தப் பிரகடனம் வேண்டுகோள் விடுக்கிறது.

ஒக்டோபர் முதலாம் திகதி நடந்த கருத்து வாக்கெடுப்பில் காட்டலோனியா பிரிந்து செல்வதற்கு ஆதரவாக 90 சதவீத மக்கள் வாக்களித்ததாக அறிவிக்கப்பட்டது.

இந்த வாக்கெடுப்பின் முடிவுகள் காரணமாக காட்டலோனியா விடுதலை பெறுவதற்கான உரிமையைப் பெற்றதாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காட்டலோனியா நாடாளுமன்றத்தில் பேசிய பூஜ்டியமோன் தெரிவித்தார்.

"காட்டலோனியக் குடியரசை சுதந்திரமான இறையாண்மை மிக்க அரசாக நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் அங்கீகரிக்கவேண்டும்," என்று விடுதலைப் பிரகடனம் வேண்டுகோள் விடுக்கிறது.

மக்களின் விருப்பம், ஸ்பெயினிடம் இருந்து காட்டலோனியா தனிநாடாகப் பிரிந்து செல்ல வேண்டும் என்பதே என்று காட்டலோனிய நாடாளுமன்றத்தில் கூறிய பூஜ்டியமோன், அதே நேரம் தாம் இந்த விடயத்தில் பதற்றத்தைத் தணிக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

"நாமெல்லாம் ஒரே சமூகத்தின் அங்கங்கள். எனவே சேர்ந்தே முன்னோக்கிச் செல்லவேண்டும். முன்னேறிச் செல்வதற்கான ஒரே வழி ஜனநாயகமும், அமைதியும் தான்" என்று அவர் கூறினார்.

காட்டலோனியா ஸ்பெயினின் நாட்டிலுள்ள தன்னாட்சி பிரதேசம்



ஆகும். தன்னாட்சி பிரதேசமாக இருந்த காட்டலோனியாவுக்கு, கடந்த 2005 ஆம் ஆண்டு, காட்டலோனிய மொழி, வரி மேலாண்மை, நீதித்துறை நிர்வாகம் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில், அப்பகுதிக்கு "நாடு" என்னும் சிறப்பு அந்தஸ்தை வழங்கி ஸ்பெயின் நாட்டு அரசியலமைப்பு திருத்தப்பட்டது.



அந்தத் திருத்தத்தை ஸ்பெயினின் அரசியலமைப்பு நீதிமன்றம் 2010 ஆம் ஆண்டு இரத்து செய்தது. தனிநாடு கோரிக்கையை வலுப்பெறச் செய்தது.

காட்டலோனிய நாடாளு மன்றத்தில் பிரிவினைக்கான ஆதரவு பெரும்பான்மையாக இருந்தாலும், ஸ்பெயின் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் உட்பட பெரும்பாலானோர் இதற்கு எதிராகவே உள்ளனர்.

"திரும்பி வர முடியாத பாதையை தேர்வு செய்ய வேண்டாம் என்றும், தன்னிச்சையாக சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட வேண்டாம்," என்றும் ஸ்பெயின் அரசு பூஜ்டியமோனுக்கு அறிவுறுத்தி இருந்தது. இந்நிலையில் நாடாளுமன்றம் கூடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக காட்டலோன் கட்சியின் தலைவர்கள் கூடிப் பேசியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மக்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழைவதை தடுக்கும் வகையில் அங்குள்ள பாதைகள் மூடப்பட்டு, பொலிஸார் குவிக்கப்பட்டனர். முன்னதாக, கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி ஸ்பெனிலிருந்து காட்டலோனியா மாகாணம் பிரிந்து தனி நாடாக அறிவிப்பது குறித்து நடத்தப்பட்ட பொது மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பில் 43 வீத காட்டலோனியா மக்கள் வாக்களித்தனர்.

வாக்களித்த 2.3 மில்லியன் மக்களில் 90 வீதம் பேர் சுதந்திரத்துக்கு ஆதரவாக வாக்களித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஸ்பெயினின் உச்சநீதிமன்றம் காட்டலோனியா வின் பொது மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பே செல்லாது என்று அறிவித்திருந்தது.

வாக்கெடுப்பிற்கு பிறகு காட்டலோனியா மாகாணம் மட்டுமல்லாமல் ஸ்பெயினின், பார்சிலோனா உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் சுதந்திரத்திற்கு ஆதரவு தெரிவித்தும், இணைந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் பேரணிகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சட்டத்தை மீறியவரை தாக்கியது தவறல்ல

## அஜித் பி.பெரேரா விளக்கம்

அம்பாந்தோட்டையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் நபர் ஒருவரின் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை அரசாங்கம் அனுமதிக்கவில்லை என பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

அடிவாங்கிய நபர் அந்த ஆர்ப்பாட்டத்தில் ஓர் ஊடகவியலாளராக கலந்து கொண்டாரா அல்லது ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவராக கலந்து கொண்டாரா என்பதில் சிக்கல் நிலை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவர் மீது தாக்குதல் நடத்த சட்டத்தில் இடமில்லையெனினும், நீதிமன்ற உத்தரவை மீறி சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்துவது குற்றமாகாது எனவும் பிரதி அமைச்சரும் சட்டத்தரணியுமான அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

கொழும்பு ஆனந்தா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பிரதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# நம்பிக்கையூட்டக்கூடிய வகையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி

## அனைத்துலக நாணய நிதியம் அறிக்கை

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி நம்பிக்கையூட்டக் கூடிய வகையில், இருக்கும் என்று அனைத்துலக நாணய நிதியம் மதிப்பீடு செய்துள்ளது.

உலகப் பொருளாதார கண்ணோட்டம்என்ற அனைத்துலக நாணய நிதியத்தின் அறிக்கை நேற்று முன்தினம் வோஷிங்டனில் வெளியிடப் பட்டுள்ளது.

இதற்கமைய, உலகப் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டில், 3.6 வீதமாகவும், 2018ஆம் ஆண்டில், 3.7 வீதமாகவும் இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கடுமையான பொருளாதார நெருக்கடி எதிர்கொள்ளப்பட்ட 2016ஆம் ஆண்டு உலக பொருளாதார வளர்ச்சி 3.2 வீதமாக இருந்தது.

அதேவேளை இந்த ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 4.7 வீதமாக நம்பிக்கையூட்டக் கூடிய வகையில், இருக்கும் என்றும்,அனைத்துலக நாணய நிதியம் எதிர்வு கூறியுள்ளது. இது, 2018ஆம் ஆண்டில், 4.8 வீதமாக அதிகரிக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இயற்கை அழிவுகள் மற்றும் பின்தங்கிய சீர்திருத்தங்களால், இந்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி 4.5 வீதத்துக்கு குறைவாகவே இருக்கும் என்ற இலங்கை மத்திய வங்கியின் கணிப்புக்கு மாறாக, இந்தக் கணிப்பு அமைந்துள்ளது.

எனினும், தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பீடு செய்யும் போது, இலங்கை பின்தங்கிய நிலையில் உள்ளது.

2017இல் 6.7 வீதமாக உள்ள இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2018இல் 7.4 வீதமாக அதிகரிக்கும் என்றும்அனைத்துலகநாணய நிதியம் எதிர்வு கூறியுள்ளது.

பாகிஸ்தானில், இந்த ஆண்டு 5.3 வீதமும், அடுத்த ஆண்டில் 5.6 வீதமும் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. பங்களாதேஷ் இந்த ஆண்டில் 7.1 வீத பொருளாதார வளர்ச்சியுடன் தெற்காசியப் பிராந்தியத்தில் முதலிடத்திலுள்ளது. (இ-7)

# பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவானுடன் பிரெஞ்சு கூட்டுப்படைத் தளபதி சந்திப்பு



(கொழும்பு)

இந்தியப் பெருங்கடலில் நிலைகொண்டுள்ள பிரெஞ்சுப் படைகளின் கூட்டுத் தளபதி றியர் அட்மிரல் டிடியர் பியாட்டன் (Rear Admiral Didier Piaton) பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

பரஸ்பர ஈடுபாடுள்ள, இருதரப்பு நலன்கள் சார்ந்த விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான பிரெஞ்சுத் தூதுவர் ஜீன் மார்ட்டின் சூவும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

கொழும்பில் நடந்த காலி கலந்துரையாடல் என்ற பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்க, பிரெஞ்சுப் படைகளின் கூட்டுத் தளபதி றியர் அட்மிரல் டிடியர் பியாட்டன் இலங்கை வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.நா, அமெரிக்காவிடம் முறையிட்ட நாமல்

(கொழும்பு)

அமைதியாகப் போராட்டம் நடத்திய தம்மை பொலிஸார் கைது செய்திருப்பதாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூத்த மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, ஐ.நா.மனித உரிமை ஆணையாளரிடமும், அமெரிக்காவிடமும் முறையிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று முன்தினம் டுவிட்டரில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

அதில் தேசிய சொத்துக்களை விற்பதற்கு எதிராக அமைதியாகப் போராட்டம் நடத்திய எம்மில் 4 பேரை பொலிஸார் கைது செய்துள்ளது, எதிர்ப்புக் குரல்களை அடக்கும் செயல். என்று ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர், ஐ.நாவுக் கான அமெரிக்க தூதுவர் நிக்கி ஹாலே ஆகியோரை நோக்கி முறையீடு செய்யப் பட்டுள்ளது.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் ஐ.நா, அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு எதிராக கடுமையாக குரல் கொடுத்து வந்த மகிந்த ராஜபக்ஷ அணியினர், ஐ.நா மற்றும் அமெரிக்காவிடம் தஞ்சமடையத் தொடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



## இன்று ஒரு தகவல்

# நினைவும் பிரியமும்!

என்னைத் தெரியலையா? இல்லிங்களே! என்னாங்க இப்படி அடியோட மறந்துட்டீங்க? உம்... எங்களையெல்லாம் உங்களுக்கு எப்படி ஞாபகம் இருக்கும்? நாங்கள் என்ன அவ்வளவு பெரிய ஆளுங்களா?

இப்படி ஓர் உரையாடல் ஆரம்பித்தால் அது பெரும்பாலும் சோகக் காட்சியாகத் தான் முடியும்.

எப்படி இருக்கான் உங்கள் மகன் கார்த்திக்?, மகள் பிரியா என்ன படிக்கிறாள்?

அசத்திட்டீங்க போங்க! பத்து வருஷமாகியும் என் பிள்ளைங்க பேரைக் கூட மறக்காம வச்சிருக்கீங்களே! இப்படி ஆரம்பிக்கிற உரையாடல் மிக இனிய காட்சியாக அமையும். எவருக்கும் சந்தேகம் வேண்டாம்.

எல்லா மனிதர்களுக்குமே தங்களை யார் யார் நன்றாக ஞாபகத்தில் வைத்திருக்கிறார்கள் என்கின்ற கவலையும் அக்கறையும் மிக மிக அதிகம். இந்தப் பசிக்குத் தீனி போட்டு விட்டால் அவர்கள் நம்மிடம் காலம் காலமாக அடிமைகளாக (அன்புக்குத்தான்!) கிடப்பார்கள்.

மனிதர்களின் இந்த அடிப்படைப் பலவீனத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் பலர் ரயிலில் ஏறி அறிமுகமாகி இறங்குவதற் குள் உங்கள் உங்கள் பெயர் என்ன என்று மூன்று தடவை கேட்கிறவர்கள் மற்றவர்கள் இதயத்தில் ஒரு போதும் இடம் பிடிக்க முடியாது!

பல பேருடன் நமக்குச் சூழ்நிலை காரணமாக இடைவெளி ஏற்பட்டுப் போகும். மறுபடி பார்க்கும் போது அவரையும் அவரது குடும்பத்தையும் தமக்கு நன்றாக நினைவில் உள்ளது என்பதை நிரூபித்துவிட்டால் அந்த நட்புக்கும் உறவுக்கும் பிரமாதமான புதுப்பித்தல் நடக்கும் அப்படிங்களா? என்று ஆரம்பித்தால் அது மங்கி மங்கிப் போகும்.

நாம் எவ்வளவோ பேரைச் சந்தித்திருக்கிறோம். எல்லாரையும் நம்மால் நினைவில் வைத்துக் கொள்ள முடியாது. இதற்கு ஒரு வழியைப் பின்பற்றலாம். வீட்டிற்குத் திரும்பியதும் அன்றைக்குச் சந்தித்தவர்களைப் பற்றிச் சில நினைவுக் குறிப்புக்களை எழுதிக் கொள்ள வேண்டும். (விலாசத்துடன்)

ஒருமுறை ஒரு குடும்ப நண்பர் வீட்டிற்குப் போயிருந்தேன். வீடு வந்ததும் குடும்ப உறுப்பினர் பெயர்களையெல்லாம் மெல்ல நினைவு படுத்தி எழுதிக் கொண்டேன்.ரொம்ப நாட்கள் கழித்து அந்த நண்பர் போனில் பேசினார். பேசிக் கொண்டே அந்த நோட்டுப் புத்தகத்தைத் தேடி எடுத்து பக்கத்தைப் புரட்டித் தயாராக வைத்துக் கொண்டு ஒவ்வொரு வரையும் விசாரித்தேன். மறுமுனையில் அவர் போனில் மயக்கம் போட்டு விழாத குறைதான்.

எவ்வளவு பிரியம் மனதிற்குள் இருந்தாலும் பெயரை சம்பவங்களை சில சில நினைவுக் குறிப்புக்களைச் சரியாகச் சொல்ல முடியாமல் திணறினால் நம் அன்பைப் பிறர் சந்தேகிக்கிறார்கள். பிரியம் இல்லாவிட்டாலும் நினைவாக நான்கு கேள்வி கேட்டால் நாம் ஏகப்பிரியமாக இருப்பதாக எண்ணுகிறார்கள். இந்த எண்ணத்திற்கு நாமும் ஈடு கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

மற்றவர்களை அசத்துவதற்குப் பல வழிகள். அவற்றுள் இதுவும் ஒன்று.

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கணக்கியல் நிபுணர்கள் சங்கத்தின் மாநாடு ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்





இலங்கை கணக்கியல் நிபுணர்கள் சங்க வருடாந்த

மாநாடு - 2017 ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் பத்தரமுல்ல வோற்றஸ் எட்ஜ் ஹோட்டலில் நடை பெற்றது.

"மாற்றமுறும் சவால்களை வெற்றிகொள்வதற் காக அர்ப்பணித்தல்" எனும் தொனிப்பொருளிலான வருடாந்த மாநாடு 15 ஆவது தடவையாக நேற்று முன்தினம் ஆரம்பமாகி நேற்று நிறைவடைந்தது.

இந்த மாநாட்டின் மூலம் காலத்துக்கேற்ற தொனிப்பொருளுடன் தெரிவுசெய்யப்பட்ட துறை சார் நிபுணர்களின் அறிவை பரிமாறிக் கொள்வத ற்கான வாய்ப்பு கிடைக்கிறது. முதன்மை துறை யான கணக்கியல்சார் தலைப்புக்களுக்கு மேலதிக மாக நவீன தொழில்நுட்ப தாக்கங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுவது விசேடமானதாகும்.

2016 க.பொ.த. உயர்தர வணிகத்துறையில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்ற நிபுணி தனஞ்சனி ரூபசிங்க எனும் மாண விக்கான பரிசினை ஜனாதிபதி வழங்கினார்.

நிறுவன அனுசரணையாளர்களுக்கான விரு துகள் மற்றும் பரிசில்களும் வழங்கப்பட்டன. இலங்கை கணக்கியல் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் பட்டய கணக்காளர் ஜே.எம்.யூ.பி. ஜய சேகரவினால் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. (இ-7)

# பிணை முறி ஏலம் குறித்து பேசவில்லை

## மலிக், கபீர் சாட்சியம்

அமைச்சர்களான மலிக் சமர விக்கிரம மற்றும் கபீர் ஹாசீம் ஆகியோர் மத்திய பிணைமுறி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று சாட்சியமளித்தனர்.

ஆணைக்குழுவின் தலைவர் கே.ரி.சித்ரசிறி தலைமையிலான நீதிபதிகள், அமைச்சர்களிடம் விசாரணை நடத்தி சாட் சியங்களைப் பதிவு செய்தனர்.

சர்ச்சைக்குரிய பிணைமுறி விநியோகம் இடம்பெறுவதற்கு முதல் நாள் முற்பகல் வேளை யில் கூட்டமொன்று நடைபெற்ற தாக இதன்போது அமைச்சர்கள் இருவரும் கூறியுள்ளனர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக செலுத்த வேண்டியிருந்த 18 பில்லியன் ரூபாவை மீளச் செலு த்த வேண்டியதன் அவசியம் குறித்து இதன்போது கலந்துரை யாடப்பட்டதாக அவர்கள் குறிப் பிட்டனர். செலுத்த வேண்டிய தொகையில் மூன்று பில்லியன் ரூபா பெருந்தெருக்கள் அமைச்சி டம் உள்ளதாகவும் எஞ்சிய தொகை தேவைப்படுவதாகவும் கபீர் ஹாசீம் கூறியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் அமைச்சர் ரவி கருணா நாயக்க, கபீர் ஹாசீம், மலிக் சமரவிக்கிரம ஆகியோருடன் மத்திய வங்கி மற்றும் திறை சேரியின் அதிகாரிகள் கலந்து கொண்டதாக அமைச்சர்கள் இருவரும் ஆணைக்குழுவில் தெரிவித்தனர்.

மறுநாள் நடைபெறவுள்ள பிணைமுறி ஏலம் தொடர்பில் எந்தவொரு விடயமும் அன்றைய கூட்டத்தில் கலந்தாலோசி க்கப்படவில்லை எனவும் அமை ச்சர்கள் குறிப்பிட்டனர். அர்ஜுன் அலோஷியஸ் அல்லது அவரது நிறுவனத்தினால் ஐக்கிய தேசி யக் கட்சிக்கு நிதி வழங்கப்பட வில்லை எனவும் நீதிபதிகள் வினவியபோது அமைச்சர்கள் இவ்வாறு தெரிவித்தமை குறிப்பி டத்தக்கது. (இ-7)

# துப்பாக்கி வைத்திருந்த இருவர் விளக்கமறியலில்

(கொழும்பு)

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றுடன் கலன் பிந்துனுவெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு அநு ராதபுரம் நீதிமன்ற நீதவான் ஹர்ஷன கெகுவள நேற்று உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள இருவரும் கலன் பிந்துனுவெவ நாவக்குளம் மற்றும் வெலான உபுள்தெ னிய பகுதிகளைச் சேர்ந்த வர்களான கலன்பிந்துனு வெவ பொலிஸ் நிலைய குற் றத்தடுப்பு பிரிவினர் மோட்டார் சைக்கிலொன்றில் பயணித்த மூவரை சோதனைக்குட்படுத் திய போது உள்ளூரில் தயா ரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றும் மூன்று ரவைகளும் அவர்களி டமிருந்து மீட்கப்பட்டதோடு சோத னைக்குட்படுத்திய போது ஒருவர் தப்பிச்சென்றுள்ளார்.

அவரை கைது செய்வதற் காக மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவர் கள் ஏதாவது ஒரு குற்றச்செ யலை செய்வதற்கு சென்றிரு க்கலாம் என சந்தேகிக்கப்படு கின்றது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலன்பிந்துனுவெவ பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதி காரி பொலிஸ் பரிசோதகர் பொன்சேகா முன்னெடுத்துள் ளார். (இ-7)

# வைத்தியரை நியமிக்கக்கோரி கவனயீர்ப்பு






(யாழ்ப்பாணம்)

யாழ்.நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர மாக வைத்தியரை நியமிக் கக்கோரி நேற்று முன்தி னம் கவனயீர்ப்புப் போரா ட்டம் முன்னெடுக்கப்பட் டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மிக வும் பின்தங்கிய பிரதேசமா கவும் நீண்ட கடல் மார்க்கப் போக்குவரத்துச் சேவை யைக் கொண்ட ஓர் பகுதி யான நெடுந்தீவில் தற்போது ஆயிரத்து 390 குடும்பங் களைச் சேர்ந்த ஆறாயிரத் திற்கும் மேற்பட்ட குடும்பங் கள் வாழ்ந்து வருகின்றன. ஒரேயொரு வைத்தியசா லையான நெடுந்தீவு வைத் தியசாலையில் நிரந்தர வைத்தியர்கள் எவரும் நிய மிக்கப்படாது கடந்த நான்கு மாதங்களாக வைத்தியர் கள் அற்ற நிலையில் காணப் பட்டதையடுத்து இந்தப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கை யடுத்து ஓய்வுபெற்றுச்சென்ற வைத்தியர் ஒருவரை தற்கா லிகமாக பணிக்கமர்த்தியுள் ளனர்.

குறித்த வைத்தியர் உடல் நிலை மற்றும் அவரது வயது என்பவற்றைக் கருத்தில் கொண்டு தொடர்ந்து சேவை களை தொடர்ந்து ஆற்ற முடியாத ஓர்நிலை காணப் படுகின்றது எனவும் ஆர்ப்பா ட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (இ-315)

# சிவனொளிபாதமலை யாத்திரை டிசெம்பர் 3 ஆம் திகதி ஆரம்பம்



சிவனொளிபாதமலை யாத்திரை பருவ காலம் எதிர்வரும் 03.12.2017 அன்று பூரணை தினத்து டன் ஆரம்பமாகவுள்ளதாக சிவனொளிபாதமலை நாயக்க தேரர் பெங்கமுவே தம்ம தின்ன தெரிவித்துள்ளார்.

நல்லதண்ணி நகரத்தில் கிராமசேவகர் காரியாலய த்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெ ற்ற ஒன்றுகூடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக் கையில் அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வருடத்திற்கான சிவ னொளிபாதமலை யாத்தி ரைப் பருவக்காலத்தை ஆரம் பிக்கும் முகமாக இரத்தின புரி, பெல்மதுளை, கல்பொத் தாவெல ரஜமஹா விகாரை யில் வைக்கப்பட்டுள்ள சமன்தேவ விக்கிரகமும் பூஜைப்பொருட்களும் தாங் கிய இரதபவனி சுபவே ளையில புறப்பட்டு பெல்ம துளை, இரத்தினபுரி, கிதுல் கல, கினிகத்தேனை, வட்ட வளை, ஹற்றன், நோர்வூட், மஸ்கெலியா, நல்லதண்ணி வழியாக சிவனொளிபாதம லையின் அடிவாரத்தினை வந்தடைவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. இம்முறையும் 3 வீதிகளின் ஊடாக ஊர்வலம் பயணிக்க வுள்ளது.

சிவனொளிபாதமலை பருவகால யாத்திரை காலப் பகுதியில் பொலித்தீன், பிளா ஸ்டிக் மற்றும் போதைப் பொருள் பாவனையை கட் டுப்படுத்துவதற்கு அதிகாரி கள் நடவடிக்கை மேற்கொ ள்ளவுள்ளதுடன், இந்த யாத் திரிகர்களுக்காக விசேட போக் குவரத்துச் சேவைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், பொலிஸார் பாது காப்பு பணிகளில் ஈடுபட தயாராகவுள்ளதாகவும் சிவ னொளிபாதமலை நாயக்க தேரர் பெங்கமுவே தம்மதி ன்ன மேலும் தெரிவித்து ள்ளார். (இ-7)

# வடக்கிற்கு தனியான வங்கி ஒன்றை நிறுவி மக்களுக்கு உதவ வேண்டும்

## யாழ்.வர்த்தகர் சந்திப்பில் டக்ளஸ் எம்.பி.



சமூகம் சார்ந்து உழை ப்பது மட்டுமன்றி அதற்காகவே தொடர்ந்தும் எனது பல்வேறு பட்ட பணிகளை முன்னெடுத்து வருகின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலா ளர் நாயகம் டக்ளஸ் தேவான ந்தா எம்.பி.தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமை ந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தி னம் நடந்த யாழ்.மாநகர எல்லை க்குட்பட்ட வர்த்தகர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர்மேலும்தெரிவிக்கையில்

யாழ்.குடாநாட்டில் மட்டு மல்லாது வடபகுதி வர்த்தகர்கள், பொதுமக்கள் அரச மற்றும் தனியார்துறை நுண்கடன் திட்டங்களினால் பல்வேறு பட்ட நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்து வருகின்றனர். இத னால் மனரீதியான தாக்கங்க ளுக்கு உள்ளாகும் அதேவேளை தற்கொலை செய்யும் அளவுக்கு நிலைமை மோசமடைகிறது.

எனவே இதுவிடயத்தில் வர்த்தகர்களும் மக்களும் எதிர்காலத்தில் சிந்தித்து செயற்பட வேண்டும். அந்தவ கையில்தான் எனது நீண்டகால எண்ணமான வடமாகாணத் துக்கென தனியான வங்கி ஒன்றை நிறுவி அதனூடாக வர்த்தகர்களுக்கும் மக்களு க்கும் உதவவேண்டும் என்பதே எனது அவாவாகும் என்றார்.

குறிப்பாக வடக்கு மாகா ணசபை சரியாக இயங்கும் பட்சத்தில் எமது மக்கள் அத்தியாவசியப் பொருட்க ளுக்கு மட்டுமன்றி ஏனைய பொருட்களைப் பெற்றுக்கொள் வதில் இடர்பாடுகளை சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்படாது. இவ்விடயத்தில் வடக்கு மாகாணசபை அக்க றையற்றிருப்பது வேதனைய ளிப்பதாக டக்ளஸ் தேவான ந்தா சுட்டிக்காட்டினார்.

குறித்த சந்திப்பின்போது கட்சியின் தேசிய அமைப் பாளர் பசுபதி சீவரத்தினம், கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாக செயலாளர் சிவகுரு பாலகிருஷ்ணன், யாழ்.மாநகர முன்னாள் முதல் வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, கட்சியின் யாழ்ப் பாணப் பிரதேச நிர்வாக செய லாளர் றீகன், யாழ்ப்பாணம் வர்த்தகசங்க தலைவர் ஜெனக் குமார், சட்டத்தரணி ஆகி யோர் உடனிருந்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளை மூடி ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கக் கோரிக்கை

## -இலங்கை ஆசிரியர் சங்கம்-

நாளை வெள்ளிக்கிழமை (13.10.2017) நடைபெறவுள்ள வடமாகாணம் தழுவிய முழுமையான கதவடைப்பிற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது. அதே வேளை வடக்கிலுள்ள பாடசாலைகளை மூடி ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் அந்த சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினையை தமிழ் மக்களின் அரசியலாகவே நோக்கப்படவேண்டும். தமிழ் மக்களின் அபிலாஷைகளோடு இணைந்திருந்தவர்களுக்கு அநீதி நடைபெறும் போது அவர்களுக்காக குரல் கொடுப்பது என்பது தமிழ் மக்களின் பாரிய பொறுப்பாகும்.

தேசிய பிரச்சினைக்கு உளத்தூய்மையுடன் தீர்வை முன்வைக்க விரும்பும் அரசாங்கம் - முதலில் அரசியல் கைதிகள் அத்தனை பேரையும் அரசியல் ரீதியான தீர்மானம் எடுத்து விடுதலை செய்ய வேண்டும்.

இலங்கையில் அரசியல் கைதிகள் இல்லை என்றும் - பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தான் இருக்கின்றார்கள் எனவும் - நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஊடாக தான் இவர்களுக்கு தண்டனை கொடுத்து விடுதலை செய்யலாம் என்பதும் அரசின் இனவாத நோக்கிலமைந்த பழிவாங்கல் நிகழ்ச்சி நிரலாகும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தால் கைதுசெய்யப்பட்டு இலங்கையின் சிறைகளில் பல ஆண்டுகளாக பெரும் இன்னல்களுக்கு மத்தியிலும் - உளவியல் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நடைபிணமாக தமிழ் அரசியல் கைதிகள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களின் விடுதலை தொடர்பில் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

தங்கள் விடுதலைக்காக பல தடவைகள் சாத்வீக ரீதியில் உண்ணாவிரதப் போராட்டங்களை தமிழ் அரசியல் கைதிகள் முன்னெடுத்தனர்.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எனக் கூறும் அரசாங்கம் இந்த அரசியல் கைதிகள் விவகாரத்தை பயங்கரவாதத்தோடு தொடர்புபட்ட பிரச்சினையாக மட்டுமே பார்க்கின்றது. தேசிய இனப்பிரச்சினைக்கு உண்மையான தீர்வு காணப்பட வேண்டுமாயின் - தமிழ் இனத்தின் அடக்குமுறைக்கெதிராக போராடியவர்களை முதலில் அரசியல் ரீதியான தீர்மானம் எடுத்து அனைவரையும் விடுதலை செய்திருக்க வேண்டும்.

கடந்த ஆட்சியில் அரசியல் கைதிகளாக இருந்த 12000 பேரை விடுவிக்க முடிந்ததென்றால் - நல்லிணக்கம் எனவும் நல்லாட்சி எனவும் கூறும் தற்போதைய அரசால் தற்போது அரசியல் கைதிகளாக உள்ள 132 பேர்களை மட்டும் விடுவிக்க முடியவில்லை என்பது பேரினவாதத்தின் அடக்குமுறையின் பழிவாங்கல் நோக்கமே என்பது தெளிவாகின்றது.

இந்த நிலையில், (1) தமது வழக்குகளை மீண்டும் தமிழ் பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து - சிறையில் சாகும் வரை உணவுத் துறப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் கோரிக்கைகளை இழுத்தடிப்பின்றி உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தியும் முழுத் தமிழ் அரசியல் கைதிகளையும் ஓர் அரசியல் தீர்மானத்தினூடாக விடுவிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியும் நாளை வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ள கதவடைப்புக்கு போராட்டத்தில் பாடசாலை செயற்பாடுகளும் ஸ்தம்பிக்க ஆசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டும். அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு ஆளுநர் செயலகம் முன்பாக இடம் பெறவுள்ள கவனயீர்ப்பிலும் ஆசிரியர்கள் கலந்து தமது சமூகப் பொறுப்பை வெளிப்படுத்தவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுக்கின்றது.

அன்றைய தினம் மாணவர்கள் தொடர்பாக பெற்றோர்கள் அக்கறை செலுத்துமாறும் மாணவர்களை வீதிகளுக்கு அனுப்பாது பாதுகாப்பாக வீடுகளில் வைத்து பொறுப்பாக செயற்படுமாறும் இலங்கை ஆசிரியர் சங்கம் கே[...]டுக்கொள்கின்றது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## "சாதிக்க பிறந்த சிறுவர்களை சோதிக்காதே"

### மாணவர்கள் ஊர்வலம்

"உலகின் உன்னத படைப்பாளிகளான சாதிக்க பிறந்த சிறுவர்களை சோதிக்காதே" என்ற வாசகங்களுடன் 'தாய், தந்தை, முதியோரின் அன்பு பாசப்பிணைப்பினூடாக சிறுவர்களை அவர்களது அதிசய உலகத்திற்கு அழைத்து செல்வோம்' எனும் தொனிப் பொருளில் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள் அடங்கிய ஊர்வலம் ஒன்று நேற்றுக்காலை இடம்பெற்றது.

பத்தனை சந்தியிலிருந்து ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி வளாகம் வரை சென்ற இந்த ஊர்வலத்தில் தமிழ் மற்றும் சிங்கள மொழி பாடசாலை மாணவர்கள் 120 பேர் உள்ளடங்கிய ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் நிர்வாகிகள், பீடாதிபதி, உப பீடாதிபதி, விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், கல்வியியற் கல்லூரியின் மாணவர்கள், பத்தனை பொலிஸார் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் சிறுவர் உரிமை தொடர்பில் கோஷங்கள் எழுப்பிய வண்ணம், சிறுவர்களுக்கு அன்பு காட்டாதவர் எங்களை சார்ந்தவர்கள் அல்லர், உலகின் உன்னத படைப்பு சிறுவர்கள், சிறார்களை ஒருபோதும் சீரழிக்க வேண்டாம், சாதிக்க பிறந்த சிறுவர்களை சோதிக்காதே போன்ற பதாதைகளையும் ஏந்திய வண்ணம் சென்றமையை காணக்கூடியதாக இருந்தது.





இதனையடுத்து ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வுகளில் சிறுவர் உரிமை தொடர்பில் கை அச்சு இடும் நிகழ்வுடன், வருகை தந்த பாடசாலை மாணவர்களுக்கு பரிசில்களும், பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டதோடு, கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்) தமிழ் அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலையை வலியுறுத்தியும் மீண்டும் அவர்களது வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றுக்கு மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து நாளை 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு மாகாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு வடமாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையு[ம்] வழங்குவதாக அதன் தலைவர் அறிவித்துள்ளார். (இ-7)

## மாணவர் அனுமதிக்கான விண்ணப்பங்கள் ஏற்பு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தரம்-6 (2018) மாணவர் அனுமதிக்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன எனவும் விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (இ-7-60)

## உரமானியப் பதிவுகள் இன்று

தென்மராட்சி மந்துவில் வடக்கு மற்றும் மந்துவில் கிழக்கு விவசாய சம்மேளனத்தினரால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான காலபோகச் செய்கைக்கான உரமானிய பதிவுகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு மீசாலை கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெறும்.

இதில் புதிதாக உரமானியம் பெற்றுக்கொள்ள விரும்பும் விவசாயிகள் காணி உறுதிப்பத்திர பிரதி 02, தேசிய அடையாள அட்டைப் பிரதி 02, அரசாங்க வங்கிப் புத்தகப் பிரதி 02, வருடாந்த சந்தாப்பணமாக 60 ரூபாயும் புதிய அங்கத்தவராக விரும்பின் 100 ரூபாயும் 2016/2017ஆம் ஆண்டிற்கான சந்தாப்பணம் கட்டத்தவறியவர்கள் அவற்றை சேர்த்து செலுத்த வேண்டும் எனவும் மந்துவில் கிழக்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.கந்தசாமி அறிவித்துள்ளார். (இ-10-101)

## மூடிய பல்கலைக்கழகம் 16 இல் திறப்பு

இரு மாணவ குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலையடுத்து தற்காலிகமாக மூடப்பட்ட களனி பல்கலைக்கழகம் எதிர்வரும் 16 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படவுள்ளதாக களனி பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

களனி பல்கலைக்கழகத்தில் இரு மாணவக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலையடுத்து அனைத்து பீடங்களையும் தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதையடுத்து, மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பீடங்களும் இவ்வாறு தற்காலிகமாக மூடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மத்தளவுக்கு மாற்றப்பட்ட விமானங்கள்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட வேண்டிய விமானங்கள் இரண்டு மத்தள விமான நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. சீரற்ற காலநிலை காரணமாகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி சென்னை மற்றும் சியோல் ஆகிய இடங்களில் இருந்து கட்டுநாயக்க நோக்கி நேற்றுக்காலை வந்த விமானங்களே இவ்வாறு மத்தளவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. (இ-7)

## தேசியமட்ட போட்டிகளில் சாதித்த மாணவர்களுக்கான கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் அருட்தந்தை [illegible] தலைமையில் இடம்பெறும். (இ-10-104)

## ஆயுள்வேத மருத்துவ சேவைகள்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வுகளும் சுதேச ஆயுள்வேத மருத்துவ சேவைகளும் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது என கோப்பாய் வடக்கு முதியோர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை துண்டாட இடமளிக்க முடியாது

## அபயதிஸ்ஸ தேரர் வலியுறுத்து



(கொழும்பு)

மௌலவிமார்களே, இந்து மதக் குருக்களே, கிறிஸ்தவமத குருமார்களே நீங்களும் நாமும் இந்நாட்டில் இருக்கும் வரையில் நாட்டை துண்டாட இடமளிக்க முடியாது. உங்களுக்கும் எங்களுக்கும் தற்பொழுது இந்த தார்மீகப் பொறுப்பு சாட்டப்பட்டுள்ளது என பெப்பிலியான சுனேத்ரா மகாதேவி பிரிவெனாவின் விகாராதிபதியும் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

இந்த நாட்டின் அதிகார ஆசை பிடித்த அரசியல்வாதிகளே நாட்டை துண்டாட போராட்டம் நடத்துகின்றனர். இந்த இடத்திலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் பிள்ளைகளை உங்களுடைய நாடு என்ன என்று கேட்டால், ஒருமித்த குரலில் இலங்கை என்று கூறுவார்கள். இவர்களிடம் இந்த நாட்டை துண்டாட விருப்பமா? எனக் கேட்டால், நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளை போன்று இந்த நாட்டில் வாழ வேண்டும் என ஒரே குரலில் தெரிவிப்பார்கள்.

இரத்தத்தின் வகை வேறுபட்டாலும், அதனை மதத்தின் பேராலோ, இனத்தின் பெயராலே வேறுபடுத்திப் பார்க்க யாராலும் முடியாது. இதுதான் உண்மை. மனிதர்களிடையே பன்மைத்துவம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். சிலரது மதம் வேறுபடலாம், பழக்கவழங்கங்கள் வேறுபடலாம். தேரர்களிடையேயும் வேறுபாடுகள் உள்ளன. அவர்களிடையே பல நிறங்களையுடைய ஆடைகள் அணிபவர்கள் உள்ளனர் என்றும் தேரர் கூறினார்.

பெப்பிலியான சுனேத்ரா மகாதேவி பிரிவெனா வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வடக்கு, கிழக்கு மாணவர்கள் 500 இற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் உரை யாற்றுகையிலேயே தேரர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் பரிசோதகர்கள் 44 பேருக்கு இடமாற்றம்

பிரதம பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் 44 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கு அமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியின்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் பிரதம பொலிஸ் பரிசோதகர்கள் 15 பேர் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் 29 பேருக்கு இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# டி.பி.தொடர்பில் விசாரணை

காணி இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குருநாகல் மாவட்ட இராஜாங்க அமைச்சருமான டி.பி.ஏக்கநாயக்க தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அறிவித்தனர்.

2012ஆம் ஆண்டுக்கும் 2015ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் டி.பி.ஏக்கநாயக்க கலை மற்றும் கலாசார அமைச்சராக இருந்தார்.

அதன்போது, மத்திய கலாசார நிதியத்தின் நிதியில் கப் வாகனமொன்றைக் கொள்வனவு செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டு தொடர்பிலேயே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (இ-7)



குருநகர் புனித யாகப்பர் ஆலய மறைக்கல்வி வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த 8 ஆம் திகதி புனித யாகப்பர் ஆலயத்தில் ஆலயத்தின் பங்குத்தந்தை மறையாசிரியர் யூஜின் யூலியஸ் தலைமையில் நடைபெற்றது. (படம்:-இன்பகுமார்)

# நாமலை ஏற்றிச் சென்ற சிறைச்சாலை பஸ் பயணிக்க முடியாமல் ரயர் எரிப்பு

நாமல் ராஜபக்ஷ உட்பட ஆறு பேர் இரவோடிரவாக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தங்கல்லை சிறைச்சாலைக்குகொண்டு செல்லப்பட்டனர்.

இதன்போது சிறைச்சாலை பஸ்ஸிற்கு செல்ல முடியாமல் அம்பாந்தோட்ட மேம்பாலத்துக்கு அருகில் சிலர் ரயர் களை வீதியில் எரித்து தடை ஏற்படுத்தினர்.

இதன்போது பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் வருகை தந்து சிறைச்சாலை வாகனத்துக்குசெல்லபாதையை சரிசெய்து கொடுத்தனர். (இ-7)



# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1216

Search for people, places and things Nagendram Home

**சங்கீதா**

உங்கள்
பாதையை
நீங்களே
தேர்ந்தெடுங்கள்
ஏனெனில்...
வேறு எவராலும்
உங்கள் கால்களைக்
கொண்டு
நடக்க முடியாது.

**சயந்தன்**





**தனுஜா**




**சாருஜன்**




**பவிதா**




**சரன்ஜா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர விபத்து முதலுதவி சேவைக்கு ஹெலிகொப்டர் பயன்பாடு விரைவில்

## அமைச்சர் ராஜித தகவல்



அவசர விபத்துக்களின் போது விபத்துக்குட்பட்டவருக்கு சிகிச்சையளிக்கவென எதிர்காலத்தில் அம்புலன்ஸ் சேவையுடன் அதிநவீன மற்றும் சகல வைத்திய வசதிகளுடன் ஹெலிகொப்டர் சேவையும் விரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்று சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

முதலுதவி சேவைக்கான உபகரணங்களை பாடசாலைகள் மற்றும் பிராந்திய வைத்திய நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு தொற்றா நோய் தடுப்பு பிரிவினால் இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர் பைசல் காசிம், வைத்திய அதிகாரிகள், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் ராஜித சேனாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறந்த அபிவிருத்தி அடைந்த நாடுகளை போன்ற சுகாதார அபிவிருத்தி கொண்ட நாடாகிய இலங்கையில் இருதய நோய்களுக்கு அடுத்து அதிகளவான மரணத்தை தோற்றுவிப்பது வீதி விபத்துக்களாகும். ஆனால் விபத்துக்களின் போது விபத்துக்குட்பட்டவருக்கு அவசரமாக முதலுதவி சேவை கிடைக்குமாயின் அவரின் உயிரைக் காப்பாற்ற முடியும்.

அதற்கான ஒரு அபிவிருத்தி நடவடிக்கையாக எதிர்காலத்தில் அவசர முதலுதவி சேவையில் ஹெலிகொப்டரும் பென்ஸ்வாகனங்களும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கிடைத்த 88 அம்புலன்ஸ் வாகனங்களுடன் மேலதிகமாக 250 வாகனங்கள் எதிர்வரும் வருடத்தில் எமக்கு இலவசமாக கிடைக்கும். இந்த வாகனங்களுடன் உடனடி சேவையை பெற்றுக்கொடுக்கவென பிரத்தியேக வைத்திய சேவை நிபுணர் ஒருவரும் காணப்படுவார்.

2018 காலப்பகுதியில் முழுமையாக இந்த அவசர வைத்திய முதலுதவி சேவைக்கான அனைத்து தேவைகளும் நிறைவுக்கு கொண்டு வரப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆசிரியர் பற்றாக்குறை மாணவர்கள் வீதியில்






திருகோணமலை, முள்ளிப் பொத்தானை சிங்கள மகா வித்தியாலயத்தில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால், அதனை நிவர்த்தி செய்து தருமாறு கோரி திருகோணமலை - கொழும்பு பிரதான வீதியில் இறங்கி பாடசாலை மாணவர்கள் நேற்றுக் காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மாணவர்களுடன் பெற்றோர்களும் இணைந்திருந்தமையால் திருகோணமலை - கொழும்பு வீதியின் போக்குவரத்து சிறிது நேரம் ஸ்தம்பித்தது.

இதனால் சம்பவ இடத்துக்கு விரைந்த தம்பலகமம் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பெற்றோர்களில் ஐவரைத் தம்மோடு வருமாறும் இது சம்பந்தமாக மாகாண கல்வித் திணைக்களத்தோடு கலந்துரையாடி உரிய தீர்வைப் பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்தனர்.

இந்த வாக்குறுதியை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

மேற்படி முள்ளிப்பொத்தானை சிங்கள மகா வித்தியாலயத்துக்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஐந்து ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக மாணவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

# பிரதமர் பதவிக்காக கனவுகாணும் 30பேர்

## ஞானசார தேரர் கடும் விசனம்

நாட்டு மக்களின் பிரச்சினைகளை பொருட்படுத்தாமல் அரசாங்கத்தில் உள்ள 30 பேர் பிரதமர் பதவியை பெற்றுக்கொள்ள கனவு காண்பதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள பொதுபல சேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்போது அரசியல் ரீதியாக பல பிரச்சினைகளும் ஆபத்துக்களும் உள்ளன. நாட்டு பிரச்சினையை பார்க்கிலும் அரசாங்கத்திற்குள் முரண்பாடுகள் அதிகம் உள்ளன. நாட்டில் பிரச்சினை என்ன நடந்தாலும் அதனை பொருட்படுத்தாமல் சிலருக்கு பிரதமர் கனவு உள்ளது. அமைச்சர்களான மங்கள சமரவீர, ராஜித சேனாரத்ன உள்ளிட்ட 30 பேர் பிரதமர் கனவுடன் உள்ளனர்.

நாடு குழிதோண்டி புதைக்கப்படுகின்றது. ஆனால், இவர்கள் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றனர். பொது எதிரணியும் குறுந்திரைப்படமொன்றை திரையிட்டு வருகின்றது. அரசியல் வாதிகளே நாட்டுக்கு பிரச்சினையை கொண்டு வந்துள்ளனர். நாம் தற்போது ஆபத்தான நிலைமையில் உள்ளோம்.

அரச சார்பற்ற அமைப்பினருக்கு குடும்பங்கள் இல்லை. பிள்ளைகளும் இல்லை. எனினும் தற்போது அரச நிறுவனங்களில் உயர் அதிகாரிகளாக இருப்பவர்கள் அவர்களேயாவர்.

இலங்கையின் 70 வருட அரசியல் வரலாற்றை பார்க்கும் போது ஆட்சியாளர்களின் இயலாமை தெட்டத் தெளிவாக விளங்குகின்றது. ஒரு கொள்கை அரசியல் வாதிகளுக்கு கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

யாழ்.பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தினால் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த வணிகமாணி (வெளிவாரி) நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

மேலும் சனி, ஞாயிறு தினங்களில் வழமைபோன்று நேர்முகப்பரீட்சை முன்னர் அறிவித்திருந்தவாறு இடம்பெறும் என பணிப்பாளர்.பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்துள்ளார். (இ-9)

# வல்லப்பட்டைகளுடன் குவைத் பிரஜை கைது

சட்டவிரோதமாக வல்லப்பட்டைகளை தாய்லாந்தின் பாங்கொக் நகரிற்கு கடத்திச் செல்ல முற்பட்ட குவைத் நாட்டு பிரஜை ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு பிரிவினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து ஒரு இலட்சத்து 54 ஆயிரம் ரூபா பெறுமதியான 4 கிலோ 500 கிராம் வல்லப்பட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த கடத்தல் சம்பவம் தொடர்பாக சுங்கப்பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# முணசிங்க மீளவும் விளக்கமறியலில்



லிட்ரோ ஹாஸ் நிறுவனத்தின் தலைவர் ஷலில முணசிங்கவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தாய்வான் வங்கி ஒன்றில் இருந்து சட்டவிரோதமாக 1.1 மில்லியன் டொலர் பணம், இலங்கையிலுள்ள வங்கி ஒன்றிற்கு பரிமாற்றப்பட்ட விடயம் தொடர்பில், லிட்ரோ ஹாஸ் நிறுவனத்தின் தலைவர் ஷலில முணசிங்க கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை, நேற்று வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இதற்கமைய, நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஷலில முணசிங்கவை எதிர்வரும் 25ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-7)

# இலங். பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை



## தாய்வான் பொலிஸார் பாராட்டு

பாரிய மோசடி சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் பலர் இலங்கையில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் விரைவாக செயற்பட்ட இலங்கை பொலிஸாருக்கு தாய்வான் பொலிஸார் பாராட்டு தெரிவித்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த மோசடி தொடர்பில் இலங்கை பொலிஸார் மேலும் பல சந்தேக நபர்களை கைது செய்வார்கள் என நம்புவதாக தாய்வான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த பண மோசடி 600 மில்லியன் டொலர் என நம்பப்பட்டது, எனினும் அதனை விடவும் அதிகமாகும் என பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மோசடி தொடர்பில் மேலும் பலர் தொடர்பில் விரைவான விரிவான விசாரணை மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் மிகவும் வசதி படைத்தவர்கள் எனவும் சமூகத்தில் அந்தஸ்து பெற்றவர்கள் எனவும் விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திரம் மூலம் நாற்று நடுகை; தாண்டிக்குளம் வயல்வெளியில்

## வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு



தேசிய விவசாயிகள் வாரத்தினை முன்னிட்டு, வவுனியா தாண்டிக்குளத்தின் கீழுள்ள வயல் வெளியில் இயந்திரம் மூலமான நாற்று நடுகை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இயந்திரம் மூலம் நாற்று நடுகை மேற்கொள்வதன் மூலம், ஏக்கருக்கு 20 கிலோ கிராம் விதைநெல் பயன்பாட்டுடன், சீரான பயிரிடை வெளி; அதிகளவில் மட்டம் வெடித்தல், விளைச்சல் அதிகரித்தல், மேலும் இலகுவான இயந்திரம் மூலமான களை கட்டுப்பாடு, குறைவானநோய் பீடைத்தாக்கங்கள் போன்ற நன்மைகள் கிடைக்கப்பெறுகின்றன.

எனவே இயந்திரம் மூலம் நாற்று நடுகை மேற்கொள்ள ஆர்வமுடைய விவசாயிகள் தங்கள் பகுதிவிவசாய போதனாசிரியரை தொடர்பு கொள்வதன் மூலம் உரிய தொழில்நுட்ப அறிவைபெற்றுக் கொள்வதுடன் நாற்றுநடுகை இயந்திரத்தினையும் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம் என வவுனியா மாவட்ட பிரதிமாகாணவிவசாயபணிப்பாளர் தெரிவித்தார். (2)

# வரட்சி நிவாரணத்தில் புறக்கணிப்பு

## வவுனியா பிரதேச வாயில் முன்பாக தோணிக்கல் மக்கள் ஆர்ப்பாட்டம்



அரசாங்கத்தால் வழங்கப்படும் வரட்சி நிவாரணத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், தமக்கும் வரட்சி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தும் வவுனியா, தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவு மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா பிரதேச செயலக வாயில் முன்பாக நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்த தோணிக்கல், தேக்கவத்தை கிராம மக்கள்,பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு வருகை தந்த போது தமக்கு பதில் தந்து விட்டு செல்லுமாறு வாயிலை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனையடுத்து அப்பகுதி கிராம அலுவலரை அழைத்த பிரதேச செயலாளர் மக்களுக்கு ஏன் வரட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதை தெளிவுபடுத்துமாறு கோரியதுடன், மக்கள் சார்பாக மூவரை அழைத்து அலுவலகத்தில் இது தொடர்பில் கலந்துரையாடினார்.

இருப்பினும் அப் பேச்சுக்களில் திருப்தியடையாத மக்கள் பிரதேச செயலகத்தில் இருந்து ஊர்வலமாக மாவட்ட செயலகத்தை அடைந்து அரச அதிபரிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர். இதன்போது மாவட்ட செயலக வாயிலை மக்கள் மறிக்க முற்பட்ட போது சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மக்களுடன் பேசி அவர்களை சமரசம் செய்திருந்தனர்.

அரச அதிபர் ரோஹண புஸ்பகுமார, இது தொடர்பில் விசாரணை செய்து நாளைய தினம் பதில் வழங்குவதாக தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் " மனச்சாட்சி இல்லாத உத்தியோகத்தரே உன் மனம் என்ன கல்லா, தேக்கவத்தை மக்கள் என்ன பகடைக்காய்களா, அயல் கிராமங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் எமது கிராமத்திற்கு ஏன் வழங்கப்படவில்லை, என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தனர். (2-250)

வன்னி வலம்

# தேசிய உணவு உற்பத்தி வாரத்தையொட்டி உத்தியோகத்தர்களுக்கு மரக்கன்றுகள்



(குருமன்காடு)

தேசிய உணவு உற்பத்தி வாரத்தை முன்னிட்டு வவுனியா மாவட்டச்செயலக உத்தியோகத்தர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

தேசிய உணவு உற்பத்தி வாரத்தை முன்னிட்டு அரச உத்தியோகத்தர்களுக்கு வவுனியா மாவட்டச் செயலகத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கான மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா மாவட்ட பிரதி மாகாண பணிப்பாளர் த.யோகேஸ்வரன் தலைமையில் நேற்று வவுனியா மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்டச்செயலாளர் ரோஹண புஸ்பகுமாரவினால் மரக்கன்று நாட்டப்பட்டதுடன் உத்தியோகத்தர்களிற்கான மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், மாவட்ட செயலக வளாகத்திலும் பயன்தரும் மரங்கள் நடும் செயற்றிட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்டச்செயலாளர் ரோஹண புஸ்பகுமார, வவுனியா மாவட்ட பிரதி மாகாண பணிப்பாளர் த.யோகேஸ்வரன், விவசாய பண்ணை முகாமையாளர் நிரஞ்சன் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# மாணவர்களுக்கு பரிசில் வழங்கல்

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 35 மாணவர்களுக்கு நேற்று பொலிஸாரால் பரிசு வழங்கி ஊக்கமளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு முற்பகல் 10.30 மணியவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் வெலிக்கன்ன, வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (2-312)

# கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை அமெ.தூதரக குழுவினர் பார்வையிட்டனர்



கிளிநொச்சி முகமாலை பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை அமெரிக்கத் தூதரக குழுவினர் நேற்று பார்வையிட்டனர்.

குறித்த பகுதியில் அமெரிக்காவின் நிதியுதவியுடன் டாஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் தொடர்பில் குழுவினர் பார்வையிட்டனர்.

இதன்போது இப்பகுதியில் மீட்கப்பட்ட இராணுவத்தினர் மற்றும் விடுதலை புலிகளினால் பாவிக்கப்பட்ட அபாயகரமான கண்ணிவெடிகள், கைக்குண்டுகள், செல்கள்.கிளைமோர் குண்டுகள், விடுதலைப் புலிகளினால் தயாரிக்கப்பட்ட பாரிய வெடி பொருட்கள் தொடர்பில் குழுவினருக்கு டாஸ் நிறுவன அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்பட்டது. தொடர்ந்து குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு கள் தொடர்பில் அவர்கள் நேரடியாக பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (2-312)

# 2ம் லெப்.மாலதியின் நினைவுதினம் மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது



தாயக விடுதலைப்போரில் வித்தாகிய முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப். மாலதியின்30 ஆம்ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில்மன்னார்ஆண்டாங்குளத்தில் நினைவுகூரப்பட்டது.

ஆண்டாங்குளத்தில் உள்ள ஜனநாயக போராளிகள் கட்சியின் மாவட்ட இளைஞர் அணி அலுவலகத்தில், ஜனநாயக போராளிகள் கட்சியின் வடமாகாண இளைஞர் அணி தலைவர் சி.வேந்தன் தலைமையில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது சுடர் ஏற்றப்பட்டு 2 ஆம் லெப்.மாலதியின் படத்திற்கு மலர் மாலை அணிவித்துமலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து அப்பிரதேசத்தில் உள்ள போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களில் உள்ள வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு ஜனநாயக போராளிகள் கட்சியினரினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. மாலதியின் திருவுருவப்படம் மாலதியின் சகோதரியிடம் கையளிக்கப்பட்டது. (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## குழப்பவாதிகள்

முல்லா நஸ்ருதீன் மன்னருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். அது அரசவையில் இருந்த பலருக்கு பிடிக்கவில்லை.

ஒருமுறை முல்லா ஒரு நண்பரின் திருமணத்திற்குச் சென்றபோது பேச்சுவாக்கில் நாட்டில் உள்ள அறிஞர்கள் எல்லாம் குழப்பவாதிகள், எதையுமே உறுதியாக, தீர்மானமாகக் கூற இயலாதவர்கள் என்று சொன்னார்.

அதை அறிந்த முல்லாவின் எதிரிகள் மன்னரிடம் போய் "மன்னர் நீங்க அறிஞர்களை வைத்திருப்பதற்கு பதிலாக குழப்பவாதிகளை வைத்திருப்பதாகவும், சரியான முடிவு எடுக்கத் தெரியாமல் இருக்கும் அறிஞர்கள் பேச்சு கேட்பதாகவும் முல்லா சொல்லிக் கொண்டு திரிக்கிறார் என்று அரசரிடம் முல்லாவைப் பிடிக்காதவர்கள் கூறித் தூண்டி விட்டார்கள்.

உண்மை நிலையை அறிய விரும்பிய அரசர், முல்லாவை சபைக்கு வரவழைத்தார்.

அத்துடன் தத்துவ மேதைகள், மார்க்க ஞானிகள், சட்ட நிபுணர்கள், அறிவுசார் அமைச்சர்கள் அனைவரையுமே கூட்டினார். பிறகு முல்லாவை நோக்கி, "இவர்கள் எல்லாம் குழப்பவாதிகள் என்று கூறினீர்களாமே?ஏன் அப்படிக் கூறினீர்கள்? இவர்கள் குழப்பவாதிகள் என்று உம்மால் நிரூபிக்க முடியுமா?" என்று கேட்டார்.

இது என்னடா வம்பா போச்சு, சும்மா வாய் பேச்சுக்கு சொன்னதை வைத்து என்னை மாட்டி விடப் பார்க்கிறீங்களா? அப்போ நீங்க குழப்பவாதிகள்தான், அதை நிரூபித்தால் ஆச்சுது என்று நினைத்து "அரசே என்னால் நிரூபிக்க முடியும்" என்று கூறிய முல்லா, அனைவரிடமும் ஆளுக்கொரு தாளைக்கொடுத்தார்.

பின்னர் அவர்களிடம், "அறி ஞர் பெருமக்களே நான் ஒரே ஒரு கேள்விதான் கேட்கப் போகிறேன். அதற்குரிய பதிலை இந்தத் தாளில் நீங்கள் எழுதிக் கொடுக்கவேண்டும்" என்றார்.





பின்னர் அவர்களிடம் ஒரு தாளை கொடுத்தார், அதில் "ரொட்டி என்றால் என்ன?" என்று கேட்டார்.

அனைவரும் பதிலைத் தாளில் எழுதி அரசரிடம் கொடுத்தார்கள். அரசர் படிக்க ஆரம்பித்தார்.

ஒருவர்- ரொட்டி என்பது சத்துள்ள பண்டம் என்று எழுதியிருந்தார். இரண்டாமவர் ரொட்டி என்பது ஒரு உணவு என்று குறிப்பிட்டிருந்தார். மூன்றாமவர் - இறைவன் கொடுத்த கொடையே ரொட்டி. நான்காமவர் -ரொட்டி என்பது வேகவைத்த மாவுப் பொருள். ஐந்தமவர் - ரொட்டி என்பது மாவும் நீரும் கலந்த கலப்பு.

ஆறாமவர் - அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப சுவையும் வடிவும் பெறுவது ரொட்டி. ஏழாமவர் - ரொட்டி என்பதற்கு சரியான பொருள் யாருக்குமே தெரியாது என்று குறிப்பிட்டு எழுதியிருந்ததை அரசர் படித்தார்.

எல்லா பதில்களையும் அரசர் படித்து முடிக்கும்வரை பொறுமையுடன் காத்திருந்த முல்லா, "அரசே ! ரொட்டி என்பது என்ன? என்ற எனது சாதாரண கேள்விக்கு, இவர்கள் அனைவரும் பலவிதமான பதில்களைக் கொடுத்துள்ளார்கள்.

யாருடைய பதிலும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகவில்லை பார்த்தீர்களா? இதனால்தான் நம் நாட்டில் உள்ள அறிஞர்கள் குழப்பவாதிகள் என்றேன்" என்றார்.

அரசர் முல்லாவின் அறிவாற்றலை வியந்து அவர்மீது இருந்த குற்றச் சாட்டினைத் தள்ளுபடி செய்தார். அரசவையில் கூடியிருந்த அனைவரும் முல்லாவின் திறமையைப் பாராட்டினார்கள்.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

10.2017 12

- கி.மு. 539 - பாரசீகத்தின் மகா சைரசின் இராணுவம் பாலிலோனைப் பிடித்தது.
- 1492 - கொலம்பஸ் கரிபியனில் பஹாமாசை அடைந்தார். அவர் கிழக்காசியாவைத் தான் அடைந்ததாக எண்ணினார்.
- 1582 - கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெறவில்லை.
- 1654 - நெதர்லாந்தில் டெல்ஃப்ட் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.
- 1785 - ரிச்சார்ட் ஜான்சன் என்பவர் தமிழ்நாட்டின் முதல் செய்திப்பத்திரிகையான மெட்ராஸ் கூரியர் என்ற வார இதழை வெளியிட்டார்.
- 1798 - இலங்கை பிரித்தானியாவின் அரச குடியேற்ற நாடாக (King's Colony) அறிவிக்கப்பட்டது. பிரெடெரிக் நோர்த் ஆளுநராக ஆக்கப்பட்டார்.
- 1899 - தென்னாபிரிக்காவின் போவர் குடியரசு இங்கிலாந்து மீது போரை அறிவித்தது.
- 1915 - முதலாம் உலகப் போர்: கூட்டுப்படைகளை பெல்ஜியத்தில் இருந்து தப்ப உதவியமைக்காக பிரித்தானியத் தாதி எடித் கவெல் என்பவர் ஜேர்மனியர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1918 - மினெசோட்டாவில் கிளம்பிய காட்டுத்தீயினால் 453 பேர் கொல்லப்பட்டனர்.
- 1941 - உக்ரேனின் தினிபுரோபெத்ரோவ்ஸ்க் நகரில் இந்நாளிலும் இதற்கு அடுத்த நாளிலும் நாசி ஜேர்மனியினர் 11,000 யூதர்களைக் கொன்றனர்.
- 1964 - சோவியத் ஒன்றியம் வஸ்கோத் 1 விண்கலத்தை விண்ணுக்கு ஏவியது. இதுவே பல விண்வெளி வீரர்களை விண்ணுக்குக் கொண்டு சென்ற முதலாவது கப்பலாகும்.
- 1976 - மறைந்த மா சே துங்கின் இடத்திற்கு ஹுவா குவோஃபெங்க் என்பவரை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக நியமிப்பதாக மக்கள் சீனக் குடியரசு அறிவித்தது.
- 1986 - மன்னார் அடம்பனில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் முதன் முதலாக சிங்கள இராணுவத்தினர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இத்தாக்குதலில் புலிகளின் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் விக்டர் கொல்லப்பட்டார்.
- 1993 - இந்தியாவின் தேசிய மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்டது.
- 1994 - மகெலன் விண்கலம் வீனஸ் கோளின் வளிமண்டலத்தை அடைந்ததை அடுத்து அதனுடனான தொடர்புகளை நாசா இழந்தது. இது அடுத்தடுத்த நாட்களில் எரிந்து சேதமடைந்தது.
- 1999 - பாகிஸ்தானில் இடம்பெற்ற இரத்தம் சிந்தாப் புரட்சியில் பெர்வேஸ் முஷாரஃப் நவாஸ் ஷெரீப்பை ஆட்சியில் இருந்து அகற்றி நாட்டின் ஜனாதிபதியானார்.
- 1999 - உலகின் மக்கள் தொகை 6 பில்லியனை எட்டியது.
- 2001 - அமைதிக்கான நோபல் பரிசு ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனானுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது.
- 2002 - பாலியில் இரவு விடுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 202 பேர் கொல்லப்பட்டு 300 பேர் காயமடைந்தனர்.
- 2003 - பெலாரசில் மனநோய் வைத்தியசாலை ஒன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் 30 மனநோயாளர் இறந்தனர்.
- 2005 - சீனாவின் இரண்டாவது ஆட்களுடன் கூடிய விண்கலம் சென்ஷோ 6 இரண்டு விண்வெளி வீரர்களுடன் ஏவப்பட்டது.

### பிறப்புகள்

- 1798 - பிரேசிலின் முதலாம் பெட்ரோ (இ. 1834)
- 1811 - தாமஸ் சி. ஜெர்டன், விலங்கியளாளர், தாவரவியளாளர், மருத்துவர் (இ. 1872)
- 1864 -காமினி ராய், வங்காளக் கவிஞர், சமூகப் பணியாளர் (இ. 1933)
- 1921 - ஆர்ட் குலொக்கி, களிமண்ணால் செய்யப்படும் இயங்குபடங்களின் முன்னோடி (இ. 2010)
- 1935 - சிவ்ராஜ் பாட்டீல், இந்திய அரசியல்வாதி
- 1935 - லூசியானோ பாவ்ராட்டி, இத்தாலியப் பாடகர், நடிகர் (இ. 2007)
- 1942 -எஸ். இராமச்சந்திரன், இலங்கையின் மலையக ஓவியர், சிற்பி, எழுத்தாளர் (இ. 2009)
- 1991 - அக்சரா ஹாசன், இந்தியத் திரைப்பட நடிகை
- 1992 - ஜோஷ் ஹட்சர்சன், அமெரிக்க நடிகர்

### இறப்புகள்

- 1845 - எலிசபெத் ஃபிரை, ஆங்கிலேயத் தாதி (பி. 1780)
- 1976 - ராணி சந்திரா, மலையாளத் திரைப்பட நடிகை (பி. 1949)
- 1997 -ஜான் டென்வர், அமெரிக்கப் பாடகர், நடிகர் (பி. 1943)

### சிறப்பு நாள்

- குழந்தைகள் நாள் (பிரேசில்)
- கொலம்பஸ் நாள்
- விடுதலை நாள் (எக்குவடோரியல் கினி 1968)
- உலக பேரழிவு குறைப்பு நாள்



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 100 | 140 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 100 | 120 | 105 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 300 | 380 | 400 | 400 |
| தக்காளி | 200 | 200 | 150 | 180 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 | 80 | 60 | 60 |
| கோவா | 130 | 160 | 90 | 160 | 120 | 120 |
| கரட் | 100 | 200 | 100 | 200 | 160 | 30 |
| பூசணி | 60 | 40 | 40 | 40 | 60 | 60 |
| புடோல் | 80 | 120 | 70 | 80 | 100 | 90 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 80 | 120 | 90 |
| சின்ன வெங்காயம் | 220 | 300 | 250 | 250 | 300 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 75 | 100 | 140 | 110 |
| பாகற்காய் | 300 | 500 | 220 | 280 | 300 | 220 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 60 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 70 | 160 | 90 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 60 | 80 | 100 | 160 | 100 |
| லீக்ஸ் | 130 | 250 | 180 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 60 | 120 | 70 | 80 | 120 | 60 |
| கறிமிளகாய் | 200 | 300 | 240 | 200 | 200 | 280 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 120 | 160 | 160 | 180 |
| போஞ்சி | 160 | 250 | 100 | 180 | 160 | 120 |
| கத்தரித்தம்புள்ள | 120 | 100 | 100 | 140 | 100 | 80 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 30 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 250 | 200 | 220 | 280 | 300 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80-100 | 70 | 75 | 60-80 | 80 |
| இராசவள்ளி | 200 | 450 | 380 | - | - | 350 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 240 | 240 | 220 |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 140 | 35 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 60 | 30 | - | 60 | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டு செய்யும் அடிமை – உனக்கு
சுதந்திர உணர்வோடா?
– மகாகவி பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கைதிகளின் உயிரை எடுத்து சாட்சிகளுக்கு பாதுகாப்பா?

தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் உண்ணா விரதப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

வவுனியாவில் இதுகாறும் நடந்து வந்த குறித்த அரசியல் கைதிகளின் வழக்கு அண்மையில் அநுராதபுர நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது.

வவுனியாவில் நடந்த வழக்கை அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றியதால், தமிழ் அரசியல் கைதிகள் பல்வேறு பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர்.

அதில் மொழி மற்றும் சட்டத்தரணிகளின் உதவி என்பன முக்கியமானவை.

வவுனியா நீதிமன்றில் நடந்த வழக்கை அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றுவதற்குக் கூறப்படுகின்ற காரணம் சாட்சிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதாகும்.

சாட்சிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்றால், யாரால் பாதுகாப்பு இல்லை என்ற கேள்வி எழும்.

தவிர, குறித்த சாட்சிகளுக்கு இதுவரை பாதுகாப்புக் கொடுத்தது யார்? அவ்வாறு பாதுகாப்புக் கொடுத்தவர்கள் இப்போது பாதுகாப்புக் கொடுக்க மறுக்கிறார்களா? என்ற கேள்விகள் எழுவதிலும் நியாயம் உண்டு.

எதுவாயினும் தமிழ் அரசியல் கைதிகளை அநுராதபுரம் சிறைச்சாலைக்குக் கொண்டு போகும்போது அவர்களின் பாதுகாப்புப் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளதல்லவா!

போருக்குப் பின்பு விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

அந்தவகையில் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் அல்லது புலிகள் அமைப்பில் இருந்து தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீண்ட நெடுங்காலமாக விளக்கம் விசாரணையின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கியிருக்க வேண்டும்.

ஒரு புறத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த முக்கிய புள்ளிகளுடன் மிக நெருக்கமான உறவைப் பேணும் இந்த நாட்டின் ஆட்சியாளர்களும் படைத்தரப்பினரும் மறுபுறத்தில் புலிப் போராளிகள் என்ற சந்தேகத்தின் பேரில் அல்லது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் தமிழ் இளைஞர்களை அரசியல் கைதிகளாக சிறைகளில் தடுத்து வைப்பது என்பது அடிப்படை நியாயமற்றது.

இவ்வாறு நீதிக்குப் புறம்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் சாட்சிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற பேரில், வவுனியா நீதிமன்றில் நடந்த வழக்கை அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றி அரசியல்கைதிகளை அவலநிலைக்குத் தள்ளுவது நல்லாட்சிக்கு அழகல்ல.

எனவே தமிழ் அரசியல்கைதிகளின் கோரிக்கைகளுக்கும் அவர்களின் விடுதலைக்கும் அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவற்றைச் செய்யாதபோது தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை அரசு தொடர்ந்தும் முன்னெடுக்கிறது என்ற மனநிலை தமிழ் மக்களின் ஆழ்மனங்களில் பதியவே செய்யும்.

## டெங்குவை ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டம்
## யாழ்.செயலகத்தில் நாளை விசேட கலந்துரையாடல்

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் டெங்கு நோயினால் இன்றுவரை பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளதுடன் பலர்தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சுகாதார அமைச்சின் தரவுகளின்படி கடந்த ஓரிரு வாரங்களில் நாட்டின் வட மாகாணத்தில் டெங்கு நோய் அதிகமாக பரவியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது.

மரண வீதமும் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட வட மாகாணத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்நிலைமையினை கவனத்தில்.கொண்டு ஜனாதிபதி செயலணி, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சுடன் இணைந்து அரசாங்க தகவல் திணைக்களமானது, அனைத்து ஊடக நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு வட மாகாணத்தில் பரவியுள்ள டெங்கு நோயினை ஒழிப்பதற்கான விசேட வேலைத்திட்டமொன்றினை செயற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இத்தேசிய வேலைத் திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பது தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று நாளை வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது. (மு)

## பெற்றோரின் நச்சரிப்பு; விபரீதத்தில் முடிந்தது

(கொழும்பு)

பரீட்சைய்யை முன்னிட்டு வீட்டில் கொடுக்கப்பட்ட அதீத அழுத்தத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத மாணவன் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் காலியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

காலி, பொத்தல பகுதியைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தர மாணவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

காலியின் பிரதான பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுவந்த இந்த மாணவர், நேற்று முன்தினம் மாலை தனது தந்தைக்குச் சொந்தமான அனுமதிபெற்ற துப்பாக்கியால் தலையில் சுட்டுக் கொண்டார்.

கடும் காயங்களுக்குள்ளான மாணவன், உடனடியாக காலி, கராப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனளிக்காது மரணமானார்.

குறித்த மாணவரின் தந்தை ஒரு வர்த்தகரும், தாய் ஒரு ஆசிரியையும் ஆவர். தற்கொலைக்குக் காரணம் பரீட்சையை முன்னிட்டு படிக்குமாறு வீட்டில் கொடுக்கப்பட்ட அழுத்தமே என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (மு)

## பொலிஸ் பொறுப்பதிகாரி கைது

இரத்தோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரத்தோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான கபில திசாநாயக்க என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், உடதும்பரை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிய காலத்தில் குறித்த பகுதி பெண் கிராம அலுவலருடன் பாலியல்ரீதியில் அத்துமீறிய சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக பொலிஸ் விசேட ஆய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

விசாரணையின்போது இவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதுடன், விசாரணை முடிவில் அவர் கைது செய்யப்பட்டார். (மு)

சிகை அலங்கரிப்பு நிலையங்கள்

## தீபாவளியை முன்னிட்டு ஞாயிறு திறந்திருக்கும்

(வவுனியா)

தீபாவளி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்பு நிலையங்கள் அனைத்தும் திறக்கப்படுவதுடன் மறுநாள் 16ஆம் திகதி திங்கட்கிழமையும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் சிகை அலங்கரிப்பு நிலைய கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளதுடன் 18ஆம் திகதி புதன்கிழமை தீபாவளி தினத்தன்று வவுனியா மாவட்ட அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களும் மூடப்பட்டிருக்கும் எனவும் தொடர்ந்து 19ஆம் திகதிக்கு பின்னர் வவுனியா மாவட்ட அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களும் வழமைபோன்று இரவு 9 மணிக்கு மூடப்படுமெனவும் வவு னியா மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (மு)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி வித்தியாலயம்

மோ.சதோஸ்-164, ம.தனுஷான்-159, ஜெ.யுசந்திகா- 156

நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம

ஜெ.அனுசியா-156

இம்மாணவர்கள் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி இந்து அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)


## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பொரியிடும் நிகழ்ச்சி**

மணமக்களை அக்னி குண்டத்தின் எதிரே அமரச் செய்து நமசிவாய மந்திரத்தை ஓதி அக்னி குண்டத்தில் மறுபடியும் தீயை வளர்த்து மைத்துனரை அருகே அமர்த்திக் கொண்டு மைத்துனரிடம் இருந்து மணமகள் பொரியை வாங்கி மணமகனிடம் கொடுக்க மணமகன் அப் பொரியை தீயில் ஆகுதி செய்யவேண்டும். (தொடரும்)

## சத்திய தரிசனம்



### மனநிறைவு அடையுங்கள்

❖ பிறரிடம் எந்த பிரதிபலனும் எதிர்பார்க்காமல் அன்பு கொண்டு வாழுங்கள். சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு ஆகியவை பக்திக்கு நான்கு கால்கள் போன்றவை. சத்தியத்தை வாக்கிலும், தர்மத்தை செயலிலும் கடைப்பிடியுங்கள்.

❖ அகிம்சை என்றால் பிற உயிர்களுக்குத் துன்பம் தராமல் வாழ்வது மட்டுமல்ல. அவைகளிடம் அன்பு காட்டியும் வாழ்வதாகும்.

❖ அன்பையும் சத்தியத்தையும் எவனொருவன் கடைப்பிடிக்கிறானோ அவன் மனதில் சாந்தி நிலவும். அவனிருக்கும் இடமே தெய்வீகமான சூழ்நிலையை உண்டாக்கும்.

❖ எவ்வளவுக்கு எவ்வளவு ஆசை நம் மனதை விட்டு அகலுகின்றதோ, அந்த அளவுக்கு மனத்தெளிவு உண்டாகும். சுமை குறைந்தால் பயணம் சுகமாக இருக்கும். இது ரயில் பயணத்திற்கு மட்டுமல்ல. வாழ்க்கை பயணத்திற்கும் தான்.

❖ நாம் இப்போது இருக்கும் நிலையே நல்ல நிலைதான் என்று எண்ணத் தொடங்கினால் வாழ்வில் மனநிறைவும், திருப்தியும் உண்டாகும். அவ்வாறு இல்லாமல் இன்னும் வேண்டும் என்று ஆசையைப் பெருக்கிக் கொண்டே போனால் நிம்மதி தொலைந்து போகும்.




குறத்தியை கூட்டி வரச் சொன்னாள்.

உண்மையில் குறத்தியாக வந்திருந்தது அவள் மனம் கவர்ந்த ஸ்ரீநிவாசனே. அது தெரியாமல் அந்தப் பேதை வரப்போகும் குறத்தி என்ன குறி சொல்லப் போகிறாளோ என படபடப்புடன் காத்திருந்தாள்.

அன்னைவகுளாதேவி ஆகாசராஜ மன்ன னின் அரண்மனையை அடையும்முன் தன் உள்ளம் கவர்ந்த கன்னியை ஒரு முறை கண்டு செல்லவேண்டும் என்னும் ஆவலில் குறத்தி வேடம் தரித்து வந்திருந்தான் ஸ்ரீநிவாசன். (தொடரும்)

## உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

சுய மார்பக பரிசோதனையை பெண்கள் செய்வதன்மூலம் மார்பக புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து கொள்ளமுடியும். இருபது வயதிற்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களும் இப்பரிசோதனையை தம் வீடுகளிலிருந்தே செய்து கொள்ள முடியும்.

தகவல் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்ப்பாணம் மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெகநாதன் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி புத்தூர் கலைமதி - ஆவரங்கால் இந்து பலப்பரீட்சை


புத்தூர் கலைமதி


வாகீசன்


ஆவரங்கால் இந்து இளைஞர்


நிதர்சன்

விறுவிறுப்பான அரையிறுதியில் ஆவரங்கால் மத்தியை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது புத்தூர் கலைமதி. மற்றொரு அரையிறுதியில் நாயன்மார்கட்டு பாரதியை இலகுவாக வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம்.

அமரர் முத்துலிங்கம் ஜெகநாதன் ஞாபகார்த்தமாக ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடத்திவரும் மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த திங்கட்கிழமை மின்னொளியில் சிறப்பாக நடந்தேறியது.

முதலாவது அரையிறுதியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் எதிர் புத்தூர் க்லைமதி விளையாட்டுக்கழகமும் மோதியது.

ரசிகர்கள் கரவொலியுடன் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் இரு செற்களை 32:30 , 25:18 என புத்தூர் கலைமதி அணியும் அடுத்த இரு செற்களை 25:21 , 25:22 என ஆவரங்கால் மத்தி அணியும் கைப்பற்றின.

இதனால் வெற்றியை தீர்மானிக்கின்ற இறுதி செற்றில் இரு அணிகளும் கடும் போட்டி போட்டுக்கொண்டு விளையாடின. 15 புள்ளிகளை கொண்ட இறுதி செற்றில் 23:21 என்ற புள்ளிவரை விறுவிறுப்பாக சென்று திரில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம்.

நூலிழையில் இறுதிக்கு செல்லும் வாய்ப்பை இழந்து வெளியேறியது ஆவரங்கால் மத்தி. போட்டியின் நாயகனாக வாகீசன் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் எதிர் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுகழகமும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25:20 , 25:17 , 25:23 என்ற நேர் செற்களில் இலகுவாக வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக நிதர்சன் தெரிவாகினார். மாபெரும் இறுதியாட்டம் எதிர்வரும் சனிக்கிழமை 7 மணிக்கு நடைபெறும்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# காளிஅம்பாள் நடத்தும் மாபெரும் தாச்சிப் போட்டி

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் தாவடி காளி அம்பாள் விளையாட்டு கழகம் நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி ஆரம்பமாகி எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இன்றிரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் புவனேஷ்வரி அம்பாள் அணியை எதிர்த்து உதயசூரியன் அணி விளையாடவுள்ளது.

தொடர்ந்து 8 மணிக்கு சாந்தை விநாயகர் A அணியினை எதிர்த்து சரஸ்வதி நாவற்குழி அணி விளையாடவுள்ளதுஎனகாளிகாம்பாள்விளையாட்டுத் தலைவர் தெரிவித்துள்ளார்.



கோல்ட்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய தற்பரன் ஞாபகார்த்த மென்பந்து சுற்றுப்போட்டியில் ஞானவைரவர் விளையாட்டுக்கழகம் முரசொலி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி கிண்ணம் வென்றது.

# அராலி அண்ணாவின் கிண்ணம் ஊரெழு றோயல் வசமானது



அராலி அண்ணா வி.கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டி அண்மையில் நடைபெற்றது. ஊரெழு றோயல் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதியது.

இதில் 1:0 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றியது.



நடைபெற்று முடிந்த பாடசாலைகளுக்கிடையிலான தேசிய விளையாட்டுப்போட்டியில் பாசையூர் சென்.அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்கப் பெண்கள் பாடசாலை அணி 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பளு தூக்கல் போட்டியில் 2 தங்கம்,மூன்று வெண்கலப் பதக்கங்களையும் 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் இரண்டு வெண்கலப்பதக்கங்களையும் வென்று மொத்தமாக 7 பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களு டன் பொறுப்பாசிரியர்கள் நிற்பதைப் படங்களில் காணலாம். (107)

# ஊரெழு றோயலை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு சென்றது திக்கம்



மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்ட சுற்றுத்தொடரில் கடந்த திங்கட்கிழமை அன்று இடம்பெற்ற லீக் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் திக்கம் அணியும் மோதிக் கொண்டன.

அணியினருக்கு மட்டுமன்றி பார்வையாளர்களின் மத்தியிலும் பெரும் எதிர்பார்ப்பினை ஏற்படுத்திய இப்போட்டியில் திக்கம் அணியினர் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி தமது அடுத்த சுற்றினை உறுதிப்படுத்தினர்.

திக்கம் அணியினர் சார்பாக சிறப்பாக விளையாடிய அரி, பிரகலாதன் ஆகியோர் முறையே இரு கோல்களையும் அகிலதீபன் ஒரு கோலினையும் பெற்றனர். அத்துடன் நீண்ட காலத்தின் பின் அணியில் இணைந்து கொண்ட கோல் காப்பாளர் ஜினோசனின் அபாரமான பல தடுப்புக்கள் அணியின் வெற்றிக்கு உறுதுணையாக அமைந்தது.




மன்னார் பள்ளிமுனை புனித லூசியா மகா வித்தியாலயத்தின் 16 வயதுக்கு உட்பட்ட பிரிவில் தேசிய ரீதியில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் மன்னார் சென். லூசியா, கொழும்பு சென். ஹென்றி அணியை 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி கொண்டு முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்கால வரைபு தொடர்பில் யாழ்.பல்கலையில் கலந்துரையாடல்



புதிய அரசியல் அமைப்பின் இடைக்கால வரைபு தொடர்பான ஓர் திறந்த கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடல் நிகழ்வில் பேச்சாளர்களாக கலாநிதி கே.ரி.கணேசலிங்கம், கலாநிதி சிவசுப்பிரமணியம் ரகுராம், கலாநிதி குமார வடிவேல் குருபரன் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கவுரைகளை வழங்கினர்.

இதில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்பட பல்கலை சமூகத்தினர் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (மு-9)

## ரயில் சாரதிகள்...

இந்த விடயம் ஏதொடர்பில் பிரதமரின் ஆலோசகர் தடல்லகேவுடன் நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரையாடல் தோல்வியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கைக்கு தாமும் ஒத்துழைப்பு வழங்குவதாக ரயில்வே பாதுகாப்பு ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து நேற்றிரவு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் தமது கடமைகளை முடித்து வந்த பயணிகள் பெரும் அதிர்ச்சியடைந்ததுடன் பெரும் களேபரத்திலும் ஈடுபட்டனர்.

## சம்பந்தன் தன்...

வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமது வழக்குகளை அநுராதபுரத்தில் இருந்து வவுனியாவுக்கு மீண்டும் மாற்ற வேண்டும் என்று கடந்த 18 நாட்களாக உண்ணாவிரதம் இருக்கும் மூன்று அரசியல் கைதிகளின் நிலைமை மிகவும் பாரதூரமான நிலையை அடைந்துள்ளது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் நாடாளுமன்ற தமிழ் அமைச்சர்களும் இது ச்ம்பந்தமான அறிக்கைகளை வெளியிடுவதில் அவரவர்களுக்கிடையே மோதிக் கொள்கின்றார்கள்.

மக்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டும் என்றால் இவர்கள் நாடாளுமன்றக் கதிரையில் அமர்ந்து சுகபோகங்களை அனுபவிப்பதில் என்ன பயன்? இதனையே தீர்க்க முடியாத இவர்கள், தமிழ் மக்களின் உரிமைகளை எப்படிப் பெற்றுக் கொடுப்பார்கள் ஏன்பது தெரியவில்லை. உண்ணாவிரதம் இருப்பவர்களுக்கு ஏதும் ஆபத்து நடந்தால் முழுப் பொறுப்பையும் இவர்களே ஏற்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (மு)

## மாணவர் ஒன்றியம்...

பூர்வமான கோரிக்கைகளை ஏற்று அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று கோரி கடந்த 04.10.2017 அன்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாகிய நாம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டு இருந்தோம்.

இதற்கு உரிய தரப்பினர் அது தொடர்பாக கவனம் செலுத்தி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே அந்த மூன்று அரசியல் கைதிகளின் மோசமடைந்து வரும் உடல் நிலையை கருத்தில் கொண்டு அவர்களது நியாயபூர்வமான கோரிக்கைகள் உடனடியாக தீர்க் கப்பட வேண்டும் என்று கோரி நாளை (வெள்ளிக்கிழமை) அன்று வடக்கு கிழக்கு மாகாணம் தழுவிய பூரண கதவடைப்புக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாகிய நாம் தமிழ் மக்களிடம் அழைப்பு விடுக்கின்றோம்.

இப்போராட்டத்துக்கு அனைத்து வர்த்தக சங்கங்கள், பாடசாலைகள், சிவில் சமூக அமைப்புக்கள், அரச நிறுவனங்கள், ஏனைய தனியார் நிறுவனங்கள் அனைத்தும் பூரண ஆதரவையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் இது சம்பந்தமாக உடனடியாக உரிய தரப்பு நடவடிக்கையை மேற்கொள்ளாதவிடத்து இப்போராட்டத்தை தொடர்ச்சியாக வேறு வடிவங்களில் மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றுள்ளது. (மு)

## வடக்கில் காணி...

பாட்டில் உள்ள காணிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையிலும் சமீபத்தில் பேசப்பட்டது.

யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படாமல் இருந்து வருவதாக குறை தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இது குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

இதேவேளை இராணுவப் பேச்சாளர் ரொசான் செனவிரத்ன கருத்துத் தெரிவிக்கையில்,

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் தொடர்பில் இரண்டு வருடங்களிற்குள் முடிவிற்கு கொண்டுவருவதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நிலைமைகளை கருத்தில் கொண்டு இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (மு)

## ஐ.நா விசேட...

அவர்களின் ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை அரசாங்கங்கள் பின்பற்ற வேண்டிய கடப்பாடில்லை.

அரசாங்கங்களுக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள விசேட அறிக்கையாளர்களின் நிபுணத்துவ அறிவையும், அனுபவத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். நிறுவன ரீதியான திறனை கட்டியெழுப்பல், கொள்கை உருவாக்கம் முதலியனவற்றிற்கு நலன் வழங்கும் பாங்கொன்றில் அவர்களது ஆலோசனையும் நிபுணத்துவமும் தேவையென அரசாங்கம் கருதுமிடத்து அவற்றைப் பயன்படுத்தப்படலாம் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் 13 நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்து பலதரப்பு சந்திப்புக்களையும் மேற்கொண்டு வரும் நிலையில் அரசின் மேற்படி அறிவிப்பு வந்துள்ளது. (மு)

## சட்டமா அதிபர்...

திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களுக்கு எதிராக வழக்குகளை தொடருமாறும் அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சிறையில் உள்ள தமிழ் கைதிகள் தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வந்தாரா என்பது தொடர்பில் ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன பதிலளித்தார்.

இதன்போது அமைச்சர் ராஜித, 15 வருட காலத்திற்கு மேலாக தமிழ்க் கைதிகள் வெறுமனே சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வாழ்க்கையின் அரைவாசி காலப்பகுதி வீண்விரயமாக்கப்படுகின்றது. இவர்களை விடுவிக்க வேண்டுமென்று நானும் பலமுறை தெரிவித்துள்ளேன். குற்றமற்றவர்களை தடுத்துவைத்தல் நியாய மற்றதாகும்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டதாக தகவல் இல்லை. புனர்வாழ் வளிக்கப்பட்ட புலிகளின் மகளிர் தலைவி தமிழினி எழுதிய நூலினை படித்தால் பலவற்றை நாம் புரிந்துகொள்ள முடியும் என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (மு)

# காங்கேசன்துறையில் 153 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது



(யாழ்ப்பாணம்)

யாழ் காங்கேசன்துறை மயிலிட்டி கடற்பரப்பில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட பொதியிலிருந்து 153 கிலோ கேரள கஞ்சா நேற்று இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மயிலிட்டி கடற்பரப்புக்கு உட்பட்ட பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் பொதி ஒன்று காணப்படுவதாக தகவல் அறிந்த கடற்படையினர் அவ்விடத்துக்கு சென்று நேற்று மாலை குறித்த பொதியை சோதனைக்குட்படுத்தினர்

அப்போது குறித்த பொதியிலிருந்து 153.2 கிலோ கேரள கஞ்சாவை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த பொதியை கடத்திவந்த நபர்கள் கடற்படையினர் வருகையை அறிந்து அதை கைவிட்டு சென்றிருக்கலாம் என கடற் படையினர் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவை கடற்படையினர் யாழ்.காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (மு-9,60)

# ஆனையிறவில் விபத்து இருவர் காயம்



கிளிநொச்சியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை ஆனையிறவு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த அரைச் சொகுசு பேருந்தே விபத்தில் சிக்கியுள்ளது. இதன்போது பேருந்தில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர்.

வேக கட்டுப்பாட்டை இழந்து குறித்த பேருந்து வீதியில் அமைந்திருந்த பாலத்துடன் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு)

## மூவாயிரம்...

மாற்றப்படவுள்ளனர். இவர்களுள், உயர்தர ஆசிரியர்களாகப் பணியாற்றும் சுமார் மூவாயிரம் ஆசிரியர்களே இன்று தொடக்கம் இடமாற்றப்படவுள்ளனர்.

இவர்களுக்கான இடமாற்றல் உத்தரவுப் பத்திரங்கள் இன்று குறித்த பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்படும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இந்தக் கொள்கை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (மு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி ம.உ ஆணை...

பெண்ணை மிரட்டியுள்ள சம்பவம் ஒன்று மன்னார் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் மன்னார் பாலியாறு வெள்ளாங்குளம் பகுதியை சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான ரகுராமன் யோகராசா (வயது 42) என்பவரே உயிரிழந்தவராவர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில்,

கடந்த செப்டம்பர் மாதம் 9 ஆம் திகதி கூலி வேலைக்கு சென்ற குறித்த குடும்பஸ்தர் இரவு துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பியுள்ளார். பாலியாறு பகுதியில் அவரின் பின்னால் வந்த உழவு இயந்திரம் ஒன்று அவரை மோதித்தள்ளியதுடன் அவரின் மேல உழவு இயந்திரத்தின் சக்கரம் ஏறிச் சென்றுள்ளது.

குறித்த சாரதி அவ்விடத்தில் நிறுத்தாமல் நேரடியாக இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்துக்கு சென்று சரணடைந்துள்ளார்.

இந்த நிலையில் படுகாயம் அடைந்து இரத்த வெள்ளத்தில் இருந்த குறித்த நபரை வீதியில் சென்றவர்கள் உடனடியாக மீட்டு முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதித்தனர். மேலதிக சிகிச்சைக்காக அடுத்த நாள் கடந்த பத்தாம் திகதி யாழ் போதனா வைத்தியசாலையில் குறித்த நபர் அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் விபத்து இடம்பெற்று 20 நாட்கள் கடந்த நிலையிலும் இலுப்பைகடவை பொலிஸார் குறித்த விபத்துக்குள்ளான நபரை விசாரணைக்கு அழைக்கவில்லை என தெரிவித்து, அவருடைய மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தார்.

அதாவது தனக்கு 5 சிறிய பிள்ளைகள் இருப்பதாகவும் கணவரின் உழைப்பிலேயே தாம் வாழ்க்கை நடத்தி வந்ததாகவும் இதற்கான இழப்பீட்டை பெற்று தர வேண்டும் என கோரி தனது முறைப்பாட்டை பதிவு செய்திருந்தார்.

இந்த நிலையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாட்டை தெரிவித்ததை அறிந்த இலுப்பைக்கடவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விபத்து நடந்து 20 நாட்களின் பின்னர் அந்த பெண்ணை அழைத்து மிரட்டியுள்ளார்.

தமக்கு எதிராக கொடுத்த முறைப்பாட்டை மீள பெற வேண்டும். இழப்பீடு 25 ஆயிரம் பெற்று தருவதாக இருந்தோம். நீ எமக்கு எதிராக முறைப்பாடு செய்த காரணத்தினால் அந்தப் பணமும் இனி இல்லை என கடுமையான தொனியில் எச்சரித்துள்ளார்.

இருப்பினும் குறித்த பெண் தனது முறைப்பாட்டை மீள பெறவில்லை. இந்த நிலையில் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி குறித்த பெண்ணின் கணவர் யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். அந்த நேரம் மரண விசாரணையின் போதே மேற்படி விடயத்தை இறந்தவரின் மனைவி தெரிவித்தார்.

தற்போது தனது கணவனை இழந்த நிலையில் பொலிஸாரின் மிரட்டலுக்குள் எவ்வாறு தான் வாழ்வது ஐந்து பிள்ளைகளையும் எப்படி பாதுகாப்பது எமக்கு உதவுவதற்கு யார் முன்வருவார்கள் என கதறிய சம்பவம் அங்கிருந்தவர்களை கண்கலங்க வைத்தது.(மு-9)

## வடக்கில் நாளை...

இந்த அழைப்பினை இலங்கை ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், அகில இலங்கை சைவ மகாசபை, வடக்கு மாகாண புதிய அதிபர் சங்கம், சமூக விஞ்ஞான ஆய்வு மன்றம், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, வலி வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக்குழு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், தமிழ் மக்கள் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், யாழ்.பொறியியலாளர் சங்கம், ஐக்கிய சோசலிச கட்சி, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி, தமிழ் சிவில் சமூக அமையம், தமிழ் மக்கள் பேரவை ஆகிய இருபதுக்கும் மேற்பட்ட பொது அமைப்புகள் இணைந்து விடுத்துள்ளன.

கதவடைப்பு அழைப்புத் தொடர்பில் மேற்படி அமைப்புகள் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசிய இனத்தின் பிறப்புரிமைகளை உறுதிப்படுத்துவதற்காகத் தங்களது வாழ்வை அர்ப்பணித்துப் போராடியவர்கள் உட்படப் பலர் அரசியற் கைதிகளாகச் சிறைகளில் தொடர்ந்தும் அடைக்கப்பட்டிருப்பதனைக் கண்டிக்க வேண்டியதும், அவர்களது விடுதலையை வலியுறுத்திப் போராட வேண்டியதும் ஒவ்வொரு தமிழ் மக்களதும் ஒவ்வொரு தமிழ் மகனதும் தார்மீகப் பொறுப்பும் வாழ்வுக் கடமையும் ஆகிவிட்டது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பு என்பது, தற்போது ஒரு சட்டரீதியான விடயம் என்பதைக் கடந்துவிட்டது. அது நியாயத்தின் அடிப்படையில் அணுகப்பட வேண்டிய ஓர் விடயமாக ஆகிவிட்டது. அத்தோடு - ஓர் அரசியல் தீர்மானத்தின் ஊடாகத் தீர்க்கப்பட வேண்டிய அடிப்படையான பிரச்சினைகளுள் ஒன்று என்ற பரிமாணத்தையும் அடைந்துவிட்டது.

போரின் இறுதிநாள்வரை ஆயுதங்கள் தாங்கிப் போராடிய பல மூத்த போராளிகள் உட்பட 12ஆயிரம் முன்னாள் விடுதலைப் புலிகளை, குறுகிய காலத் தடுப்பிற்குப் பிறகு, மீளவும் சமூகத்துடன் இணைய வழிவகை செய்த ஓர் அரச பொறிமுறையானது, வெறும் 132 பேர்களை மட்டும் தொடர்ந்தும் சிறைகளில் அடைத்திருப்பதானது எவ்வித சட்ட அர்த்தமும் இல்லாத ஓர் செயற்பாடு ஆகும். தமிழர்களுடன் தொடர்பில்லாத அரசியற் காரணங்களினாலேயே அவர்கள் தொடர்ந்தும் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது வெளிப்படையானது.

எமது பிரதிநிதிகளின் இந்த அலட்சியப் போக்கினதும், உதாசீனத்தினதும், அக்கறையின்மையினதும் விளைவாக - தான்தோன்றித்தனமாகச் செயற்படும் இந்த நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களம், தமிழ் பிரதேச நீதிமன்றங்களில் உள்ள எமது அரசியற் கைதிகளின் வழக்குகளை, சிங்களப் பிரதேசங்களுக்கு மாற்றுகின்றது. அவர்களுக்கு எதிரான சாட்சிகளுக்குப் பாதுகாப்புப் பிரச்சினை என்று சினமூட்டும் காரணங்களை அடுக்குகின்றது. அத்தோடு - வழக்குகளைத் துரிதமாக நடத்தி முடிக்காமல் வேண்டுமென்றே இழுத்தடிக்கின்றது.

இதன் காரணமாக - தமக்கான அடிப்படை நீதியைக் கோரி தமிழ் அரசியற் கைதிகள் மூவர், கடந்த 16 நாட்களாக உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். தங்களது வழக்குகளை மீண்டும் தமிழ் பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்றுவதுடன், தமது வழக்குகளை துரிதமாக நடத்தி முடிக்க வேண்டும் என்பதுவே அவர்களது உடனடிக் கோரிக்கையாக உள்ளது.

அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தி எமது அதிகூடிய வல்லமைக்கு உட்பட்ட எமது அழுத்தத்தை நாம் ஒவ்வொருவரும் ஒன்றாய் திரண்டு பிரயோகிப்போம். எவர் கைவிட்டாலும் அவர்களை நாம் கைவிடமாட்டோம் என்ற தகவலைச் சொல்லுவோம்.

(1) தமது வழக்குகளை மீண்டும் தமிழ் பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற உடனடிக் கோரிக்கையையும், அவ்வாறு மாற்றப்பட்டதன் பின்பு, தமது வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிவு காண வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து, அநுராதபுரம் சிறையில் சாகும் வரை உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகள் மூவரின் கோரிக்கைகளை இழுத்தடிப்பின்றி உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தியும்,

(2) முழுத் தமிழ் அரசியற் கைதிகளையும் ஓர் அரசி யற் தீர்மானத்தினூடாக விடுவிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியும்,

(3) அசமந்தப் போக்கைக் கைவிட்டும் - மழுப்பல் பதில்களை வழங்காமலும் - அனைத்து தமிழ் அரசியற் கைதிகளையும் விடுவிப்பதற்கான நேரடி அழுத்தத்தினை அரசாங்கத்தின் மீது பிரயோகிக்குமாறு எமது நாடாளுமன்றப் பிரதிநிதிகளை வற்புறுத்தியும்,

எதிர்வரும் 13.10.2017 வெள்ளிக்கிழமை வடமாகாணம் தழுவிய முழுமையான கதவடைப்பினை மேற்கொள்வதற்கு அனைத்து தமிழ் மக்களையும் நாம் உரிமையோடு அழைக்கின்றோம். அவசர மருத்துவ சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்துச் செயற்பாடுகளையும் முழுமனதோடு நிறுத்தி - நியாயத்தோடும் சாவோடும் போராடுகின்ற தமிழ் அரசியற் கைதிகளுக்கு எமது ஆத்ம பலத்தைக் கொடுப்போம்.

தமிழ் அரசியற் கைதிகளுக்கு நிரந்தர விடுதலை கிடைக்கும் வரை நாம் ஓயமாட்டோம் என்ற செய்தியை - இந்த நாட்டின் அரசாங்கத்திற்கும் எமது நாடாளுமன்றப் பிரதி நிதிகளுக்கும் இதன் பொறுப்புடைய ஒவ்வொரு தரப்புக்கும் உறுதியாகத் தெரிவிக்க எதிர்வரும் 13.10.2017 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக ஒன்றாகத் திரள்வோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மு-4-9)


மாதம் 50,000/- வருமானத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு
McDonald's
அரச அங்கீகாரம் பெற்ற Trans Gulf (Pvt) Ltd. (பதிவு இல. 0742) ஊடாக
மிகக் குறைந்த கட்டணத்துடன் நம்பகமான பயண ஏற்பாடு
SIKARAM JOB BANK
0777 324 004
(C-9965)

தேவை
வட்டுக்கோட்டை, மூளாய் பிரதேசங்களுக்கு கட்ட இடிபாடுகள் தேவை.
தொடர்புகளுக்கு:
077 214 7778
(C-9966)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
UK - 550/= (C-9918)
CANADA - 400/= மட்டுமே
V2 TRAVELS - 0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

நடமாடும் மிருகவைத்திய சேவை
சுன்னாகத்துக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும். Dr.K.கிருபாகரன் 0779738802
முருகேச பண்டிதர் வீதி, சுன்னாகம்.
(843)

கடை விற்பனைக்கு
தட்டாதெருச் சந்திக்கும் மனோகராச் சந்திக்கும் இடையில் மேல் மாடியுடன் சேர்ந்த கடை (1/2 பரப்புக்கு சற்றுக் குறைவு) K.K.S. வீதியில் விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவையில்லை.
தொடர்புகளுக்கு
T.P:077 603 8263
(994)

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
0768226243

2016 ம் ஆண்டுக்கான 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளனர்
மு.பானுதரன் - நெல்லியடி
அமெரிக்க விசா வெற்றியாளர்
(C-9942)
யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 | சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
சேவை நலன் பாராட்டுதல்
ஓய்வு பெறும் ஆங்கில ஆசிரியை
செல்வி நாகரத்தினம் யசோதா
சேவை விபரம்
2001 - 2005 - பகுதி நேரம்
2005 - 2017 - நிரந்தரம் முழு நேரம்
சுகவை அநுபதில் - இன்று ஆசிரிய சேவையில் நிறைவு காணும் மணி விழா நாயகியை
பல்லாண்டு காலம் வாழ்கவென உளம் மகிழ வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
(996)


## மரண அறிவித்தல்



திருமதி
**வசந்தி இராஜேந்திரம் (ராகினி)**

யாழ். வடலியடைப்பு பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மன் சாசன்பேர்க் (Sassenberg) ஐ வதிவிடமாகவும் கொண்ட வசந்தி இராஜேந்திரம் (ராகினி) அவர்கள் கடந்த 10.10.2017 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலசிங்கம்-தவனேஸ்வரி (ராணி) தம்பதிகளின் அன்பு மகளும், திரு.திருமதி இராஜேந்திரம் தம்பதிகளின் அன்பு மருமகளும், பவா (இராஜேந்திரம்) அவர்களின் அருமை மனைவியும், யாகுலன், பிரியந்தன், தளிர்னாவின் பாசமிகு தாயாரும், ரஞ்சினி (பாப்பா- இலங்கை), சாந்தினி (சிவா- ஜேர்மனி), மாலினி (மாலா- சுவீடன்), சிறீ (நோர்வே), திலீபன் (சுவீடன்), ரமேஷ் (சின்னக்கிளி- ஜேர்மனி) ஆகியோரின் ஆசைச்சகோதரியும், செல்லா (பரீஸ்), காலஞ்சென்ற பாலா (கொலன்ட்), பாபு (பரீஸ்), பவி (லண்டன்), பேபி (கனடா), கண்ணன் (கனடா), ரமணன் (பரீஸ்), நந்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2017) வியாழக்கிழமை 9 மணியளவில் Greffener Str. 2, 48361 Beelen, Germany என்னும் இடத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

46/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (சி-9971)
தகவல் : சிவானந்தன் றஞ்சினி (பாப்பா)
சி.அனுசாந் (பெறாமகன்)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org